
# சிறுவர் செந்தமிழ் வாசகம்

## மூன்றாம் படிவம்—பொதுப்பகுதி

(புதிய எட்டாம் வகுப்பு)










...டட் பப்ளிஷர்ஸ்
...ளம் : திருச்சி.

# சிறுவர் செந்தமிழ் வாசகம்

## மூன்றும் படிவம்—பொதுப் பகுதி

( புதிய எட்டாம் வகுப்பிற்குரியது )



★

ஆக்கியோர் :

வித்துவான் V. நரசிம்மையர், M. A.,
(ஓய்வு பெற்ற) தமிழ் விரிவுரையாளர்,
சீதாலக்ஷ்மி ராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

வித்துவான் V. P. குழந்தைவேற் சோழகர்,
தமிழாசிரியர்,
அர்ச், சூசையப்பர் உயர் நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

Approved by the Madras Text-book Committee for class use
(Vide Fort St. George Gazette Page 3 dated 16—5—'62)

யுனைட்டெட் பப்ளிஷர்ஸ்

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி-2.

பதிப்புரிமை] 1965 [விலை ரூ. 1-25

முதற் பதிப்பு—1955
திருத்திய பதிப்பு—1956
மறு பதிப்பு—1957
நான்காம் பதிப்பு—1959, 1961, 1963, 1965.

## முன்னுரை

அண்மையில் அரசியலாரால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்திற் கிணங்க எழுதப்பட்டுள்ள சிறுவர் செந்தமிழ் வாசகம் என்னும் இப்புத்தகம் மூன்றும் படிவம்—பொதுப் பகுதிக்கு உரியதாகும்.

இதனுள் புதிய கருத்துக்கள் அமைந்த பல பாடங்கள் மாணவர் கருத்தைக் கவரும் வண்ணமும், இனிய தெள்ளிய தமிழ் நடையிலும் எழுதப்பட்டுள்ளன. பொது அறிவுப்பயிற்சி, இலக்கணப் பயிற்சி முதலியன ஒவ்வொரு பாடத்தினிறுதியிலும் போதிய அளவு சேர்க்கப்பட்டுள்ளன.

நந்தமிழுலகம் இதனை ஏற்று எம்மை ஆத
கும் என்று நம்புகின்றோம்.

ஆசிரியர்கள்.



ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2. (போன் : 2416.)

# பொருளடக்கம்



## செய்யுட் பகுதி

# தேசீய கீதம்

---

ஜன கண மன அதிநாயக ஜயஹே!
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

---

# நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை
நிர்ணயிக்கிற நீதான்.
மக்கள் எல்லாருடைய மனத்திலும்
ஆட்சி செலுத்துகிறாய்.
நின் திருநாமம், பஞ்சாபையும்,
சிந்துவையும்,
குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும்,
வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில்
எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப
நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால்
ஜபிக்கப்படுகிறது;
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை
நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

# 1. காவிரிப்பூம்பட்டினம்

"மேதக்க சோழவளநாடு சோறுடைத்து" என **ஔவையாரால்** சிறப்பித்துக் கூறப்பட்ட சோழ நாட்டை, முன் ஆண்டவர் சோழர் குடியில் தோன்றிய அரசராவர். அவர்கள் அந்நாட்டின் மாட்சியோடு ஆட்சி செலுத்தித் தங்கிய தலை நகரங்கள் பல. அவையாவன **காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர், காஞ்சீபுரம்** முதலியனவாம். அவற்றுள் பகை, பிணி, பஞ்சம் என்பனவற்றை அறியாததும், பழமை வாய்ந்ததும், பாவலரால் பாராட்டப்பட்ட சிறப்பினைக் கொண்டதும் ஆகிய நகரம் காவிரிப்பூம் பட்டினமேயாகும்.

இந்நகர் காவிரியாறு கடலோடு கலக்கும் சங்கமுகத்துறையில் அமைந்திருந்ததால், **காவிரிப்பூம்பட்டினம்** எனப் பெயர்பெற்றது. இதன் காவலைக் கண்டு அஞ்சிப் பகைவர் எவரும் இதனுள் வந்து புகார் ஆதலின், **புகார்** எனவும் இதனைக் கூறுவர். நாவலந் தீவின் காவல் தெய்வமாகிய சம்பு என்பாள் இந்நகரில் வந்து தங்கினமையால் **சம்பாபதி** எனவும், **ககந்தன்** என்னும் அரசன் இதனை ஆட்சி செய்து வந்தமையால் **காகந்தி** எனவும், வேறு இரண்டு பெயர்களும் இதற்குண்டு. பட்டினம் என்

பது கடற்கரையின் அருகில் உள்ள பெரிய ஊர் களின் பெயராகும். அதனை நாகப்பட்டினம், சென் னைப்பட்டினம் என வழங்குதலால் நாம் அறிய லாம். தமிழ்நாட்டில் இக்காலத்தில் பட்டினம் என்ருல் சென்னைப்பட்டினத்தை குறித்தலை அறி கின்ருேம். அதுபோல அக்காலத்தில் பட்டினம் என்ருல் காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்தது என்பதனை நூல்களால் அறிகின்ருேம். இப்பட்டி னத்தின் சிறப்பைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்கள் அறிவிக்கின்றன.

இந்நகரம் கரிகாற் சோழன் காலத்தில் பெருஞ் சிறப்பை அடைந்திருந்தது. அச்சோழன் செங் கோலினனுக ஆண்டுவந்தான். அவனுக்கு அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், சாரணர் என்னும் ஐம்பெருங் குழுவினரும் அரசிய லுக்கு உறுதுணையாய் இருந்தனர். இவர்களே யல்லாமல் எண்பேராயத்தவர்களும் மன்னனுக்கு உதவியாய் இருந்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் தமிழ் நாட்டில் தலை சிறந்த துறைமுகப் பட்டினங்களுள் ஒன்ருக விளங்கியது. இங்கு இறக்குமதியான பொருள் களும், ஏற்றுமதிக்கான பொருள்களும் கரிகால னது ஏவலர்களால் புலி முத்திரை இடப்பட்டு குன்றுகளைப் போலக் காட்சியளித்தன. இத் தகைய பெருமை வாய்ந்த புகார் அகநகர், புறநகர் என இருபிரிவினை உடையது. அகநகர் பட்டினப் பாக்கம் எனவும், புறநகர் மருவூர்ப் பாக்கம் எனவும் வழங்கப் பெறும்.

பட்டினப்பாக்கத்திலே அரச வீதியும், தேரோடும் வீதியும், பெரிய கடைவீதியும், வணிகர், அந்தணர், உழவர் முதலியோர் வசிக்கும் தனித் தனித் தெருக்களும் அமைந்திருந்தன. மேலும் அங்கு முத்து, இரத்தினம் ஆகியவற்றை விற்போர், சங்கு, பவளம் இவற்றை அறுத்துக் கடைவோர், சூதர், மாகதர் முதலியோரது வீதிகளும் உண்டு. இவ்வாறுள்ள பல தெருக்களைக் கொண்ட நகரின் நடுவே, மன்னனது அரண்மனை மாண்போடு விளங்கியது. அதனைச் சுற்றித் தேர்ப்பாகர், யானைப் பாகர், குதிரை வீரர், காலாட்படைத் தலைவர் என்போர் இருக்கும் தெருக்களும் வரிசையாய் அமைந்திருந்தன. அங்குச் சிவன் கோயில், திருமால் கோயில், முருகன் கோயில், பலதேவன் கோயில், அருகன் கோயில் முதலிய பல கோயில்களும் இருந்தன. அன்றியும் அப்பட்டினப் பாக்கத்தில் அறச்சாலைகளும், வேள்விச் சாலைகளும், கலைக்கழகங்களும் அமைந்திருந்தன. இன்னும் இலவந்திகை, உய்யாவனம், சம்பாதிவனம், கவேரவனம், உவவனம் என்னும் ஐந்து பூஞ்சோலைகளும் சிறந்து விளங்கின.

கடல் ஓரத்திலே இருந்த மருவூர்ப்பாக்கத்திலே திசைமயங்கிச் செல்லும் கப்பல்களை, திசை அறிவித்து அழைக்கும் கலங்கரை விளக்கமும், கண்ணைக் கவரும் அழகையுடைய உயரிய மாளிகைகளும் அமைந்திருந்தன. பருத்தி நூல் கொண்டும், பட்டுநூல் கொண்டும், எலிமயிர், ஆட்டு மயிர் கொண்டும், மிக நேர்த்தியான ஆடைகள் நெய்யும் சாலியர் தெருக்கள் பல விளங்கின. வெண்கலம், செம்பு, வெள்ளி முதலிய உலோகங்களால் பாத்திரங்கள் செய்யும் கம்மியர் வீதி

களும் பொற்கொல்லர், தச்சர், தையற்காரர், பாய் முடைவோர், இல்லம் இயற்றுவோர் முதலி யோர் வீதிகளும் ஆங்காங்குத் திகழ்ந்தன. திரு மாலின் உலகம் உண்ட வயிறோ என்று எண்ணு மாறு ஆவணம் விளங்கியது. அவ்வூரில் பல மொழிகளைப் பேசும் பல நாட்டு மக்கள் வாணி பத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்ததால், அவ்வூர் மக்கள் பல மொழிகளையும் வருத்தமின்றி அறிந்தவர்களாக இருந்தனர்.

இந்த இரு பாக்கங்களுக்கும் இடையே உள்ள பொழிலிடத்து, வானளாவ உயர்ந்த மரங்களினது அடியிலே பந்தல் அமைத்து வணிகர் பலர் வியா பாரம் செய்யும் சந்தை யொன்றிருந்தது. அச் சந்தைக்கு **நாளங்காடி** என்பது பெயர். இங்குப் பொருள்களை விற்போரும் வாங்குவோரும் செய் யும் ஓசை, இருபெரும் மன்னர்கள் போர் புரியும் போது உண்டாகும் ஓசையைப் போன்று இருக் கும். இந்த நாளங்காடியில் **வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூதசதுக் கம், பாவை மன்றம்** என்னும் ஐவகை மன்றங்கள் இருந்தன. இன்னும் அங்கு **நாளங்காடி பூதத்தின் பீடமும், தோரண வாயிலும், முத்துப் பந்தல்** முதலியன வும் சிறப்புடன் விளங்கின. நாளங்காடிப் பூதம் **முசுகுந்தன்** என்னும் மன்னவனுக்கு இந்திரனால் துணையாக அளிக்கப்பட்டது. அம்மன்னவன் அப்பூதத்தை இவ்விடத்தே நிறுத்தி வழிபட்டு வந்தமையால், அதற்கு 'நாளங்காடிப் பூதம்' என்றும் பெயர் வழங்கப்பட்டது. வீரர்களும் மறக்குடிப் பெண்களும் அப் பூதத்திற்குப் பலி யிட்டு வணங்குவர்.

அவ்வூரின்கண் தேவேந்திரனுக்குத் திரு விழாச் செய்வது வழக்கம். அவ்விழாவே அவ் வூர்ப் பெருவிழாவாகும். அந்த விழாவுக்கு **இந்திர விழா** என்று பெயர். அது ஆண்டுக்கொரு முறை இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப் படும். அப்பொழுது தேவர்களும் அதனைக் காண் பதற்கு தமது உருக்கரந்து வருவரென்ருல், அதன் பெருமையை எங்ஙனம் சொல்லமுடியும்! அந் நகரத்தில்தான் கற்பிற் சிறந்த பொற்புடைத் தெய்வமாகிய **கண்ணகியும்** அவளது நாயகனுகிய **கோவலனும்** பிறந்து பெரும்புகழ் பெற்றனர். அன்றியும், அங்கே **மணிமேகலை** என்னும் மாசறு மணியைப்பெற்ற **மாதவியும்** பிறந்து வளர்ந்து, அருங்கலை கற்று விளங்கினுள்.

இத்தகைய சிறந்த நகரமாகிய காவிரிப்பூம் பட்டினம் இந்நாளில் நாம் பார்க்கமுடியாதபடி கடலாற் கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள சிறு பகுதியை இக்காலத்தில் அப்பெயராலேயே வழங்குகின்றனர். இதன் பெருஞ்சிறப்பையும் தெய்வத் தன்மையையுங் கண்ட இளங்கோவடி கள் சிலப்பதிகாரத்தில், "பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்," எனப்போற்றி நம்மை யும் போற்றச்செய்தனர்

அருஞ்சொற்பொருள்

மாட்சி-பெருமை; **எண்பேராயத்தவர்**-கரணத்தியலவர், கரும விதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரைவீரர் என்பவர்கள்; குன்றுகள்-சிறு மலைகள்; சூதர்-அரசர் முன்நின்று துதிப் பவர்; மாகதர்-அரசர் முன் இருந்து துதிப்பவர்; **வேள்விச் சாலைகள்**-யாக சாலைகள்; **சாலியர்**-நெய்வோர்; **ஆவணம்**-கடைவீதி; **நாளங்காடி**-பகற்கடை; **கரந்து**-மறைந்து.

### வினாக்கள்

1. சோழ மன்னர்களின் தலைநகரங்கள் எவை?

2 காவிரிப்பூம்பட்டினத்திற்கு வழங்கும் வேறு பெயர்களும், அவற்றிற்குரிய காரணங்களும் யாவை?

3. புகார் எத்தனை பிரிவுகளையுடையது? அவைகள் யாவை?

4. பட்டினப்பாக்கம்-இதனைப்பற்றி விளக்கிவரைக.

5. மருவூர்ப் பாக்கத்தைப்பற்றி நீவிர் அறிந்ததை வரைக.

6. குறிப்பு வரைக :—ஐவகை மன்றங்கள், ஐந்து பூஞ் சோலைகள், எண்பேராயம், நாளங்காடி.

7. சூதர், மாகதர் என்று கூறப்படுவோர் யாவர்?

8. நாளங்காடிப்பூதம்-இதற்கு இப்பெயர் வரக்காரணம் என்ன?

9. காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமையைக் கூறும் நூல்கள் யாவை?

10. இந்திர விழா நடைபெற்ற முறையினை வரைக.

### பயிற்சி

1. குறிப்புவரைக: பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம், நாளங்காடி, இந்திர விழா.

2. சேர்த்தெழுதுக; கண்ட+இளங்கோவடிகள் ; சிறந்த+நகரம்; கற்பையும்+தெய்வத் தன்மையையும்+ கண்ட.

3. பிரித்தெழுதுக: பொற்புடைத் தெய்வம், பட்டினப் பாலை, சிலப்பதிகாரம், நாளங்காடி.

4. காவிரிப்பூம்பட்டினத்தைக் குறித்து இரண்டு பக்கங் களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

# இலக்கனம்

## இனவெழுத்து

எழுத்துக்கள் சில ஒன்றையொன்று சிற்சில வகைகளில் ஒத்து உள்ளன. அவை ஒன்றுக்கொன்று இனமாகும். இன எழுத்துக்கள் பின்வருமாறு :

அ, ஆ-இவை ஒன்றுக்கொன்று இனம்.
இ, ஈ, ஐ— ,,
உ, ஊ, ஔ— ,,
எ, ஏ— ,,
ஒ, ஓ— ,,
க, ங— ,,
ச, ஞ— ,,
ட, ண— ,,
த, ந— ,,
ப, ம— ,,
ற, ன— ,,
ய, ர, ல, வ, ழ, ள—

பின்கண்ட எழுத்துக்களுக்கு நேராக அவற்றிற்கு இனமான எழுத்துக்களை எழுதுக.

ஈ ——, உ ——; ய ——;
ஔ ——; ச ——; ண ——;

# 2. அவிவேக பூரண குரு கதை

## ஆற்றைக் கடந்தது

ஓரூரில் அவிவேக பூரண குருவென்று ஒரு ஆசிரியர் இருந்தார். அவருக்கு ஊழியஞ்செய்ய **மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன்** என்னும் பெயர்களையுடைய ஐந்து சீடர்கள் அவர் மடத்தில் இருந்தனர். அவர்கள் அறுவரும் ஒருநாள் மற்றைச் சீடர்களை விசாரிக்கும் பொருட்டுக் காலையில் எழுந்து கால்நடையாகச் சுற்றுக்கிராமங்களுக்குச் சென்றார்கள். சென்று திரும்பும்போது வழி நடுவிலிருந்த ஓராற்றங்கரைக்கு மூன்றாஞ் சாம நேரத்தில் வந்து சேர்ந்தனர்.

பிறகு குருவானவர் ஆற்றில் இறங்கப் பயந்து "இது மிகவும் பொல்லாதது; ஆதலின் விழித்திருக்கும் வேளையில் இதனைக் கடந்து போகக்கூடாது!" என்று மிலேச்சனை ஏவி, ஆறு தூங்குகிறதோ விழித்திருக்கிறதோ எனச் சோதிக்கச் செய்தார். அவன் குரு மொழியைச் சிரமேற்கொண்டு, அப்போது புகைச்சுருட்டுப் பற்றவைக்கும்படி தன் கையில் எடுத்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு போய் அந்த ஆற்றில் தான் இறங்காது தூர நின்று எட்டித் தண்ணீரிலே நனைத்தான். நனைத்தவுடனே தண்ணீர் 'சுர்' என்ற ஒலியுடன் புகைந்தது. அதனைக் கண்ட மிலேச்சன் பதறிக் கீழே விழுந்து நடுங்கிப் பயந்து ஓடிவந்து, "ஐயா! ஐயா!! ஆற்றைக் கடப்பதற்கு இது தருணமன்று! அது விழித் திருக்கிறது! நான் தொட்டவுடனே நஞ்சுள்ள

நாகம் போலச் சீறிக்கொதித்துக் கோபத் தீயைக் கக்கி என்னைக் கொல்லவந்தது! நான் தங்களது அருளாலும் என்னைப் பெற்றவள் செய்த தவத்தி னாலும் உயிர் பிழைத்தேன்!'' என்றான்.

அதைக் கேட்ட குருவானவர், ''அப்பா தெய்வத் திருக்கருத்தை யாரறியக்கூடும்? அது கண்ணுறங்கும் வரையில் சற்று நேரங்காத்திருப் போம்.'' என்றார். பிறகு அவரும் சீடரும் நதியின் பக்கத்தில் உருத் தெரியாமல், இருள் சூழ்ந்த ஒரு பூஞ் சோலையில் தங்கியிருந்தார்கள். அங்கே பொழுது போகும்படி அந்த ஆற்றின் விசேடங் கள் பலவற்றையும் குறித்துத் தனித்தனியே அவனவன் சொல்லிக் கொண்டு வரும்போது மட்டி என்னும் சீடன் சொன்னதாவது; ''சுவாமி! இந்த நதியின் தந்திரத்தையும் மோசத்தையும் குறித்து என் பாட்டனார் பலமுறையுஞ் சொல்ல நான் நன்றாய்க் கேட்டிருக்கிறேன். என் பாட்ட னார் பெரிய வியாபாரியாய் இருந்தவர். அவர் ஒரு நாள் உப்புப்பொதி ஏற்றின இரண்டு கழுதை களைத் தாமும், தம் கூட்டாளியுமாக ஓட்டிக் கொண்டு நடு ஆற்றில் இறங்கி வருகையில், கோடைக்காலமாய் இருந்ததனால், வெப்பந்தணிய இடுப்பளவாய் ஓடுகின்ற குளிர்ந்த தண்ணிரிலே தாங்களுங் குளித்துக் கழுதைகளையும் நிறுத்திக் குளிப்பாட்டினார்கள்.

பின்னர் அக்கரைக்குப் போய் பார்த்த பொழுது, ஊசியினால் உறுதியாகச் சந்தில்லாமல் தைத்திருந்த கோணிப் பையின் வாய் சற்றுத் திறவாமலிருக்க, அதற்குள்ளிருந்த உப்பை யெல்லாம் ஆறானது 'தோலிருக்கச் சுளை விழுங்கி னது போல' தந்திரமாய்த் திருடித் தின்றுவிட்ட

தைக் கண்டார்கள்; கண்டு "ஆ! ஆ!! இந்த ஆறு உப்பைக் கொள்ளையடித்துத் தின்ற மதத்தினலல்லவா எங்களை விழுங்காமல் விட்டுவிட்டது. உப்பு போனல் போகிறது; அந்தமட்டில் நல்ல சகாயஞ் செய்ததே; இதுவே பெரிய நன்மை," என்று நினைத்து அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்" என்பதே.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அங்கே ஒருவன் குதிரை ஏறி வருவதைக் கண்டார்கள். ஆற்றில் ஒரு சாணளவு தண்ணீர் ஓடி வருவதைக் குறித்துச்சற்றும் அஞ்சாமலும், கூசாமலும் அவன் குதிரை மேலிருந்தபடியே சரசரவென்று கடுகி வந்தான். அதைக் கண்டு அவர்கள், "அடடா! நம் குருக்களுக்கும் குதிரையிருந்தால் அவரும் அவரைச் சேர்ந்த நாமும், அச்சமில்லாமல் ஆற்றில் இறங்கலாமே; அது இல்லாததனல் அல்லவா இப்படித் தயங்கி நிற்க வேண்டி வந்தது! இனி எப்படியாகிலும் ஒரு குதிரை வாங்கவேண்டும்," என்று தங்களுக்குள் நிச்சயித்துக்கொண்டு குருவினிடத்தில் அதைக் குறித்து விண்ணப்பம் செய்தார்கள். அவர் இந்தச் செய்தியைப் பற்றிப் பின்பு பேசுவோம் என்று சொல்லி, "இப்பொழுது அத்தமன காலம் நெருங்கியதால் ஆற்றின் நித்திரையைச் சோதியுங்கள்" என்று சீடர்களுக்குச் சொன்னர்.

அப்படியே கொள்ளிக்கட்டையை மடையன் கொண்டுபோய்த்தண்ணீருக்குள்ளே தோய்த்துச் சோதித்தான். அந்தக் கொள்ளிக் கட்டையிற் பற்றிய நெருப்பு முன்னமே அவிந்துபோனதனல்

ஆற்றில் சிறிதும் புகை கிளம்பவில்லை. அதனைக் கண்டு அவன் மிகவும் களிகூர்ந்து ஓடிவந்து, "இது தான் நல்ல சமயம்! நல்ல சமயம்! இப்படிப் பட்ட சமயம் இனிக் கிடைக்காது! ஆதலின் வாய் திறந்து பேசாமல் தாமதியாமல் விரைவில் வாருங்கள்! ஆறு தூங்கிக்கொண்டு இருக்கின்றது; இப்பொழுது சிறிதும் அஞ்சவேண்டியதில்லை," என்றான். இவ்வாறு கூறி மடையன் கூப்பிட எல்லோரும் திடீரென்று எழுந்து ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினார்கள். அலைகள் முதலாய்ச் சப்தமிடாதபடி மெதுவாகக் காலைத்தூக்கி ஒவ்வொரு அடியாகத் தண்ணீருக்குள் வைத்து ஊன்றிப் பின்பு மேலெடுத்து, தாண்டித் தாண்டி ஆற்றைக் கடந்து கரையேறினார்கள்.

அவர்கள் கரையேறினவுடனே மகிழ்ச்சியினால் தலைகால்தெரியாமல், துள்ளியாடிக்கொண்டு இருக்கும்போது, மூடனானவன் 'நாமெல்லோரும் அபாயம் இல்லாமல் வந்து சேர்ந்தோமா? எண்ணிப் பார்ப்போம்,' என்று தன்னை மாத்திரம் கூட்டாமல், மற்றவர்களை எண்ணினான். எண்ணின போது ஐவரிருக்கக்கண்டு 'அப்பப்பா! ஐயையோ இதென்ன பேரிழவு, ஒருவன் ஆற்றோடு போய்விட்டான்; ஐந்துபேர் மாத்திரம்தான் இருக்கிறோம்' என்று குருவைப் பார்த்துத் தேம்பித்தேம்பி அழுதான். அப்போது குரு அவனை அழவேண்டாம் என்று கூறி, அவர்களை வரிசையாக நிறுத்தி மூன்று முறை தம்மைச் சேர்க்காமல் கணக்குப் பார்த்தபோது ஐவர் இருக்கக்கண்டு, "ஆமப்பா நீ கூறியது உண்மையே!" என்றார். அப்படியே

ஒவ்வொருவனும் தன்னை விட்டு ஒழிந்தவர்களை மாத்திரம் எண்ணி, ஆறும்பேரைக் காணுமையால் ஒருவனை ஆறு விழுங்கிவிட்டது என்று நிச்சயித்தனர். பின்பு அவர்கள் அலறி அழுது கூ! கூ! என்று கூச்சலிட்டு ஆற்றைப் பார்த்து "ஓ பாவியாறே! துரோகியாறே! உலகம் அனைத்தும் வணங்கி வாழ்த்தும் பரமார்த்த குருவினுடைய உத்தம சீடனை ஒரு நொடிப்பொழுதில் உனது கொடிய குணத்தால் கொள்ளை கொண்டாயே! சிறிதும் இரக்கமில்லாமல் கிழங்கு போல் விழுங்கி விட்டாயே! உன்மனம் இரும்போ! கல்லோ! நன்றிகெட்ட நாசகாலா! நீயும் இனி உலகத்தில் வாழ்வாயோ! இனி நீ உண்ணீர் வற்றி, ஊற்றுக் கண் அடைபட்டு, பள்ளந் தூர்ந்து, வெள்ளம் மாறி, பாழாய்ப் போவாய்!" என்று ஆற்றைச் சபித்தார்கள்.

இவ்வாறு ஆற்றைக் குறித்துத் தாறுமாறுக வைதுகொண்டு இருந்தார்களே தவிர, ஆற்றோடு போனவன் இன்னுன் என்று அவர்கள் மடமையால் அந்நேரம் வரையில் அறியவும் இல்லை; அவன் எவன் என்று விசாரிக்கவும் இல்லை. அத் தருவாயில் புத்திமானுகிய வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியே வந்தான். அவன் இவர்கள் வருந்துவதைப் பார்த்து, "ஏனையா துக்கப்படுகிறீர்கள்? உங்களுக்கு உண்டான குறை யாது? கூறுங்கள்!" என்று கேட்டான். அவர்கள் நடந்த செய்திகள் அனைத்தையும் சொன்னுர்கள். அவன் இவர்கள் மடத்தனத்தை உணர்ந்துகொண்டு, 'அடா அப்பா! இது மிகுந்த முயற்சியோடு செய்யவேண்டிய

காரியம்; என்னாலன்றி மற்றொருவராலே முடியாது; நான் மந்திர வித்தையிலே வல்லவன்! எனக்கு நீங்கள் நல்ல வெகுமதி செய்வீர்களே யானால் ஆற்றோடே போனவனை அரைக்கணத்தில் அழைப்பிக்கின்றேன்' என்றான். அதற்குக் குருவானவர், 'நாங்கள் வழிச்செலவிற்காக வைத்திருக்கும் நாற்பத்தஞ்சு பணத்தையும் உனக்குத் தந்து விடுகிறோம்; தயவு செய்யவேண்டும், என்று கூறினார்.

அவன் அப்படியே ஆகட்டும் என்று கூறி, தன் கையில் ஏந்திய இரும்புப் பூண் கட்டப்பட்ட தடியை அவர்களுக்குக் காட்டி, 'நான் சொன்ன மந்திர வித்தை இதிலேதான் இருக்கிறது. நீங்கள் வரிசையாக நின்று கும்பிட்டுக் குனிந்து ஆளுக்கொரு அடிபட்டுக் கொள்ளவேண்டும்; அவ்வாறு அடிபடும்பொழுது அவனவன் தன் பெயரைச் சொல்லி எண்ணிக்கொண்டு வரவேண்டும்; அவ்வாறு நீங்கள் செய்தால் ஆறு பேரும் இவ்விடம் இப்போதே பிரத்தியட்சமாக வந்திருக்கச் செய்வேன்!' என்றான். அவர்களும் நல்லது என்று சம்மதித்தார்கள்.

மந்திரவித்தைக்காரன் அவர்களை வரிசையாக நிறுத்தி அந்தத் தடியால் ஓங்கித் தன் கை கூசாமல் முதல்முதல் குருவின் நடுமுதுகைப் பார்த்து மிகவும் பலமாக ஓர் அடி போட்டான். அவர் 'அப்பாடா! போதும் போதும்! நான்தான் பரமார்த்த குரு' என்றார். இவன் 'ஒன்று' என்றான். இப்படியே எல்லாரையும் ஒவ்வொரு அடியடிக்க அவர்களும் தங்கள் பெயர்களைத்

தனித்தனியே சொல்லவும், இவன் கணக்கெண்ணவும் அவ்வறுவரும் சரியாக இருக்கக் கண்டு ஒத்துக்கொண்டனர். பின்பு அவர்கள் ஆச்சரியப்பட்டு மாயவித்தைக்காரனுகிய வழிப்போக்கனை மெச்சித் துதித்துச் சொன்னபடி அவனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனுர்கள்.

### அருஞ்சொற்பொருள்

ஊழியம்-தொண்டு; தருணம்-சமயம்; நஞ்சு-விடம்; மதம்-திமிர்; சகாயம்-உதவி; அத்தமனகாலம்-மாலைக் காலம்; நன்றி-உபகாரம்; மடமை-அறியாமை.

### வினுக்கள்

1. அவிவேகபூரண குருவின் மாணவர்கள் யாவர்?

2. ஆறு விழித்திருக்கிறது என்பதை மிலேச்சன் எதனுல் அறிந்தான்?

3. மட்டி என்னும் சீடன் நதியின் தந்திரத்தையும், மோசத்தையும் பற்றிக் கூறியதென்ன?

4. குருவும் சீடர்களும் தங்களுக்குள் ஒருவரை ஆறு விழுங்கிவிட்டது என்று அழக்காரணம் என்ன?

5. ஆற்றைப் பற்றிக் குருவும் சீடர்களும் கூறிய வசை மொழிகள் யாவை?

6. மாய வித்தைக்காரனுகிய வழிப்போக்கன் செய்தவை யாவை?

### பயிற்சி

1. பிரித்தெழுதுக: கோடைக்காலம், பூஞ்சோலை, உப்பைக் கொள்ளையடித்துத்தின்ற.

சரசரவென்று-இதை வாக்கியத்தில் அமைக்க. இது போன்ற வார்த்தைகள் வேறு இரண்டு, கூறி அவற்றையும் வாக்கியங்களில் அமைக்க.

3. இந்தக்கதையில் என்னென்ன மடத்தனமான செயல்கள் நடைபெறுகின்றன?

# இலக்கணம்

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களில் சில எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வரும்; சில எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வரமாட்டா. சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை என அறிய வேண்டும். அவற்றைக் காண்க.

1. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்,

(உ-ம்) அறம், ஆடு, இலை, ஈசல், உரல், ஊர், எலி, ஏர், ஐயம், ஒலி, ஓடம், ஔவியம்.

2. க, ச, த, ந, ப, ம என்னும் ஆறுமெய்களும், பன்னிரண்டு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) கண், கால், கிளி, கீரி, குளம், கூடு, கெடு, கேள், கைகள், கொடு, கோழி, கௌவை.

சட்டி, சாறு, சிறுமை, சீர், சுழி, சூடு, செடி சேவல், சையென, சொல், சோறு, சௌகரியம்.

தடி, தாள், தின், தீமை, துளை, தூக்கம், தெள், தேள், தையல், தொட்டி, தோட்டி, தௌவுதல்.

நரி, நாள், நிலம், நீர் நுனி, நூல், நெய். நேர். நைதல், நொய், நோய், நௌவி.

பல், பால், பிடி, பீர்க்கு, புகல், பூனை, பெட்டி, பேழை, பைய, பொன், போர், பௌவம்.

மணி, மான், மிதி, மீன், முள், மூலை, மென்மை, மேன்மை, மையல், மொள், மோர், மௌவல்.

3. 'வ' என்னும் மெய், உ, ஊ, ஒ, ஓ, அல்லாத மற்ற எட்டு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதல் ஆகும்.

(உ-ம்) வறுமை, வால், விழி வீண், வெள்ளி, வேலை, வையம்; வௌவுதல்.

4. 'ய' என்னும் மெய், அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

5. 'ஞ' என்னும் மெய், அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

6. 'ங' என்னும் மெய் அ, இ, உ, என்னும் மூன்று சுட்டெழுத்துக்கள், 'எ' ,யா' என்னும் வினாவெழுத்துக்கள் இவற்றைச் சேர்ந்து அகர உயிர் ஒன்றோடு மட்டும் பொருந்தி மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்.

மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் எவை எனக் கண்டறிந்து கூறுக.

---

# 3. எவரெஸ்டு வெற்றி

'மன்னும் இமய மலையெங்கள் மலையே', என்று இமய மலையைப் பற்றிப் பாரதியார் பெருமிதத்தோடு கூறுகிறார். இங்ஙனம் அவரைக் கூறச் செய்தது எது? இமயமலை உலகிலுள்ள மலைகள் எல்லாவற்றிலும் பெரியது. அது கிழக்கு மேற்காக ஏறக் குறைய 1500 மைல் நீளமும், தெற்கு வடக்காக ஏறக்குறைய 200மைல் அகலமும் உள்ளது. உலகிலுள்ள கொடிமுடிகள் எல்லாவற்றைக் காட்டிலும் உயரமான கொடுமுடிகள் பல இம்மலையில் உள்ளன. இத்தகைய தனிச் சிறப்பே அவரை அங்ஙனம் கூறச்செய்தது.

இமயமலையின் உச்சி எப்பொழுதும் பனியால் மூடப்பட்டிருக்கும். அதனால் அதனை வட மொழியாளர் இமாலயம் என அழைத்தனர். இமம் என்றால் பனி, ஆலயம் என்றால் கோயில், அதாவது இருப்பிடம். ஆகையால் இமாலயம் என்பதற்குப் "பனியின் இருப்பிடம்" என்பது பொருளாகும். மேற்கண்ட வடசொல்லே தமிழில் இமயம் என்றாயிற்று.

இமயமலையில் உயர்ந்த கொடுமுடிகள் இருப்பதாகக் கூறினோம். அவற்றுள் மிக உயர்ந்தது எவரெஸ்டு என்பது. இதன் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 29,002 அடி ; அதாவது ஏறக்குறைய $5\frac{1}{2}$ மைல்கள். இதன் உயரத்தை முதல் முதலாகக் கண்டறிந்து கூறியவர், ஸர். ஜார்ஜ் எவரெஸ்டு என்பவர். அதனால் இக்கொடுமுடி அவர் பெயரால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

சமீப காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சியடையத் தொடங்கவே, மேனாட்டார் பல புதுமைகளைக் கண்டறிய முற்பட்டனர். அவ்வகையில் அவர்கள் எவரெஸ்டு சிகரத்தின் மேலேறி அதனை வெற்றிகொள்ள விழைந்தனர். அவர்கள் குழுக் குழுவாகத் தொடர்ந்து பல ஆண்டுகள் அதன்மீது படையெடுத்து இறுதியில் வெற்றியும் கண்டுவிட்டனர். இது செயற்கரிய செயலேயாம். எங்ஙனமெனில் கூறுவோம்.

கடல் மட்டத்தினின்று உயரச் செல்லச் செல்லக் குளிர் அதிகமாகும் என்பது யாவரும் அறிந்ததே. மலைகளின்மீது 20 ஆயிரம் அடிக்கு

மேல் மரம், செடி, புல், பூண்டு ஒன்றும் விளையாது. பிராணிகளும் வாழமாட்டா. நிலமெங்கும் பனிக் கட்டியால் மூடப்பட்டிருக்கும். பார்க்குமிடமெங் கும் பனிக்கட்டி நீக்கமற நிறைந்திருக்கும். சில சமயங்களில் மூடுபனி தோன்றி, எதிரில் மிகச் சமீ பத்தில் உள்ள பொருள்களையும் கண்ணுக்குப் புலப்படாமல் செய்துவிடும். மற்றும் சில சமயங் களில் குளிர்காற்று வீசும்; பனி மழை பெய்யும். இக்காலங்களில் குளிர் பொறுக்க இயலாது. உட லுக்குள் ஓடும் இரத்தம் உறைந்துவிடும். இரு தயம் வேலை செய்யாது. இன்னும் இந்த உயரத் தில் காற்று நெருக்கமும் குறைவு. இதனால் மூச்சுத் திணறி இறக்க நேரிடும்.

ஆயின் எவரெஸ்டின் மீதேறி அதனை வெற்றி கண்டவர் எங்ஙனம் வெற்றி கண்டனர்? தற்கால விஞ்ஞானம் இச் செயற்கரிய செயலைச் செய்ய அவர்களுக்கு உதவியது. அவர்களுக்குக் குளி ரைத் தாங்கத் தக்க காற்றுப்புகாத உடைகள், பிராணவாயுக் கருவிகள், சறுக்காமல் பனிப் பாறைகளில் ஏறுதற்குரிய எஃகு முட்களுடன் கூடிய செருப்பு, உணவு சமைத்தற்குரிய அணை யாத அடுப்பு முதலியவற்றைச் செய்தளித்தது. நிற்க எவரெஸ்டு சிகரத்தின்மீது நிகழ்த்தப்பட்ட படையெடுப்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

முதற் குழுவினர் 1921இல் புறப்பட்டுச் சென்று 23 ஆயிரம் அடி ஏறிப் பின்வாங்கினர். இரண் டாம் குழுவினர் 1922 இல் சென்று 27,300 அடி வரையில் ஏறி மீண்டனர். மூன்றும் குழுவினர்

1924இல் முயன்று 28,130 அடிவரை ஏறிப் பின் முயற்சியைக் கைவிட்டனர். நான்காம் குழுவினர் 1933இல் ஏற முற்பட்டு 28,100 அடி வரையில் மட்டும் ஏறினர். ஐந்தாம், ஆறும் குழுவினர் முறையே 1935, 1936ஆம் ஆண்டுகளில் முயன்று தோல்வியுற்றுத் திரும்பினர். அவர்களால் 23 ஆயிரம் அடி உயரமே ஏறமுடிந்தது. பிறகு இரண்டாவது உலகப்போர் காரணமாக எவரெஸ்டின்மீது ஏறும் முயற்சிகள் கைவிடப்பட்டன.



எவரெஸ்டு சிகரம்

போர் முடிந்தபிறகு 1951-ல் மீண்டும் முயற்சி தொடங்கப் பெற்றது. அவ்வாண்டில் எட்டாம் குழுவினர் முயன்று எவரெஸ்டின் உச்சியை அடையத் தெற்குப் பக்கத்தினின்று செல்வதே தக்கது என ஊகித்தனர். இதுவே அவர்கள் கண்ட வெற்றி. ஒன்பது, பத்து ஆகிய முயற்சி

கள் 1952இல் செய்யப்பட்டன. ஒன்பதாம் குழுவினர் 28, 210 அடியும், பத்தாம் குழுவினர் 26, 575 அடியும் ஏறினர்.

இறுதியாக 11ஆம் முயற்சி 1953இல் **கர்னல் ஜான் ஹண்ட்** என்பவர் தலைமையில் தொடங்கியது. இம்முயற்சியில் வெற்றி கிட்டியது. வெற்றி கண்டவர்கள் **தென்சிங் நார்க்கே, எட்மண்ட் ஹில்லரி** என்னும் இரு வீரர்களாவர். இவர்களது வரலாற்றை இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

தென்சிங் நார்க்கே என்பவர் இமயமலைப் பக்கத்தில் வாழும் ஷெர்ப்பா வகுப்பினரைச்சேர்ந்தவராவர். இவர் எவரெஸ்டின் அடிவாரத்திலுள்ள **சோலோகும்பு** என்னுமிடத்தில் 1914ஆம் ஆண்டில் பிறந்தார். சிறுவயது முதலே மலையேறுவதில் விருப்பமுடையவராய் அதில் ஏறிப் பழகினர். இவரது திறமையைக் கண்ட நேபாள அரசாங்கத்தார், இவருக்கு மலைப்புலி என்னும் பொருளையுடைய **தென்சிங்** என்னும் பெயரை இட்டனர். இவரது திறமையை அறிந்த இந்திய அரசாங்கத்தார், இவரைக் காஷ்மீரத்திலிருந்த இந்தியப் படைக்குப் பனிச்சறுக்கு விளையாட்டைக் கற்பிக்கும் ஆசிரியராக்கினர். 1948 முதல் 1950 வரையில் இவர் அப்பணியிலீடுபட்டிருந்தார்.

ஹில்லரி என்பவர் நியூஸிலாண்டு நாட்டவர். 1919இல் பிறந்தார். 1950 முதல் 1953 வரை எவரெஸ்டின்மீது ஏற முயன்ற குழுவினரோடு சேர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டார். அம்மலைமீதேறும் குழுவினர் அம்மலையின் அடிவாரத்தில்

அமைத்த முதல் உறைவிடத்தினின்று, அம்மலை மீது அமைந்த இரண்டாவது உறைவிடத்திற்குக் குறுக்கு வழி ஒன்றைக் கண்டுபிடித்தார். இவ்வழி உணவுப் பொருள்களை விரைந்து கொண்டு செல்வ தற்குப் பயன்பட்டது. இதற்காகக் குழுத் தலைவ ராகிய கர்னல் ஜான் ஹண்ட் இவரைப் பாராட்டினர்.

இனி 11ஆம் குழுவினரின் செயலைக் கவனிப் போம். இவர்கள் ஆங்காங்கு உறைவிடங்களை அமைத்துக்கொண்டு சென்றனர். இவர்கள் அமைத்த உறைவிடங்கள் மொத்தம் எட்டாம். வழியில் இவர்கள் பல இன்னல்களுக்கு இலக்கா யினர். கடினமான பல பனிச்சரிவுகள் குறுக் கிட்டன. பிராணவாயுக் கருவிகள் சிலசமயங் களில் சரிவர வேலைசெய்யவில்லை. செங்குத்தான பல பாறைகளின்மீது ஏறிச் செல்லவேண்டியதா யிற்று. எங்ஙனமோ முயற்சி கைகூடியது. 1953ஆம் ஆண்டு மே திங்கள், 29ஆம் நாள், காலை 11-30 மணிக்கு இக்குழுவினரைச் சேர்ந்த தென்சிங்கும் ஹில்லரியும் எவரெஸ்டின் உச்சியை அடைந்தனர்.

அங்கே இந்தியா, நேபாளம், இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் இவற்றின் கொடிகளுடன் நின்ற தென் சிங்கை, ஹில்லரி அச்சிகரத்துடன் படம் பிடித் தார். மேலும் அச்சிகரத்தின் பல சரிவுகளையும். பல அழகிய காட்சிகளையும் படம் எடுத்துக் கொண்டு திரும்பினர். அவர்கள் எவரெஸ்டை வெற்றி கொண்டனர் என்பதற்கு இப்படங்கள் சான்று பகர்கின்றன.

எவரெஸ்டு உச்சியினின்று அவர்கள் கண்ட காட்சிகளுட் சில பின்வருமாறு: எவரெஸ்டு சிகரம் மஞ்சட்கல்லால் ஆனது; கூருருளை வடிவமுடையது. அங்கிருந்து பார்த்தபோது பொன்மயமான கிஞ்சின் ஜிங்கா சிகரமும், திபேத்திலுள்ள போம்பக் மடமும் கண்கொள்ளாக் காட்சியளித்தன.

தென்சிங்கும், ஹில்லரியும் அடைந்த வெற்றியை உலகம் முழுவதும் பாராட்டியது. இங்கிலாந்து அரசியாரின் கணவராகிய எடின்பரோ கோமகனார், "இவ்வெற்றியைக்கேட்டு எல்லோரும் மகிழ்ந்தோம்; வியத்தகு செயலைச் செய்தீர்கள்!" எனப் புகழ்ந்தார். ஹில்லரியின் வெற்றியைக் குறித்து நியூஸீலாண்டு நாட்டுத் துணை முதலமைச்சர், "நமது நாட்டு வீரரான ஹில்லரி பெற்ற வெற்றியானது நமது அரசியாருக்கு, இராஜ விசுவாசமுள்ள நியூஸீலாண்டின் முடிசூட்டு விழாப் பரிசாகும்" என்று பாராட்டினார்.

மேற்கண்ட வெற்றியைப் பாராட்டிய நமது ராஷ்ட்டிரபதி இராஜேந்திர பிரசாத் அவர்கள், தென்சிங், ஹில்லரி, கர்னல் ஹண்ட் ஆகிய மூவருக்கும் சிறப்புப் பதக்கங்கள் வழங்கினார். அவற்றில் ஒரு புறம் எவரெஸ்டும், மறுபுறம் அசோகச் சக்கரமும் பொறித்திருந்தன. நமது பாரத நாட்டு முதலமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்கள், மேற்கண்ட வெற்றிக் குழுவினருக்கு "வரவேற்பு விருந்து" ஒன்று அளித்துச் சிறப்பித்தார்.

எவரெஸ்ட் வெற்றிகொண்ட வீரருள் ஒருவர், நமது பாரத நாட்டைச் சேர்ந்தவர் என்பது, நம்மெல்லாருக்கும் பெருமிதத்தைத் தருவதாகும்.

## அருஞ்சொற்பொருள்

பெருமிதம்—மிகுந்த மகிழ்ச்சி: மன்னும்—நிலைபெற்ற சிகரம்—மலையுச்சி; விழைந்தனர்—விரும்பினர்; நீக்கமற—(நீக்கம்+அற) நீங்குதல் இல்லாமல் எங்கும் நிறைந்து; இருதயம்—நமது உடல் முழுவதும் இரத்தத்தைப் பரவச் செய்யும் உறுப்பு; இன்றியமையாதது—(இன்றி+அமையாதது) இல்லாமல் முடியாதது; உறைவிடம்—(இங்குத்) தங்குமிடம், வியத்தகு—வியக்கத்தக்க, ஆச்சரியப்படத்தக்க.

## வினாக்கள்

1. இமயமலையின் மேன்மை யாது?

2. எவரெஸ்டு கொடுமுடிக்கு அப்பெயர் வந்தது ஏன்?

3. உயரமான மலைகளின்மீது ஏறுவதில் உள்ள துன்பங்கள் எவை?

4. உயரமான மலைமீது ஏறுவதற்கு விஞ்ஞானம் செய்துள்ள உதவி யாது?

5. எவரெஸ்டை வெற்றி காண எத்தனை முறை படை எடுக்கப்பட்டது? ஏதாவது இரண்டு படையெடுப்புகளைப் பற்றிய செய்திகளைக் கூறுக.

6. தென்சிங்கும் ஹில்லரியும் எவரெஸ்டை வெற்றி கண்ட வரலாற்றைக் கூறுக.

7. தென்சிங் யார்யாரால் எங்ஙனம் பாராட்டப்பட்டார்? ஹில்லரி யார் யாரால் எங்ஙனம் பாராட்டப்பட்டார்?

## பயிற்சி

1. சிறு குறிப்பு வரைக:— ஸர் ஜார்ஜ் எவரெஸ்ட், தென்சிங் நார்க்கே, ஹில்லரி, ஸர் ஜான் ஹண்ட்.

2. மலையுச்சியில் ஏறுவதில் உள்ள துன்பங்களைப்பற்றி ஒரு கட்டுரை வரை.

3. தென்சிங்கும், ஹில்லரியும் எவரெஸ்டு சிகரத்தை வென்ற வரலாற்றை ஒரு கட்டுரையாக வரைக.

4. இமயமலையின் உச்சி எப்போதும் பனியால் மூடப் பட்டிருக்கும்—'பனி' என்று ஆரம்பித்து இவ்வாக்கியத்தைப் பொருள் கெடாமல் மாற்றி எழுதுக.

5. இன்றியமையாதது, நீக்கமற, வியத்தகு — இச் சொற்களை வாக்கியங்களில் அமைக்க.

## இலக்கணம்

### மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்

தமிழ்ச் சொற்களின் ஈற்றில் சில எழுத்துக்கள் வரும். சில எழுத்துக்கள் வரமாட்டா. இவற்றை அறிய வேண்டும். இவற்றை அடியிற் காண்க.

1. பன்னிரண்டு உயிர்களும் மொழிக்கு ஈற்றில் வரும்.

(உ-ம்) விள, பலா, நரி, தேனீ, விடு, பூ, சே, தே, தை, நொ, போ, வெள.

(குறிப்பு) : உயிர் மெய்யெழுத்து உயிரும் மெய்யுமாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு எழுத்துக்களாகக் கொள்ளப்பட்டிருக் கிறது.

2. ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்னும் பதினொரு மெய்களும் மொழிக்கு ஈருகும்.

(உ-ம்) உரிஞ், காண், வெரிந், நாம். அவன். பாய், பார், பால், தெவ், வாழ், தேள்.

மொழிக்கு ஈற்றில் வராத எழுத்துக்களைக் கூறுக.

---

# 4. அமுதமொழிகள்

1. கையில் பொருள் கிடைக்கும்போதே ஒளித்து வைக்காமல் அறங்களைச் செய்யுங்கள்.

2. ஒருவன் தான் அழிய நேர்ந்தாலும் மேலோரது கெடுதலை எண்ணலாகாது; உலக முழுவதையும் பெறுவதாய் இருந்தாலும் பொய் கூறுலாகாது.

3. ஒருவன் எச்சமெனத் தனது மக்கட்குச் சேர்த்து வைக்கத் தக்கவை, கல்விப் பொருளே யாம்; செல்வப் பொருள்கள் அல்ல.

4. யானையைப் போன்றவர்களது நட்பை விட்டு, நாயைப் போன்றவர்களது நட்பைக் கொள்ளுதல் வேண்டும்.

5. சிறப்புள்ள பெரியோர், செல்வத்தை யுடைய தேவலோகமே கைவசமாகக் கிடைப்ப தாய் இருந்தாலும், தமது மானங்கெட வருவதாய் இருந்தால் அதனை விரும்பார்.

6. மேலோர் பெருஞ்செல்வம் வந்தாலும் வரம்பு கடந்து நடக்கமாட்டார்; கீழோர் சிறிது பொருள் அதிகமாகக் கிடைத்தாலும் தம்மைச் சிறந்தவராக எண்ணிப் பெருமை பாராட்டுவர்.

—சமண முனிவர்கள்

7. தமக்கு உவமையில்லாதவராகிய கடவுள் அடியைச் சேர்ந்தவர்களுக்கு மனக்கவலை இல்லை.

8. ஒருவனுக்கு அணிகலம் பணிவுடைமை யும் இன்சொல்லுமே ஆகும்.

9. ஒருவன் பிறர் செய்த நன்றியை மறக்கா மல் அவர் செய்த தீமையை மறத்தல் வேண்டும்.

10. துன்பம் செய்தார்க்கு இன்பம் செய்து, அவர் செய்த துன்பம் தாம் செய்த இன்பம் ஆகிய இரண்டையும் மறந்துவிடுதலே, அவர்க்குத் தண் டனை ஆகும்.

11. ஒருவன் கற்பதற்குரிய நூல்களைக் குற்ற மறக் கற்று, பின் அக்கல்வி அறிவிற்குத் தகுந்த வாறு அவை கூறும் வழியிலே நிற்றல் வேண்டும்.

—திருவள்ளுவர்

12. வளப்பத்தை யுடைய உலகத்தில் வாழ் வோர்க்கெல்லாம் உணவைக் கொடுத்தவர் உயி ரைக் கொடுத்தவரே யாவர்.

—சீத்தலைச் சாத்தனார்.

13. பிறர்க்கு நன்மை செய்வதற்கு இயலா விட்டால், தீங்கு செய்தலையாவது விட்டு விடுங் கள். அவ்வாறு செய்வதே இம்மையில் புகழையும், மறுமையில் வீடு பேற்றையும் அளிக்கவல்லது

—நரிவெரூஉத்தலையார்.

14. தன்னைத் தஞ்சமடைந்தவனைத் தன் னுயிர்போல் எண்ணிப் பாதுகாவாதவனும், ஒரு வன் செய்த நன்றியை மறந்தவனும், கடவுளை இல்லை என்று கூறுபவனும் ஆகிய இவர்கள் நரகத்தில் விழுந்து வருந்துவார்கள்.

15. இன்னுயிரே எனினும் கொள்ளுதல் தீயது; கொடுப்பதே நல்லது.

16. கடலிடை வாசனைப் பொருள்களைத் தேய்த்துக் கரைப்பது பயன் அற்றது.

—கம்பர்.

17. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இரக்கமடைவார்கள்.

18. தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் சர்வேசுவரனைத் தரிசிப்பார்கள்.

19. நீங்கள் மனிதரை மன்னியாதிருந்தால், உங்கள் பிதாவும் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிக்கமாட்டார்.

20. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகத்தைத் திருப்பாதே.

—ஏசுநாதர்.

21. புலியிடத்தும் ஈசுவரன் இருப்பதும் உண்மையே; ஆனால் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன்னர்ப்போய் நிற்கக்கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது மெய்யே; ஆயினும் நாம் அவர்களுடன் சகவாசம் செய்வது சரியன்று.

22. மழைத் தண்ணீர் மேட்டுநிலத்தில் தங்கியிருப்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடிவந்துவிடுகிறது. அதுபோல ஈசுவர கிருபையானது. தற்பெருமையும் கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்.

23. அகங்காரம் இருக்கும்வரையில் ஞானமும் முக்தியும் கைகூடா; பிறப்பும் இறப்பும் நீங்கா.

—இராமகிருஷ்ணர்.

24. ஏழை மக்களின் நிலைமையை எண்ணி இரங்குகின்ற உள்ளம் உடையவர் எவரோ, அவரையே யான் 'மகாத்துமா' என்றுரைப்பேன்.

25. கடமையெல்லாம் தூயனவே. கடமையைச் செய்தலே, கடவுளை வழிபடுதலிலும் சிறந்தது.

26. ஆற்றல் இல்லாமையே துன்பத்திற்குக் காரணம். ஆற்றல் இல்லாமையே தீமைகளைச் செய்தற்குக் காரணம். பொய், களவு, முதலிய கொடிய செயல்கள் ஒருவனிடம் இருப்பதற்குக் காரணம் அவனது ஆற்றலின் குறைவேயாகும். ஆதலின் ஆற்றல் இன்மையை அடியோடு அகற்றுபவனே ஆண்மைத் தன்மையோடு அவனியில் வாழமுடியும்.

—விவேகானந்தர்.

27. ஆற்றல் அற்றவர்கள் எப்போதும் மன்னிப்பது இல்லை. மன்னிப்பென்பது ஆற்றலுடையோரின் இயல்பாகும். மன்னிக்கும் செயல் தான் போர்வீரனின் அணிகலமாகும்.

28. உண்மையான அன்பினை உரை அறிவிக்காது; தொண்டுதான் அறிவிக்கும்.

29. உழைத்து உண்ண வேண்டுமென்று கடவுள் மனிதனை உண்டாக்கினுர். உழைக்காமல் உண்பவர்களைத் திருடர்கள் என்று அக்கடவுள் உரைத்தார்.

—மகாத்மா காந்தியடிகள்,

30. ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்.

31. இறைவனே, உயிர்களின் வருத்தத்தைப் போக்கும் வரத்தை எனக்கு நீ கொடுக்க வேண்டும்; இதுவே எனது விருப்பமாகும்.

32. சிறிதும் வேறுபாடு கருதாது, எவ்வுயிரை யும் தமது உயிர்போல் எண்ணுகிறவர்களது உளத்தில்தான் இறைவன் இருக்கின்றார்.

—இராமலிங்க அடிகள்.

### வினாக்கள்

1. சமணமுனிவர்களது அமுதமொழிகளுள் இரண்டு கூறுக.

2. திருவள்ளுவரது அமுத மொழிகளுள் மூன்று கூறுக.

3. சீத்தலைச் சாத்தனார், இராமலிங்க அடிகள், ஏக நாதர்—இவர்களின் அமுத மொழிகளுள் ஒவ்வொன்று கூறுக.

4. இராமகிருஷ்ணர், விவேகானந்தர் — இவர்களது அமுதமொழிகளில் இரண்டு கூறுக.

### பயிற்சி

1. ஒருவன் தான் அழிய நேர்ந்தாலும் மேலோரது கெடுதலை எண்ணலாகாது,

கருத்துக் கெடாமல் மேற்கண்ட வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாக ஆக்குக.

2. தன்னைத் தஞ்சம் என்று அடைந்தவனைத் தன் உயிர் போல எண்ணிப் பாதுகாவாதவனும், ஒருவன் செய்த நன்றியை மறந்தவனும், கடவுளை இல்லை என்று கூறுகிறவனும் ஆகிய இவர்கள் நரகத்தில் விழுந்து வருந்துவார்கள்.

மேற்கண்ட வாக்கியத்தை "நரகத்தில் விழுந்து வருந்துபவர்கள் யாவரெனில்" என்று தொடங்கிப் பொருள் கெடாவகையில் அமைத்துக் காட்டுக.

3. தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் சர்வேசுவரனைத் தரிசிப்பார்கள்.

இந்த இரண்டு வாக்கியங்களையும் பொருள் கெடாவகையில் ஒரே வாக்கியமாக்குக.

### இலக்கணம்

#### பண்புப் பெயர் விகுதிகள்

பெயர்ச் சொற்களில் ஒருவகை பண்புப் பெயர் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த பண்புப் பெயர்கள் சில விகுதிகளால் அறியப்படும் அவ்விகுதிகளில் முக்கியமானது மை விகுதியாகும். இவ்விகுதியைப் பெற்றுள்ள பண்புப் பெயர்கள் மையீற்றுப் பண்புப் பெயர்கள் என்று கூறப்படும். அவற்றுள் சில பின்வருமாறு.

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை, திண்மை, உண்மை, நுண்மை.

பண்புப் பெயர்களுக்குரிய வேறு விகுதிகளாவன றி, து, பம், அம், று முதலியனவாம்.

(உ—ம்) நன்றி — றி, விகுதி
தீது — து, விகுதி
நுட்பம்— பம். விகுதி
நலம் — அம், விகுதி
நன்று — று, விகுதி

இப்பாடத்தில் வந்துள்ள பண்புப் பெயர்களை எடுத்தெழுதி, அவற்றிலுள்ள விகுதிகளையும் எடுத்துக் கூறுக.

---

# 5. வாதிமீர் நகரத்து வணிகன்

உலகில் உண்மைக் குற்றவாளிகள் சில சமயங்களில் தண்டனை அடையாமல் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். குற்றமொன்றும் செய்யாத நல்லவர்கள், குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டுத் தண்டனை அடைகிறார்கள். அங்ஙனம்

தண்டனையடைந்தவர்கள் இது ஏதோ நாம் செய்த பாவத்திற்காக இறைவனுல் கொடுக்கப் பட்டது; இதற்காகப் பிறரை நோவதில் பய னில்லை என்றெண்ணி, அடங்கியிருக்கவேண்டும். இங்ஙனமின்றி, தங்களுக்கு இன்னல் இழைத்தவர் மீது சினங்கொண்டு அவர்களுக்குத் துன்பம் செய்வது தக்கதல்ல. அங்ஙனம் அவர்கட்குத் துன்பம் செய்தலைக் காட்டிலும், நன்மை செய்து விடுவது சாலச் சிறந்தது. இக்கருத்தையே நமது வள்ளுவர் பெருந்தகை,

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்று தமது குறளிற் கூறுகின்ருர். "உனக்கு இன்னல் இழைத்தவர்களை நீ தண்டிக்க விரும்பு கிருயா? நல்லது! அதற்கு ஒரு வழி சொல்லுகி றேன் கேள்: நீ அவர்களுக்குத் திரும்ப நன்மை யைச் செய்துவிடு. பிறகு அவர்கள் உனக்குத் தீமை செய்தார்கள் என்பதையும், நீ அவர்களுக்கு நன்மை செய்தாய் என்பதையும் மறந்துவிடு!" என்பது இக்குறளின் கருத்து, இப்படிச் செய்வது எத்தகைய நன்மை பயக்கும் என்பதற்கு ஈண்டு ஒரு வரலாறு கூறுவோம்.

**வாதிமீர்** என்னும் ஒரு நகரத்தில் **இவான்** என் ெருரு வணிகன் இருந்தான். அவன் நற்குண முடையவன்; நேர்மையான நடத்தைஉடையவன். அவன் இருந்த நகரத்திற்கு ஏறக்குறைய முப்பது கல்தொலைவில் உள்ளதோர் ஊரில் குறிப்பிட்ட சிற்சில சமயங்களில் பெரிய சந்தை கூடுவது வழக்கம். இவானும் அச்சந்தைக்கு தன் சரக்கு களை வண்டியிலேற்றிச் சென்று விற்றுவிட்டு வரு வான்.

இங்ஙனம் ஒருகால் அவன் அச்சந்தைக்குச் சென்றுகொண்டிருக்கையில் வழியில் மற்ருெரு ஊரிலிருந்து அவ்வாறே அச்சந்தைக்குச் செல்லும் மற்ருெரு வணிகனும் அவனோடு சேர்ந்துகொண்டான். இருவருமாகச் சில கல் தொலைவு சென்றதும் இரவு அணுகியது. அப்போது அவர்கள் சென்ற சாலை வழியில் வழிப்போக்கர் விடுதி ஒன்று இருந்தது. அதில் அவர்கள் தங்கலாயினர்.

அவர்கள் ஒருவருக்கொருவர் முன்னரே அறிமுகமானவர்களாய் இருந்தபடியால், இருவரும் இரவில் சிறிதுநேரம் அளவளாவிப் பின் அங்கோர் அறையில் படுத்துத் தூங்கினர். அன்றிரவு நடுயாமத்தில் கள்வன் ஒருவன் அவ்விடுதியை அடைந்தான்! இவனுடன் அளவளாவிய வணிகனை ஒரு கத்தியால் குத்திக் கொன்ருன்; அவனிடமிருந்த செல்வத்தைக் கவர்ந்துகொண்டு, கத்தியை அருகிலிருந்ததொரு மூட்டையில் சொருகி மறைத்துவிட்டுச் சென்று விட்டான். அம் மூட்டை இவனுடைய மூட்டையாகும்.

மிகுந்த தூக்கத்தால் இவான் இச்செய்திகளை அறியவில்லை. அவன் மறுநாள் அதிகாலையில் விழித்தெழுந்தான். அப்பொழுதே புறப்பட்டால் வெயிலேறுமுன் சில கல் தொலைவேனும் சென்றுவிடலாம் என்றெண்ணினுன். மற்ற வணிகனையும் கூட்டிப்போவதானுல், பயணத்துக்குத் தவக்கம் ஏற்படலாம். எனக் கருதி, அவனைப்பற்றிக் கவனியாமல் தன்வண்டியை ஓட்டி அவ்விடுதியை விட்டுப் புறப்பட்டுச் சென்ருன்.

உச்சிப்பொழுது வந்த காலத்தில், அவன் ஓர் உணவு விடுதியை அடைந்து, உணவுண்டு இளைப்பாறி இருந்தான். அப்போது அரச காவலர் சிலர் வந்து, அவனைக்குறித்து விசாரித்து அவனைச் சிறைப்படுத்தினர். அவன் மூட்டைகளைச் சோதனை போட்டு இரத்தந்தோய்ந்த கத்தியைக் கண்டெடுத்தனர். இவற்றைக் கண்ட இவான் திகைத்துப் போனான். பிறகு நடந்த விசாரணையில், அவன் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு, இருபத்தைந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை அடைந்தான்.

இருபத்தைந்து ஆண்டுகள் கடுங்காவல்! அவன் வாழ்நாள் முழுவதுமே பாழாகிவிட்டது! சிறையினின்று விடுதலை பெறுவதற்குள் அவன் உயிரே உடலினின்றும் விடுதலை பெற்று விடவும் கூடும். உயிர் போகாவிட்டால் முதுமையடைந்து அழகிழந்து, வலியிழந்து சிறைப்பட்டவன் என்னும் அவமானத்தோடு நடைப்பிணமாய்த்தான் இருக்க நேரிடும். இவ்வாறு எண்ணிய அவன், வருத்தமும் சினமும் ஒருங்கேயடைந்தான். யாரை நோவது? தன்னை நொந்தான். தன் விதியை நொந்தான்; கடவுளை நொந்தான்; சதிகாரனை நொந்தான். சிறையில் செக்கிழுத்தல், கல்லுடைத்தல் முதலிய கடின உழைப்பால் உடல் சோர்வடைந்தபோது, மனம் கொந்தளித்தது.

ஆனால் இவையெல்லாம் சில ஆண்டுகளே நீடித்தன. அதன்பின், காலஞ் செல்லச் செல்ல அவன் மனநிலை மாறியது. உடல்வலிமை குறைய மன அமைதி மேலோங்கியது ஆயிற்று; இன்னும் சில திங்களில் அவனை விடுதலை செய்துவிடு

வார்கள் என இருந்த காலத்தில், அவன் இன்ப துன்பங்களை ஒப்ப நோக்கும் தத்துவஞானி ஆகி விட்டான் என்றே கூறவேண்டியிருந்தது.

இந்நிலையில், அச்சிறைச்சாலைக்குச் சில புதிய குற்றவாளிகள் கொணரப்பட்டனர். அவர்களில் ஒருவன் இவான் அடைபட்டிருந்த அறைக்கு அடுத்த அறையில் அடைக்கப்பட்டான். இதன் பின் ஒருநாள், அச்சிறைச்சாலையில் அடைபட்டி ருந்த குற்றவாளிகள் சிலர் ஒருங்குகூடி அளவளா வும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்கூட்டத்துள் இவா னும், புதிதாக வந்த குற்றவாளியும் சேர்ந்திருந்த னர். அப்போது அவர்களிடையே நடந்த உரை யாடலில், பேச்சுவாக்கில் புதியவன் தன் சமர்த் தைத் தானே வியந்து பேசுவானாய், முன் ஒரு வழிப்போக்கர் விடுதியில் தான் ஒருவனைக் கொலை செய்து விட்டு, அக்குற்றத்தை மற்றொருவன் மீது சுமத்திய விதத்தைப் பற்றிக் கூறினான்.

உடனே இவானுக்குத் தன் வாழ்நாளைப் பாழாக்கிய சதிகாரன் இவனே என்பது விளங்கி விட்டது. அச்சதிகாரன்மீது கடுஞ்சினம் மூண் டது. என்றாலும், அப்போதைய அவனது மனப் பண்பு உடனே அச்சினத்தை ஆற்றியது. இறை வன் யான்புரிந்த ஏதோ பாவச் செயலுக்காக எனக்கு இத்தண்டனை யளித்திருக்க, வெறுங் கருவி மாத்திரமாய் நின்ற இவன்மீது யான் சினங்கொள்ளுதல் பொருந்துமோ? இவ்வாறு எண்ணி அவன் வாளாவிருந்துவிட்டான்.

சில நாட்கள் கழிந்தன. புதிய கள்வன், அச்சிறைச்சாலையினின்று தப்பிச் செல்ல ஒருவருமறியாமல் ஒருவழியுண்டாக்கி வரலானான். இச்செய்தி இவானுக்கு மட்டும் தெரியவந்தது. சதிகாரன் இவானை அடைந்து, "நீ இச்செய்தியை வெளியிட்டால் நான் உன்னைக் கொன்றுவிடுவேன்!" எனக் கூறி அச்சுறுத்தினான். அதற்கு இவான், "நீதான் முன்னமேயே என்னைக் கொன்றுவிட்டாயே! இனிக் கொல்லுவதற்கு என்ன இருக்கிறது?" என்றுகூறிச் சத்திரத்தில் அவனால் வஞ்சிக்கப்பட்டவன் தானே என்பதை அவனுக்கு விளங்கவுரைத்தான். புதியவன் ஒன்றும் பேசாமல் சென்று விட்டான்.

இரண்டொரு நாள் ஆயிற்று. சிறைச்சாலை அதிகாரிகள் கள்ளவழி செய்யப்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர். அதை உண்டாக்கியவர் யார் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் சிறையில் அடைப்பட்டிருந்த எல்லாரையும் விசாரித்தனர். இவானைப்பற்றி அவர்கள் நல்லெண்ணங் கொண்டிருந்தனர். அவனையடைந்த அவர்கள், "உனக்கு ஏதாவது இதைப்பற்றித் தெரியுமா?" எனவினவினர்.

உண்மையைக்கூறிவிடலாமா என இவான் ஒரு கணம் சிந்தித்தான். மறுகணம், அப்படிச் செய்தால் அக்குற்றவாளியின் உயிர்போகிற வரையில் அவனை அடிப்பார்களே என்னும் இரக்கம், அவன் மனத்தையடைந்தது. மனப் போராட்டம் ஒரு கணம். அடுத்த நொடியில் காட்டிக் கொடுப்பதில்லை என்ற துணிவு. முடிவாக அவன், தனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று கூறி விட்டான்.

சிறையதிகாரிகள் இவனை வினவும்போது, அக்குற்றம் செய்த சதிகாரன் இவானின் முகத்தையே நோக்கியவாறு இருந்தான். அவன் தன்னைக் காட்டிக்கொடுக்கவில்லை என்பதை அறிந்ததும், அவன் மன நிலை மாறியது. இயற்கையில் மிகக் கொடியவனுகிய அவன், மனம்மாறப் பெற்முன். கழிவிரக்கம் அவன் மனத்தில் வந்து தங்கலாயிற்று. தான் முன்செய்த தீச்செயல்களுக்காகவெல்லாம் அவன் வருந்தலானுன்.

பகைவனைப் பழிவாங்காமல் அவனுக்கு நன்மை செய்தான் இவான். அது பகைவனை நல்வழிப்படுத்தி விட்டது. அங்ஙனமின்றிப் பகைவனைப் பழி வாங்கும் நிமித்தம் துன்புறுத்திஞல், மேலும் மேலும் பகை வளரும்; பகைமூண்ட இரு திறத்தாரும் கெடுவர். தமக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டித்தலானது, அத்தீயோர்நாணுமாறு அவர்களுக்கு நன்மை செய்து விடுதலேயாம் என்னும் நாயனுர் கூற்றின் கருத்து, இவ்வரலாற்றினின்று புலனுகின்றதன்றே.

அருஞ்சொற்பொருள்

நோவது-நொந்துகொள்வது, வெறுத்துப் பேசுவது; "இன்ன......விடல்"-துன்பம் செய்தவர்களைத் தண்டிக்கும் விதமாவது, அவர் நாணுமாறு அவர்க்குச் சிறந்த நன்மை செய்து, பின் அவர் செய்த தீமையையும், அதற்குப்பதிலாகத் தாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலாம். நேர்மை-ஒழுங்கு; நடுயாமம்-நடு இரவு; தொலைவு;-தூரம்; அளவளாவுதல்-மகிழ்ச்சியோடு உரையாடுதல்; சதிகாரன்-வஞ்சனையாகத் தீங்கிழைத்தவன்; தத்துவ ஞானி-உள்ளத்தை உள்ளவாறு அறிந்தவன்; கழிவிரக்கம் (கழிவு+இரக்கம்) தான் முன் செய்த தீங்குகளுக்காக வருந்துதல்.

### வினக்கள்

1. துன்பம் செய்தவர்களைத் தண்டிக்கும் விதத்தைப் பற்றி வள்ளுவர் கூறியிருப்பது என்ன?

2. வாதிமீர் நகரத்து வணிகள் சிறைப்படக் காரணம் என்ன?

3. வாதிமீர் நகரத்து வணிகன் தனக்குத் தீங்கிழைத் தவனை என்ன நிலையில் கண்டான்?

4. வணிகன் தனக்குத் தீங்கிழைத்தவனுக்கு நன்மை செய்த விதம் யாது?

5. வணிகன் செய்த நன்மையால் ஏற்பட்ட விளைவு யாது? இக்கதையால் அறியப்படும் நீதி யாது?

### பயிற்சி

1 "இன்னுசெய்தாரை......விடல்" என்னும் குறளின் பொருளை விளக்கத்தக்க கதை ஒன்றைச் சுருக்கி எழுதுக.

2. நடுயாமம், சதிகாரன், தத்துவ ஞானி, கழிவிரக்கம்- இச்சொற்களை வாக்கியங்களில் அமைக்க.

3. இங்ஙனம் ஒருகால் அவன் அச்சந்தைக்குச் சென்று கொண்டிருக்கையில், வழியில் மற்றொரு ஊரிலிருந்து அவ்வாறே அச்சந்தைக்குச் செல்லும் மற்றொருவனும் அவனோடு சேர்ந்துகொண்டான். — இவ்வாக்கியத்தை எத்தனை சிறு வாக்கியங்களாகப் பிரிக்கக் கூடுமோ, அத்தனை சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

## இலக்கணம்

### தொழிற்பெயர் விகுதிகள்

பெயர்ச் சொற்களில் தொழிற்பெயர் ஒருவகை என்பதை நீங்கள் அறிவீர்கள். தொழிற்பெயர்கள் சில விகுதிகளை ஏற்றுவரும்; அவ்விகுதிகள் தொழிற்பெயர் விகுதிகள் எனப் படும். அவையாவன, தல், அல், அம், கை, தி, பு, காடு, பாடு, உள் முதலியன.

இவ்விகுதிகள் பொருந்திவரும் விதம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| நடத்தல் | — | தல் | விகுதி |
| ஆடல் | — | அல் | ,, |
| ஓட்டம் | — | அம் | ,, |
| இருக்கை | — | கை | ,, |
| மறதி | — | தி | ,, |
| நட்பு | — | பு | ,, |
| சாக்காடு | — | காடு | ,, |
| கோட்பாடு | — | பாடு | ,, |
| விக்குள் | — | உள் | ,, |

இப்பாடத்தில் வரும்தொழிற் பெயர்களை எடுத்தெழுதி அவற்றின்விகுதிகளையும் குறித்துக்காட்டுக.

---

# 6. மார்க்கோபோலோவும் தமிழ் நாடும்

சங்க காலத்தில் நந்தமிழ்நாடு கிரீஸ், ரோம், முதலிய மேல்நாடுகளுடன் வாணிகம் புரிந்து வந்தது என்பதைச் சங்க நூல்களால் அறிகிறோம். அக்காலத்திலும், அதற்குப் பின்னரும், வேற்று நாட்டு யாத்திரிகர் பலர் நம்தமிழ்நாட்டுக்கு வந்து, இதன் சிறப்பைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார்கள். அவர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள், நம் பண்டைத் தமிழ் நாட்டு வரலாற்றை அறிய ஒருவாறு பயன்படுகின்றன. இவ்வாறு நந்தமிழ் நாடடைந்து, இங்குள்ள செய்திகளை உற்று நோக்கிக் குறிப்பெழுதி வைத்தவர்களில் **மார்க்கோ போலோ** என்பவரும் ஒருவராவர். அவரது வரலாற்றையும் அவர் நந்தமிழ் நாட்டைப்பற்றி

எழுதிவைத்துள்ள குறிப்புக்களில் சிலவற்றை யும் இதனடியிற் காண்போம்.

மார்க்கோ போலோ இத்தாலிய நாட்டிலுள்ள வெனிஸ் நகரத்தில், கி. பி. 1254 ஆம் ஆண்டு நிக்கோலோ போலோ என்பவரது மகனுய்த் தோன்றினுர். நிக்கோலோ போலோ அந்நகரத்து வணிகருள் ஒருவராவர். அவரும் அவரது கூட்டாளியான மாப்பியோ என்பவரும் சீன அரசரான குப்ளாய்க்கான் என்பவரைக் காண விரும்பி அவர்பால் சென்றனர். அவ்வரசரும் இவர்களை வரவேற்று உபசரித்து ஆதரித்து வரலானுர். சில காலங் கழித்து அவ்வரசர் அவர்களை ஒரு காரியமாக ரோம் நகருக்கனுப்பினுர். அப்போது அவர்கள் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று சில நாளிருந்துவிட்டு, பிறகு ரோமிற்குச் சென்று, அங்குச் செய்தற்குரிய காரியத்தையும் செய்து முடித்துக்கொண்டு, மீண்டும் சீனத்திற்குப் பயணமாயினர். அப்போது நிக்கோலோ போலோ, பதினேழு வயதாயிருந்த தமது மகன் மார்க்கோ போலோவையும் உடனழைத்துச் சென்றுர்.

மார்க்கோ போலோ தமது இனிய தோற்றத்தாலும், பணிவாலும், சாதுரியப் பேச்சாலும் சீன அரசரது மனத்தைக் கவர்ந்தார். அதனுல் அவ்வரசர் அவருக்குத் தம் அரசாங்கத்தில் ஓர் அலுவலைக் கொடுத்தார். விரைவில் உயர்பதவி யடைந்த அவர், அந்நிய நாட்டு அரச தூதர் ஆனுர். அப்பதவியில் அவர் பதினேழாண்டுகள் இருந்தார். அக்காலத்தில் அவர் பற்பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து அவற்றின் செய்திகளை நுணித்தறிந்தார்.

அக்காலத்திலேதான், அவர் நந்தமிழ்நாட்டுக்கும் வந்து பல செய்திகளை அறிந்துகொண்டார்.

இவ்வாறிருக்கையில், சீன அரசர் மகளுக்கு மணவினை நேர்ந்தது. மணமகன் பாரசீக நாட்டு அரசனுவான். மணமகளைச் சீன நாட்டிலிருந்து பாரசீக நாட்டுக்கு அழைத்துக்கொண்டு செல்ல வேண்டிய அவசியம் நேரிட்டது. அப்போது, அவளுக்கு யாதொரு துன்பமும் நேராமல், அங்குக் கொண்டு சேர்க்க வல்லவர் மார்க்கோ போலோவே எனத் தேர்ந்த அவ்வரசர், அப்பணியை மார்க்கோ போலோவிற்கு அளித்தார். அவ்வாறு பாரசீகம் சென்ற அவர், தம் சொந்த ஊரையடைந்து சிலநாள் தங்கினுர். அப்போது சீன அரசர் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைக்கவே, சீனத்திற்குச் செல்லாமல் தம் ஊரிலேயே வசிப்பாராயினர்.

அப்போது வெனிஸ் நாட்டின்மீது வேற்று நாட்டினர் போர் தொடுக்கலாயினர். அக்காலை, அந்நகரத்து வயது வந்த ஆண்மக்கள் யாவரும் போர் வீரராய்ப் போருக்குச் செல்லவேண்டியதாயிற்று. அவ்வாறு போருக்குச் சென்ற மார்க்கோ போலோ, பகைவரால் சிறைப்பிடிக்கப்பட்டு, மூன்றுண்டுகள் சிறைவாசமிருந்து, பின் விடுவிக்கப்பட்டுத் தம் ஊர் அடைந்தார்.

சிறையில் மார்க்கோ போலோ வீண் காலம் போக்கவில்லை. தமது பிரயாண வரலாறுகளை ஒரு நூலாக எழுதலானுர். அவரது நண்பரும், பைசா நகரத்தவருமான ரொஸ்தி சொல்லோ என்பவர் அவ்வகையில் அவர் கூறியவைகளை எழுத்தில் எழுதி உதவி செய்தார்.

சிறையைவிட்டு வெளிவந்த பின், அவர் டொனுடா என்னும் ஒரு மங்கையை மணம் புரிந்து கொண்டு இல்லறமாம் நல்லறத்தை இனிது நடத்திவரலானுர். அவர் சீன அரசர்பால் அலுவல் பார்த்த காலத்தில், அவ்வரசர் மனமுவந்தளித்த பொன்னும் மணியுமாகிய செல்வம், இக்காலத் திற்கு நன்கு பயன்படலாயிற்று. இவ்வாறு சிறப் பாகப் பல்லாண்டுகள் வாழ்ந்து கி. பி. 1324-இல் இறைவனடி அடைந்தார். இனி, இவர் நந்தமிழ் நாட்டைப்பற்றி எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் சிலவற்றைக் காண்போம்.

**தமிழ் நாடு:** மார்க்கோ போலோ நந்தமிழ் நாட்டை **மாபர் நாடு** என்கின்ருர். தமிழ் நாட்டில் **மகாபலிபுரம்** பண்டைக்காலத்தில் சிறந்த துறை முகப் பட்டினமாக விளங்கியது. அப்பெயரே, மாபர் எனத் திரிந்து, தமிழ்நாட்டிற்குப் பெயராய் மேலைநாட்டவரால் வழங்கப்பட்டிருத்தல் வேண் டும் என, சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வேறு சிலர் வேறு வகையாகவும் கூறுவர். எப் படியிருந்தாலும் மார்க்கோ போலோ எழுதி வைத் துள்ள குறிப்புக்கள் மாபர் நாட்டைத் தமிழ் நாடு எனவே எண்ணச் செய்கின்றன.

**மாபர் நாடு:** செய்லான் (இலங்கைத்) தீவை விட்டு மேற்கே அறுபது மைல் கடலில் சென்ருல், மாபர் நாட்டைக் காணலாம். அது தீவல்ல; பரந்த இந்தியாவின் ஒரு பகுதியேயாகும். அதனை நான்கு அரசர்கள் ஆண்டு வருகிருர்கள். அவர் களுள் **செந்தர் பாண்டி** (செளந்தர பாண்டியன்) என் னும் அரசன் சிறந்தவனுவான். இவன் ஆளும் நாட்டில் முத்துக்குளிக்கும் இடம் உண்டு. அது

ஒரு வளைகுடாவாகும். இங்குக் கடலின் ஆழம் பத்து அல்லது பன்னிரண்டு **பேதம்ஸ்** (Fathoms) இருக்கும். (ஒரு 'பேதம்' என்பது ஆறு அடியாகும்.) இக்குறிப்பால் மாபர் நாடு என்பது, தமிழ் நாட்டைக் குறிப்பிடுவதைக் காண்க.

**முத்துக் குளித்தல்;** முத்துக்குளித்தல் மே மாதம் நடுவில் நடக்கும். அரசனிடம் அனுமதி பெற்றே இதைத் தொடங்கவேண்டும். வணிகர் பலர் இவ்வாறு அனுமதிபெற்று இச்செயலில் ஈடுபடுவர். அவர்கள் சிறிதும் பெரிதுமான பல கப்பல்களைச் சித்தம் செய்து கொள்வர். அனுபவம் பெற்ற முத்துக் குளிப்பவர்களை கூலிக்கு அமர்த்திக் கொள்வர். கப்பல்கள் நடுக் கடலில் நங்கூரம் பாய்ச்சிநிற்க அனுகூலமுள்ளவையாய் இருக்கும். முத்துக் குளிப்பவர்களுக்குச் சுருமீன் முதலியவற்றால் தீங்கு நேராமல் இருப்பதற்காக, அங்குள்ள பார்ப்பன மந்திரவாதிகள் மந்திர வித்தையைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் பகலில் மட்டுமே அவ்வித்தையைப் பயன்படச் செய்கின்றனர். இதனால் இரவில் திருட்டுத்தனமாக முத்துக் குளிப்பதும், முத்துக் குளிக்குமிடத்தில் திருட்டு நடப்பதும் தவிர்க்கப்படுகின்றன. முத்துக் குளிப்பவர் நீரில் மூழ்கி மூச்சுத் தாங்கும் வரையில் இருந்து, சிப்பிகளைச் சேகரித்துக் கொண்டு மேல் எழுகின்றனர். இவ்வேலையை இவர்கள் மிகவும் ஊக்கமுடன் செய்கின்றார்கள்.

**மாபர் நாட்டுக் குடிகளும் அரசனும் :** மாபர் நாட்டுக்குடிகள் மானம் காக்கும் அளவிற்கு மட்டும்

ஆடை அணிந்துள்ளனர். அவர்களைப்பெரும்பா லும் ஆடையற்றவர் என்றே சொல்லலாம். அரச னும் அதிக ஆடை உடுத்துவதில்லை. ஆனால் பொன்னாலும் நவமணிகளாலும் ஆன ஆபரணங் கள் பலவற்றை அணிகிறான். முக்கியமாக அவன் 104 மணிகளாலான நவரத்தினமாலை யொன்றை அணிகிறான். அது செபத்திற்குரிய மாலையாகும். அதிலுள்ள மணிகளை உருட்டிக்கொண்டே அவன் மந்திரம் செபிக்கிறான். அம்மந்திரம் பகவுதா என்பதே. இங்கு 108 என்பது 104 எனத் தவறாகக் கூறப்படுகிறது என்றும் 'பகவுதா' என்பது 'பகவான்' என்பதைக் குறிக்கின்றது என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

**பணியாளர்:** அரசனுக்குப் பல பணியாளர் உண்டு. அவர்கள் இரவு பகல் எந்நேரமும், அரண்மனை, நீதித்தலம் முதலிய எவ்விடங்களிலும் அரசனைப் பாதுகாத்தல் வேண்டும். அரசனிறந் தால் அவர்கள் அவனது ஈமத்தீயில் விழுந்து எரிந்து சாம்பலாவர். இதனால் மறுபிறப்பிலும் அவர்கள் அரசனுக்குப் பணியாளராய்ப் பிறப்பார் கள் என்று நம்பப்படுகிறது.

**குதிரை வாணிகம்:** மாபர் நாட்டில் குதிரைகள் தாமே பிறந்து வளருமாறு விடப்படுவதில்லை. அர சனும் அவனது மூன்று சகோதர அரசர்களும் **ஆர்மஸ், தியூபார், பேசர், ஆதென்** என்னும் துறை முகங்களிலுள்ள வணிகர்களிடமிருந்து குதிரை களை வாங்குகிறார்கள். குதிரை ஒன்றுக்கு 500 '**சாக்**' பொன்னைக்கொடுத்து 5000 குதிரைகளை

வாங்குகிருர்கள். 'சாகி' என்பது ஒன்றரை ரூபாய் பெறுமானமுள்ள ஒரு நாணயமாகும். சரிவரக் காப்பாற்ற இயலாத காரணத்தால் அவைகளில் பெரும்பாலானவை இறந்து விடுகின்றன. 300 குதிரைகளே எஞ்சுகின்றன. குதிரைகளுக்கு இறைச்சி கலந்த அரிசிச் சோற்றையும், வேறு சிலவற்றையும் தீனியாகக் கொடுக்கிருர்கள். ஏனெனில் இங்கே அரிசி தவிர வேறு தானியங்கள் பயிரிடப்படுவதில்லை.

**உடன்கட்டையேறல்:** இறந்தவனுடைய உடலை அவனுடைய சுற்றத்தார் வாத்திய ஒலியோடும் ஆரவாரத்தோடும் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லுகிருர்கள். அங்கு அவனை எரிக்கும்போது, அவன் மனைவியும் அவன்மீதுள்ள காதலின் திண்மையால் அத்தீயில் விழுந்து எரிந்துபோகிருள். சமூகம் இதனைப் பெரிதும் பாராட்டுகிறது.

**கொலைத் தண்டனை நிறைவேறும் விதம்:** கொலைத் தண்டனை பெற்ற குற்றவாளி நீதிமன்றத்தை விட்டுக் கொலைக்களத்திற்குக் கொண்டு செல்லப் பட்டதும், அவன் கையில் பன்னிரண்டு கத்திகள் கொடுக்கப்படுகின்றன. அவன், "என் தெய்வத்திற்காக நான் என்னைப் பலியாக்குகிறேன்" என்று உரக்கச் சொல்லுவான். பிறகு இரண்டு கத்திகளை எடுத்து இரண்டு தொடைகளிலும் குத்திக்கொள்ளுவான். அப்பால் வேறு இரண்டு கத்திகளால் இரண்டு கைகளிலும் குத்திக்கொள்வான். பிறகு மார்பு, வயிறு முதலிய வேறு சில அவயவங்களில் ஒவ்வொரு கத்தியாக எடுத்துக் குத்திக்கொள்வான். கடைசியாக எஞ்சியுள்ள ஒரு கத்தியால் தன் இருதயத்தைக் குத்திக் கொண்டு இறப்பான்.

மார்க்கோ போலோ கூறும் பழக்க வழக்கங்களில் சில, தமிழ்நாட்டு வழக்கங்கட்கு மாருக இருக்கின்றன. ஆயினும் பலசெய்திகள் ஒத்துவருவதால், அவன் நம்நாட்டை அடைந்ததும், அங்குள்ள செய்திகளை ஆய்ந்ததும் உண்மை யென்பதில் ஐயமில்லை. இவ்வாறு வேற்று நாட்டவரைத் தன்பால் ஈர்த்துத் தன்னைப்பற்றிக் குறிப்பெழுதுமாறு நந்தமிழன்னை செய்தது நமக்குப் பெருமையைத் தருவதாகுமன்ருே ?

### வினுக்கள்

1. மார்க்கோ போலோ யாவர் ? அவர் யாரிடம் என்ன அலுவல் பார்த்தார் ?

2. அவர் தம் பிரயாண வரலாறுகளை எப்போது எழுதினுர் ? அதற்கு உதவியாயிருந்தவர் யார் ? என்ன உதவி செய்தார் ?

3. தமிழ் நாட்டிற்கு அவர் குறித்துள்ள பெயர் யாது ? அப்பெயர் எப்படிப் பொருந்தும் ?

4. முத்துக் குளித்தலைப் பற்றி அவர் கூறுவதென்ன ?

5. நம் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றி அவர் கூறியிருப்பதென்ன ?

### பயிற்சி

1. மார்க்கோ போலோவின் வரலாற்றை ஒரு கட்டுரையாக வரைக.

2. தமிழ்நாட்டில் பிரயாணம் செய்த வேறு பிரயாணி யாராவது ஒருவரது வரலாற்றைத் தெரிந்தால் கூறுக.

3. நம்நாட்டு வழக்கங்களாக மார்க்கோபோலோ கூறியவைகளில் பொருந்தாதன யாவை என அறிந்து கூறுக.

4. செய்லான், ரொஸ்திஸெல்லோ, டோனுடா — குறிப்பு வரைக.

### அருஞ்சொற்பொருள்

யாத்திரிகர்-பயணம் செய்பவர்கள்; கூட்டாளி-நண்பன்; சாதுரியம்-புத்தி நுட்பம்; பணி வேலை, அலுவல்; மனமுவந்து (மனம் + உவந்து) - மனம் மகிழ்ந்து; அனுமதி - சம்மதம்; இசைவு; தவிர்க்கப்படுகிறது-நீக்கப்படுகிறது; நவரத்தினம் ஒன்பதுவகை ரத்தினங்கள் (அவை கெம்பு, மரகதம், வயிரம் நீலம், கோமேதகம், புட்பராகம், மாணிக்கம், பவளம், முத்து என்பன); ஆய்ந்து-ஆராய்ந்து.

### இலக்கணம்

## செயப்படுபொருள் குன்றியவினை, குன்றுவினை

**பின்கண்டவைகளைக் கவனி:**

வந்தான் - இவ்வினைகளைப் பொருத்து "யாரை வந்தான்?" "எதை வந்தான்" என்று கேள்வி கேட்க இயலாது; அதாவது இந்த வினைக்குச் செயப்படுபொருள் கிடையாது.

இவ்வாறே சென்றான், நடந்தான், ஓடினான், நின்றான், முதலிய வினைகளுக்கும், செயப்படுபொருள் இல்லாமல் இருத்தலை அறிக. இத்தகைய வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினைகள் எனப்படும் (குன்றிய—குறைந்த அதாவது இல்லாத).

கண்டான் - இவ்வினை 'யாரைக் கண்டான்'? "எதைக் கண்டான்?" எனக் கேள்வி கேட்க இடம் தருகிறது. அதாவது இந்த வினைக்குச் செயப்படுபொருள் உண்டு. இவ்வாறே படித்தான், சொன்னான், கேட்டான், செய்தான், முதலிய வினைகளுக்கும் செயப்படுபொருள் உண்டு. இத்தகைய வினைகள் செயப்படுபொருள் குன்றா வினைகள் எனப்படும்.

1. இப்பாடத்திலுள்ள வினைகளில் பத்தை எடுத்தெழுதி அவை செயப்படுபொருள் குன்றிய வினைகளா, குன்றாவினைகளா எனக்கூறுக.

2. செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினை இவைகட்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்களாக முறையே ஐந்தைந்து கூறுக.

# 7. தீக்குச்சித்தொழில்

இரவில் நமக்கு வெளிச்சத்தைக் கொடுப்பன பலவகை விளக்குகளாம். இவ்விளக்குகளைப் பொதுவாக எண்ணெய் விளக்குகள். மின்சார விளக்குகள் என இருவகையாகப் பிரிக்கலாம். எண்ணெய் விளக்குகளை எரியச் செய்வதற்கு, அவற்றிலுள்ள திரியில் தீக்குச்சியைக் கொளுத்தி வைத்து அதைச் சுடர் விட்டு எரியச் செய்கின்றோம். நமது நாட்டில் தற்போது இதுவே நெருப்புண்டாக்கும் வகையாக இருக்கிறது,

நெருப்புண்டாக்குவதற்குக் காரணமான இத் தீக்குச்சி, சமீபகாலத்தில்தான் கண்டுபிடிக்கப் பட்டது. இது கண்டுபிடிக்கப்படுவதற்கு முன், மக்கள் நெருப்புண்டாக்குவதற்கு என்ன செய் தார்கள் என்று அறிய ஆவலாயிருக்கிறதல்லவா? அக் காலத்தில் தீக்கடைக் கோலாலும், சிகிமுகிக்கல் என்னும் ஒரு வகைக் கல்லாலும் நெருப்பை உண் டாக்கினார்கள். தீக்கடைக்கோலாவது, இரண்டு மரக்கட்டைகளேயாம். இவற்றை ஒன்றுடன் ஒன்றைத் தேய்த்தால் நெருப்புண்டாகும். சில வகை மரக் கட்டைகள்தான் தீக்கடைக் கோலாக உதவும். சிகிமுகிக்கல் என்பது ஒரு வகை உறுதி யான கல். இக்கல்லில் இரண்டை எடுத்து ஒன்றுடன் ஒன்றை வைத்துத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும்.

தீக்கடைக் கோலாலும் சிகிமுகிக் கல்லாலும் நெருப்பை உண்டாக்குவது கடினமாகவும், கால தாமதத்திற்கு இடமானதாகவும் இருந்ததுபற்றி,


விஞ்ஞானிகள் விரைவில் தீயுண்டாக்கும் வகையை ஆராய்ந்தார்கள். அதன் பயனே தீக்குச்சி.

தீக்குச்சி ஏறக்குறைய இரண்டங்குல நீள முள்ளது. அதன் நுனியில் உருண்டையாக ஏதோ மருந்து பொருத்தப் பெற்றுள்ளது. பல தீக்குச்சிகள் ஒரு சிறு பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இது தீப்பெட்டி எனப்படுகிறது. இப் பெட்டியின் ஒடுக்கமான இரண்டு பக்கங்களில் ஏதோ மருந்து பூசப்பட்டிருக்கிறது. தீக்குச்சியில் மருந்துள்ள நுனியை, தீப்பெட்டியின் மருந்து தடவப்பட்ட பக்கத்தில் வைத்துத் தேய்த்தால், உடனே தீக்குச்சியின் அந்த நுனிப் பாகம் தீப்பற்றி எரிகிறது. தீக்குச்சியும் தீப்பெட்டியும் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என இப்போது ஆராய்வோம்.

தீக்குச்சியும் தீப்பெட்டியும் பெருமரம் என்னும் ஒரு வகை மரத்தால் செய்யப்படுகின்றன. சிறு இயந்திரங்களைக் கொண்டு இம்மரக் கட்டைகளைச் சிறு குச்சிகளாகவும் அட்டை போன்ற மெல்லிய துண்டுகளாகவும் ஆக்குகிறார்கள். குச்சிகளின் நுனியில் மருந்தைப் பொருத்தி தீக்குச்சி ஆக்கப்படுகிறது. அட்டைபோன்ற பலகைத் துண்டுகளைக் கொண்டு தீப்பெட்டி செய்யப்படுகிறது. இவற்றில் அமைக்கப்படும் மருந்துகளைத் தயார் செய்வது எப்படி என இனி ஆராய்வோம்.

குச்சிகளைத் தயாரித்தபின்னர், அவை ஒரே அளவு உயரமாக இருக்கும்படி அவற்றைப்பல சட்டங்களில் முடுக்கி வைத்துக் கொள்ளுவார்கள். தீக்குச்சிகளின்மேல் பொருத்தப்படும்,

மருந்து, பொடாஸ், ஆண்டிமனி. டிரைஸல்பேட்




பரபின் மெழுகு, வஜ்ரம் ஆகியவைகளைக்கொண்டு

தயாரிப்பதாகும். இவற்றுள் வஜ்ரம் குச்சியின் மீது மருந்து உறுதியாக ஒட்டிக் கொள்வதற்காக சேர்க்கப்படுவது. மற்ற மூன்றும் தீப்பற்றிக் கொள்வதற்காகச் சேர்க்கப்படுவன. அவற்றுள் பரபின் மெழுகு, விரைவில் தீப்பற்றிக்கொள்வ தற்காகச் சேர்க்கப்படுவது. இம்மருந்து தயாரிக் கும் விதமாவது.

முதலில் வஜ்ரத்தைத் தண்ணீரில் நன்ருக ஊறவைப்பார்கள். பிறகு எடுத்துக் கொண்ட வஜ்ரத்தின் அளவைப்போலப் பத்து மடங்கு தண்ணீரில் அவ்வஜ்ரத்தைப் போட்டு அடுப்பி லேற்றிக் காய்ச்சுவார்கள். சூடேறியதும் வஜ்ரம் நீருடன் கலந்து குழம்பு போலாகும். இக்குழம்பில் பொடாஷ், ஆண்டிமனி, டிரைஸல்பேட் இரண்டையும் போட்டுக் கலக்கி, அக்கலவையை ஒரு தட்டில் ஊற்றி வைத்துக்கொள்வார்கள். இப்படி ஊற்றப் பட்ட கலவையின் ஆழம், தீக்குச்சியின் நுனியில் மருந்து பொருந்தியிருக்க வேண்டிய அளவுக்குச் சமமாகும். பிறகு பரபின் மெழுகை உருக்கி நீர்போலாக்கி, அதை வேறு ஒருதட்டில் அதே அளவு ஆழம் இருக்குமாறு ஊற்றி வைத்துக் கொள்வார்கள். இதன் பின்னர்ச் சட்டங்களில் முடுக்கி வைத்துள்ள குச்சிகளை, முதலில் பரபின் மெழுக்கு நீரிலும், அப்பால் வஜ்ரக்குழம்பிலும் தோய்த்து, அக்குச்சிகளின் நுனியில் மருந்தை ஒட்டிக்கொள்ளச் செய்து, அவற்றை அச்சட்டங் களிலேயே உலரவைப்பார்கள். உலர்ந்ததும் அவை தீக்குச்சிகளாகும்.

இனிப் பெட்டிகளின் பக்கங்களில் பூசப்படும் மருந்தைப் பற்றிக் கவனிப்போம். பாஸ்பரஸ், கண்ணாடித்தூள், வஜ்ரம் ஆகியவை இம் மருந்து

செய்யப் பயன்படுபவை. இவற்றுள் பாஸ்பரஸும் கண்ணுடித் தூளும் சம எடையில் எடுக்கப்படும். வஜ்ரம் இவ்விரண்டின் எடைக்கும் சமமாக எடுக் கப்படும். இப்படி எடுத்த வஜ்ரத்தை மூன்றி னுடையவும் எடையைப்போல நான்கு மடங்கு எடையுள்ள தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குழம்பாக்குவார்கள். இக்குழம்பில் பாஸ்பரஸை யும், கண்ணுடித்தூளேயும் போட்டுக் கலந்து அக்கலவையைத் தீப்பெட்டியின் ஒடுக்கமான பக்கங்களில் பூசுவார்கள்,

மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட தீக்குச்சி களே, மேற்கண்டவாறு தயாரிக்கப்பட்ட பெட்டி களின் ஒடுக்கமான பக்கங்களில் வைத்துத் தேய்த் தால்தான் அவை தீப்பற்றும். தீக்குச்சி முதல் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டபோது, அதை எந்தப் பொருளில் வைத்துத் தேய்த்தாலும் தீப் பற்றிக் கொள்ளுமாறு, பாஸ்பரஸை அக்குச்சி களின் நுனியில் அமைத்தார்கள். இது அடிக்கடி அபாயத்தை விளேவிக்கவே, பின்னர்ப் பாஸ்பர ஸைப் பெட்டியின் ஓரங்களில் அமைக்கப்படும் தற்போதைய முறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்படித் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளால் அபாயம் ஏற்பட இடமில்லேயாகையால், இவை **பத்திரமான தீக்குச்சிகள்** (Safety Matches) எனப் படுகின்றன.

நமது தமிழ்நாட்டில் தற்போது தீக்குச்சித் தொழில், குடிசைத் தொழிலாகப் **புதுக்கோட்டை, சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி** முதலிய இடங் களில் செய்யப்படுகிறது. **சென்னேயில் விம்கோ கம் பெனியார்** அதை இயந்திரத் தொழிலாகச் செய்து வருகிருர்கள்.

### அருஞ்சொற்பொருள்

சுடர்-விளக்கில் பிரகாசமாக எரியும் நெருப்பாகிய பகுதி; தீக்கடைகோல்—(தீ+கடை+கோல்) நெருப்பைக் கடைந்தெடுப்பதற்குக் காரணமான கட்டைகள்; பொருத்தி-சேர்த்து எடை—கனம், தூக்கு; குடிசைத் தொழில்-சிறிய அளவில் சிறிய தொழிற்சாலைகளில் செய்யும் தொழில்.

### வினாக்கள்

1. பண்டைக் காலத்தில் தீயை எப்படி அடைந்தார்கள்? தற்காலத்தில் எப்படி அடைகிறார்கள்?

2. தீக்குச்சி செய்வதற்குப் பயன்படும் பொருள்கள் எவை?

3. தீக்குச்சியின் நுனியில் பொருத்தப்பட்டுள்ள மருந்தைத் தயாரிப்பது எப்படி?

4. தீப்பெட்டி செய்வது எப்படி? அதன் பக்கங்களில் பூசப்படும் மருந்தைத் தயாரிப்பது எப்படி?

5. தீக்குச்சித் தொழில் நமது நாட்டில் எங்கெங்கு நடைபெறுகிறது?

### பயிற்சி

1. தீக்குச்சி செய்யும் விதத்தைச் சுருக்கி வரைக.

2. தீக்கடைகோல்; சிகிமுகிக்கல் — இவற்றைப்பற்றிக் குறிப்புக்கள் வரைக.

3. பிரித்தெழுதுக: நெருப்பு உண்டாக்குவதற்குக் காரணம்; மரக்கட்டைகளைச் சிறுகுச்சிகளாக்கி; இரண்டங்குலநீளம்.

4. சேர்த்தெழுது; ஒரே+அளவு+உயரமாக; என+இனி+ஆராய்வோம்; மேல்+பொருத்தப்படும்+மருந்து; பிறகு+எடுத்துக்கொண்ட.

இலக்கணம்

## வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்.

பின் கண்டவைகளைக் கவனி:

வந்தான், சென்றான்—இவ்வினைகள் கருத்து முற்றுப் பெற்று இருக்கின்றன. இவ்வாறு கருத்து முற்றுப்பெற்று இருக்கும் வினைச்சொற்கள், முற்று வினைகள் அல்லது வினை முற்றுக்கள் எனப்படும்.

வந்து, சென்ற—இவ்வினைகள் கருத்து முற்றுப்பெறாமல் இருக்கின்றன. கருத்து முற்றுப்பெறவேண்டுமானால், இவற்றோடு முறையே கண்டான், சிறுவன் என்பனபோன்ற வேறு சொற்களைச் சேர்க்கவேண்டும். இவ்விதம் கருத்து முற்றுப் பெறாமல் இருக்கும் வினைகள் எச்ச வினைகள் எனப்படும்.

எச்ச வினைகள் பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

கருத்து முற்றுப் பெறுவதற்காகச் சேர்க்கப்படும் சொல் பெயராக இருந்தால், அந்த வினை, பெயரெச்சமாகும்.

(உ—ம்) கண்ட (சிறுவன்)
காண்கின்ற (இடம்)
காணும் (பொருள்).

இங்கே வந்துள்ள கண்ட, காண்கின்ற, காணும் என்னும் வினைகள் முறையே சிறுவன், இடம், பொருள் என்னும் பெயர்ச் சொற்களைக்கொண்டு கருத்து முடியப்பெறுவதால், இவை பெயரெச்சங்களாம்.

கருத்து முற்றுப்பெறுவதற்காகச் சேர்க்கப்படும் சொற்கள், வினைச்சொற்களாக இருந்தால், அந்த வினைகள், வினையெச்சங்கள் ஆகும்.

(உ—ம்) படித்து (முடித்தான்).
வர (க்கண்டான்).
செயின் (முடியும்).
தந்தால் (செல்வேன்).

இங்கே படித்து, வர, செயின், தந்தால் என்னும் வினைகள் முறையே முடித்தான், கண்டான், முடியும், செல்வேன் என்னும் வினைகளைக் கொண்டு கருத்து முடியப் பெற்றன. ஆதலால் இவை வினையெச்சங்களாம்.

(1) வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்களாக முறையே ஐந்தைந்து கூறுக.

(2) இப்பாடத்தில் வரும் வினைமுற்று, பெயரெச்சம் வினையெச்சம் இவற்றில் முறையே ஐந்தைந்து எடுத்து எழுதுக.

---

# 8. வாசுகியம்மையார்

தொண்டை நாட்டில் காவேரிப்பாக்கம் என்னும் ஒரு சிறந்த ஊர் உண்டு. அவ்வூரில் தாளாண்மை மிக்க வேளாளர்கள் வாழ்ந்து வந்தனர். வேளாளர்கள் உழுதுண்ணும் வேளாளர்கள், உழுவித்துண்ணும் வேளாளர்கள் என இருவகைப் படுவர். அவர்களுள் உழுவித்துண்ணும் வேளாளர் குலத்தில் ஆயிரம் ஏர்கொண்டு பயிர்த்தொழில் நடத்திய மார்க்கசகாயர் என்னும் பெருநிலக்கிழார் ஒருவர் இருந்தார். அவருக்கு வாசுகியம்மை என்னும் ஒரு பெண்குழந்தையைத் தவிர வேறு குழந்தைகள் இல்லை. ஆதலின் அவர் அப் பெண்ணை, 'கண்ணிணைக் காக்கின்ற இமைபோலப்' பாதுகாத்து வந்தார். வாசுகி அம்மையும் அறிவும், அழகும் உடன் வளரப்பெற்று மணப்பருவம் எய்தினர்.

கவலையில்லாமல் வாழ்ந்து வந்த மார்க்கசகாயர், தமது விளைநிலங்களில் விதைத்த விதைகள்

எல்லாம் நன்கு முளைத்துச் செழித்துக் கருக் கொள்ளுஞ் சமயத்தில் அடியோடு அழிந்து போவதைக் குறித்துக் கவலைப்பட்டார். அக்குறையைப் போக்குவதற்குப் பலவாறு முயன்ருர். ஒன்றும் தோன்றவில்லை. எனவே, அவர், தனது குறையைப் போக்குவோருக்கு வாசுகி அம்மையை மணஞ்செய்து கொடுப்பதாக வாக்களித்தார்; ஒருவரும் வரவில்லை. இந்நிலையில், அவரது நண்பர் ஒருவர் அவரை நோக்கி, "ஆருயிர் நண்ப! மயிலாப்பூரில் திருவள்ளுவர் என்ற ஒரு பெரியார் இருக்கின்ருர்; அவர் கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்; கடவுள் தன்மை வாய்ந்தவர். அவரிடம் சென்ருல் உமது கவலை நீங்கும்,'' என்று கூறினுர்.

நண்பர் கூறியதைக் கேட்ட மார்க்கசகாயர் "கார் பெற்ற தோகை போல'' மனங்களிப்பெய்தி மயிலாப்பூருக்குச் சென்று திருவள்ளுவரை வணங்கித் தமது குறையை அவரிடம் கூறினுர். உடனே திருவள்ளுவர் 'காவேரிப்பாக்கத்திற்கு வந்து நிலங்களைப் பார்த்தார். அப்போது, பயிர்களைப் பாழாக்கிக்கொண்டு அங்கு வாழ்ந்திருந்த பேயும் அவருக்குப் பயந்து ஓடிவிட்டது. அன்று தொட்டு நிலங்களும் தக்க பயனைத் தந்தன. திருவள்ளுவரும் மயிலாப்பூருக்கு வந்து சேர்ந்தார்.

பிறகு மார்க்கசகாயர், தமது வாக்கைக் காப்பாற்றுவதற்காக திருவள்ளுவரிடஞ் சென்று தமது மகளை மணஞ் செய்துகொள்ளுமாறு வேண்டினர். அப்போது நாயனுரும் அவரை நோக்கி, "உமது மகள் யான் கொடுக்கும் இந்த

மணலைச் சமைத்துத்தந்தால், அவளைத் திருமணம் செய்துகொள்வோம்'', என்று கூறினர். உடனே மார்க்கசகாயரும், அந்த மணலைவாங்கிக்கொண்டு தமது மகளிடஞ் சென்று நாயனரது கருத்தை அறிவித்து மணலைத் தர, அவ்வம்மையாரும், “ஐயரது கட்டளைப்படி யான் இதைச் சமைப்பேன்,'' என்று கூறி அவரது கையிலிருந்த மணலை வாங்கிச் சோருகச் சமைத்துக்கொடுத்தனர். அது கண்ட முதற்பாவலர், “கற்பெனப்படுவது சொல் திறம்பாமை'' என்ற முதுமொழிக்கு ஏடுத்துக் காட்டாக உள்ளவள் இவளே என எண்ணி, அவ் வாசுகியம்மையை மணம் புரிந்து கொண்டனர்.

திருமணம் முடிந்த பின்னர், வாசுகியார் தமது தந்தையின் சிறந்த மாளிகையில் வாழ்வதை விட, தமது கணவரின் சிறு குடிலில் வாழ்வதே சிறந்ததென எண்ணி மயிலைக்கு வந்து சேர்ந்தார். அக்குடிலையே கற்பகக்காவென எண்ணினர். அங்கிருந்து கொண்டு தமது நாயகர் மீது எல்லை யற்ற அன்புடையவராய் வாழ்ந்தார். துறவிகள், ஏழைகள் முதலியவர்களைப் பாதுகாத்தார். இல்லறத்தை நல்லறமாக நடத்திச் சிறப்புற்ருர்.

தொழில்களுள் பாவம் இல்லாத தொழில் நெய்தல் தொழிலே என்று எண்ணிய நாயனர் ஏலேல சிங்கர் என்னும் ஓர் வணிகரிடத்து நூல் வாங்கி ஆடை நெய்தார். அத்தொழிலால் கிடைக்கும் ஊதியத்தைத் தமது இல்லாளிடம் கொடுத்தார். அவ்வம்மையாரும் அவர் கொடுக்கும் பொருளைப் பெரிதாக எண்ணிப் பெருமகிழ் வடைந்தனர்.

ஆகவே அவ்வாசுகியார்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற தமது நாயகரது வாய்மொழியை மெய்ப்பித்தார். அன்றியும் தமது கணவர் இரவில் தூங்கியதற்குப் பிறகு தூங்குவார். அவர் விடியற் காலையில் விழிப்பதற்கு முன் தாம் விழித்தெழுந்து விடுவார். நாயகர் எது சொன்னாலும் பதில் பேசாது செய்து முடிப்பர்.

இத்தகைய சிறப்பிணையுடைய வாசுகியம்மையார், 'மலரும் மணமும் போலக்' கணவரோடு ஒன்றியிருந்து இல்லறத்தை இனிது நடத்தி வாழ்ந்தார். அப்போது ஒருவர் வந்து வள்ளுவரை நோக்கி "இல்லறம் சிறந்ததா? அல்லது துறவறம் சிறந்ததா?" என்று கேட்டனர். அதற்கு வள்ளுவர், இங்குச் சின்னாள் தாங்கள் தங்கினால் விளங்கச் செய்வோம் என, அவரும் அவ்வாறே தங்கியிருந்தார். அப்போது ஒருநாள், வாசுகி அம்மையார் கிணற்றில் நீர் இறைத்துக்கொண்டிருக்கையில், நாயனுர் அவ்வம்மையாரை அழைத்தார். அவரும் இழுத்த குடத்தைப் பாதியோடு விட்டு விட்டு வந்தார். அக்குடமும் பற்றுக்கோடு இன்றி நின்றது. மற்றொரு நாள் வள்ளுவர் வாசுகியம்மையைப் பார்த்து, "நீ எனக்கு படைத்த பழஞ் சோறு சுடுகின்றது; ஆதலின் விசிறி கொண்டு விசிறுக" எனப் பணித்தார். அவரும் அவ்வாறு செய்யப் பழஞ்சோற்றில் புகை எழுந்தது. இவற்றையெல்லாம் அங்கு தங்கியிருந்தவர் கண்டு, தமது ஐயம் நீங்கப் பெற்று, சொல் தவருத மனையாள் வாய்ப்பின் இல்லறமே சிறந்தது;

இன்றேல் துறவறமே சிறந்தது என்று ஐயமறத் தெரிந்துகொண்டு நாயனுரை வணங்கிச் சென்றனர்.

இவ்வாறு, இல்லறத்தார் யாவர்க்கும் எடுத்துக்காட்டாக இல்லறம் நடத்திய வாசுகியம்மையாருக்கு இறுதிக் காலம் நெருங்கியது. அப்போது அவ்வம்மையார் வள்ளுவரது முகத்தை நோக்கினர். தேவர், 'யாது விரும்புகின்ருய்? அஞ்சாமல் உரைத்திடு' என்றனர். அதற்கு வாசுகியார், எனதாருயிர்க் காதலரே! என்னைத் திருமணம் செய்துகொண்ட அன்று முதல், தேவரீருக்கு யான் உண்கலத்தில் சோறு படைக்கும் போதெல்லாம் சிறு பாத்திரத்தில் நீரும், அதற்கு அருகில் ஊசியொன்றும் வைக்குமாறு கட்டளையிட்டீர்கள்; அவற்றைத் தாங்கள் ஒரு நாளாவது எடுத்துப் பயன்படுத்தவில்லை; அதன் காரணம் யாதோ?'' எனக்கூறினர்.

அதனைக் கேட்ட பொய்யில் புலவர், பெண்ணே! நீ உண்கலத்தில் சோறு படைக்கும் போது, தவறிக் கீழேவிழும் சோற்றினை ஊசியால் எடுத்துத் தண்ணீரில் கழுவிக் கொள்வதன் பொருட்டே, அவற்றை அருகில் வைக்கச் சொன்னேன்; நீ ஒரு நாளாவது சோறு தவறிக் கீழே விழுமாறு படைக்கவில்லை; ஆதலின் யான் அவற்றைப் பயன்படுத்தவில்லை,'' என்றனர். அப்போது வாசுகியார் மலர்ந்த முகத்துடன் இறைவன் திருவடியை எய்தினர்.

மாணவர்களே! பெண்கள் தமது நாயகரது சொல் தவருது நடக்கும் உளப்பான்மையை உறுதியாகக் கொள்வார்களேயானல், அவர்கள்

இம்மையில் புகழையும், மறுமையில் முக்தியையும் எய்துவர் என்பதை இப்பாடத்திலிருந்து நீங்கள் இனிதாக உணரலாம்.

அருஞ்சொற்பொருள்

தாளாண்மை—முயற்சியுடைமை: கார்-மேகம்; கற்பகக்கா—கற்பகச் சோலை; சொல்—புகழ்; இம்மை—இப்பிறப்பு; மறுமை—இறந்தபின் ஏற்படும் நிலை.

வினாக்கள்

1. வாசுகியம்மையாரது தந்தை யார்? அவருக்கேற்பட்ட கவலை யாது?

2. மார்க்கசகாயரது நண்பர் கூறியதென்ன?

3. தமது மகளை மணஞ்செய்து கொள்ளுமாறு வேண்டிய மார்க்கசகாயரிடம். திருவள்ளுவர் கூறியது யாது?

4. இல்லறம் சிறந்ததா அல்லது துறவறம் சிறந்ததா என்று தன்னைக் கேட்டவருடைய ஐயத்தை வள்ளுவர் எவ்வாறு போக்கினார்?

5. உனது விருப்பத்தை அஞ்சாமல் கூறுக, என்ற நாயனாரிடம் வாசுகியம்மை கூறியது என்ன?

6. கார் பெற்ற தோகைபோல—சந்தர்ப்பம் கூறுக.

7. இப்பாடத்திலிருந்து நீங்கள் அறிவது யாது?

பயிற்சி

1. காவேரிப்பாக்கம், மார்க்கசகாயர் – சிறு குறிப்பு வரைக,

2. வள்ளுவரும், வாசுகியம்மையாரும் யாவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்குமாறு இல்லறம் நடத்தினர் இதனை விளக்குமாறு கட்டுரை வரைக.

3. அப்போது நாயனாரும் அவரை நோக்கி "உமது மகள் யான் கொடுக்கும் இந்த மணலைச் சமைத்துத் தந்தால் அவளைத் திருமணம் செய்துகொள்வோம்." என்றார். இந்த நேர்க்கூற்று வாக்கியத்தை அயற்கூற்று வாக்கியமாக ஆக்குக.

4. மார்க்கசகாயர் திருவள்ளுவரிடம் சென்று, தமது மகளை மணம் செய்து கொள்ளுமாறு வேண்டினர். இந்த அயற்கூற்று வாக்கியத்தை நேர்க்கூற்று வாக்கியம் ஆக்குக.

## இலக்கணம்

### எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

#### அடைமொழிகள்

பின்கண்ட வாக்கியத்தைக் கவனி.

அந்தச் சிறிய பையன் அந்தப் பெரிய சுமையை மிகவும் வருத்தப்பட்டுத் தூக்கினன்.

இந்த வாக்கியத்தில் பையன்—எழுவாய்; தூக்கினன்—பயனிலை ; சுமையை—செயப்படுபொருள். இவ்வாக்கியத்திலுள்ள அந்த, சிறிய என்னும் சொற்கள் பையன் என்னும் எழுவாயினது குணவிசேடங்களைத் தெரிவிக்கின்றன.

இவ்வாறு, ஒரு வாக்கியத்தில் எழுவாயினது குணவிசேடங்களைத் தெரிவித்து வருஞ் சொற்கள், எழுவாய் அடைமொழிகள் எனப்படும்.

மேற்கண்ட வாக்கியத்தில் மிகவும் வருத்தப்பட்டு என்னும் சொற்கள் பயனிலையாகிய தூக்கினன் என்பதன் குணவிசேடங்களைத் தெரிவிபபதால், பயனிலை அடைமொழிகள் ஆகும்.

மேற்கண்ட வாக்கியத்தில், அந்த, பெரிய என்பவை செயப்படுபொருளாகிய சுமையை என்பதன் குணவிசேடங்களைத் தெரிவிப்பதால், செயப்படுபொருள் அடைமொழிகள் ஆகும்.

பின்கண்ட வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அவற்றின் அடைமொழிகள் ஆகியவற்றை எடுத்தெழுதுக.

1. மிகுந்த செல்வந்தரான மார்க்கசகாயர், மிகுந்த தெய்வத் தன்மை பொருந்திய திருவள்ளுவரைக் கண்டார்.

2 மார்க்கசகாயரது அருமை மகளாகிய வாசுகியம்மை, திருவள்ளுவரை மணந்து இல்லறத்தை இனிது நடத்தினர்.

3. திருவள்ளுவரைக் கண்டதும், அந்தக் கொடிய பேய் பயந்து விரைந்து ஓடிவிட்டது.

4 கற்பு வாய்ந்த வாசுகியம்மையார், சமைக்க இயலாத மணலைச் சமைத்தார்.

5. வள்ளுவர் கூப்பிட்டதும், வாசுகி அம்மையார் உடனே விரைந்தோடி வந்தார்.

---

# 9. கவிமணி திரு. தேசிக விநாயகம் பிள்ளை

நந்தமிழ் நாட்டில் சிறந்த புலமை வாய்ந்த தமிழ்க் கவிஞர் அடிக்கடி தோன்றித் தமிழுக்குத் தொண்டாற்றிவருகின்றார்கள். அவர்களாலியற்றப்படும் நூல்கள் சிறந்த தமிழ் இலக்கியங்களாய்த் திகழ்கின்றன. அத்தகைய புலவருள் கவிமணி திரு. **தேசிக விநாயகம் பிள்ளை** அவர்களும் ஒருவராவர். அருங்கவிவாணருட் சிலர், தாம் உயிரோடு வாழுங்காலத்தில் பெருமை பெறுவதில்லை. அவர்தம் கவிதைகளோ, நூல்களோ அவ்வளவாக மதிக்கப்படுவதும் இல்லை. நமது கவிமணியவர்களோ, இவ்விதிக்கு விலக்கானவர். தமது வாழ்நாளிலேயே யாவராலும் போற்றப்படும் பேறு பெற்றார். அவரது வரலாற்றை ஈண்டு கூறுவோம்.

திருவிதாங்கூர் நாட்டில் **சுசீந்திரம்** என்னும் ஓர் ஊர் உண்டு. அது பெயர் பெற்ற சிவத்தலமாகும். அதனையடுத்துத் **தேரூர்** என்னும் ஓர் ஊர் உளது. அதுவே நமது கவிமணியவர்களின் பிறப்பிடம்.

அவரது தந்தையார் சிவதாணுப்பிள்ளை எனப்படுவார். அவர் நாஞ்சில் நாட்டிலேயே முதல்முதலாக ஆங்கிலங் கற்றவர் என்னும் பெருமைபெற்றவர். அவர் உப்பள அதிகாரியாக அலுவல் பார்த்தார். கவிமணியவர்களின் தாயார் பெயர் ஆதிலட்சுமியம்மை. இவ்விருவருக்கும் திருக்குமாரராக நமது கவிமணியவர்கள் கி.பி. 1876–ஆம் ஆண்டில் பிறந்தார்.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்னும் பழமொழிக்கிணங்க, தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இளமையிலேயே கூரிய அறிவுடையராக இருந்தார். உரிய வயதில் பெற்றோர் இவரைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தனர். ஆரம்பக் கல்வியைத் தேரூரிலும், உயர்தரக் கல்வியைக் கோட்டாற்றிலும் இவர் கற்றார். கோட்டாற்றில் மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேறிப் பின், நாகர்கோயிலை அடைந்து, அங்குள்ள கல்லூரியில் எப்.ஏ. வகுப்பில் சேர்ந்து படிக்கலானார். கொஞ்ச காலமானதும் குடும்பத்தில் நேர்ந்த சில இடுக்கண்களால், மேலே படிக்க இயலாது போயிற்று. உடனே கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டுத் திருவனந்தபுரத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை அடைந்து ஆசிரியராவதற்குப் பயிற்சி பெறலானார்.

ஏறக்குறைய இருபத்தைந்து வயதானபோது அவரது ஆசிரியப் பயிற்சி முடிந்தது. உடனே கோட்டாற்றில் இருந்ததொரு ஆரம்பப்பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்தார். அவ்வாண்டிலேயே அவருக்குத் திருமணமும் நடைபெற்றது. சிறிது காலஞ் சென்ற பின்னர், மேற்கூறிய அலுவலை

விட்டு நாகர் கோயில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி யில் ஆசிரியரானுர். அப்பால் கொஞ்ச காலத்திற் கெல்லாம் திருவனந்தபுரம் பெண்கள் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியரானுர். அதன்பின் சில நாளில் திருவனந்தபுரம் மஹாராஜா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக அமர்ந்தார். பின்னர் 1937 இல் அலுவல் பார்ப்பதை விட்டு ஓய்வு பெற்ருர்.

கவிமணியவர்களுக்குத் தமிழார்வம் இளமை யிலிருந்தே உண்டு. அவர் பள்ளியில் கல்வி கற்ற காலத்து மலையாளமே கற்க முடிந்தது. பள்ளிப் படிப்பு ஒருவாருக முடிவுற்றதும், தமிழ் பயிலத் தொடங்கினுர். அக்காலத்தில் தேரூருக்கு அண்மையிலுள்ள வாணன் திட்டு என்னும் ஊரில் திருவாவடுதுறை ஆதீனத்தைச்சார்ந்த சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். சிறந்த தமிழ்ப் புலவராகிய அவரிடம், நமது கவிமணி முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கற்ருர்.

கவிமணிக்கு கவிபாடும் ஆற்றல் இயற்கை யிலேயே அமைந்திருந்தது; தம்பிரானவர்களிடம் தமிழ் பயின்ற காலை. அது வளர்பிறையென வளர்ந்து முழுமதியெனத் திகழ்ந்தது. அப்போது அவர் அழகம்மை ஆசிரிய விருத்தம், சுசிந்தை மாலை என்னும் நூல்களை இயற்றினுர்.

கவிமணியவர்கள் ஆசிரியராய் அலுவல் பார்த்த காலத்தில் தமிழ்க் கவிதைகளை இயற்றி ஆண்டான் கவிராயர், குயில், ஐயம்பிள்ளை முதலிய புனை பெயர்களுடன் அவற்றைப் பல பத்திரிகை

களுக்கு அனுப்பி வந்தார். மேலும், சரித்திரத் தொடர் புடையவையும், கல்வெட்டு ஆராய்ச்சித் தொடர்புடையவையும் ஆன கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி செய்தித் தாள்கட்கு அனுப்பினர். அவையெல்லாம் அச்செய்தித் தாள்களில் வெளியிடப் பெற்றன. அவரது தமிழ்ப் பாடல்கள் **செந்தமிழ், கலைமகள், ஆனந்தவிகடன், தினமணி, ஊழியன், ஈழகேசரி** முதலிய செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளன. **நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்** என்னும் அவரது நகைச்சுவை நூல். **தமிழன்** என்னும் பத்திரிகையில் வெளியிடப் பெற்றது. அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கது **காந்தளூர்ச்சாலை** என்பது. அவரது தமிழ்க் கவிதைகள் எல்லாம் ஒருங்கு திரட்டப் பெற்று, **மலரும் மாலையும்** என்னும் பெயரில் ஒரு நூலாக வெளியிடப் பெற்றுள்ளன.

சிறுர் முதல் முதியோர் வரை யாவருக்கும் பயன்படுமாறு அவர் பலவகைப்பாக்களை இயற்றியுள்ளார். சிறுவருக்காக அவர் **பசு, நாய், புலி, கிளி, கோழி, சைக்கிள், ஆகாயவிமானம், கடிகாரம்** முதலியவைகளைப்பற்றிப் பாடல்கள் இயற்றியுள்ளார். இவை எளிய நடையில் அமைந்தவை. இவையன்றி **அப்பம் திருடிய எலி, நெற்பானையும் எலியும்** என்பன போன்ற கதைப் பாடல்களையும் அவர் களுக்காக இயற்றியுள்ளார். பெரியோர்க்காக இயற்றியவற்றுள் புத்தர் சரித்திரத்தை எடுத்துக் கூறும் **ஆசிய ஜோதியைக்** குறிப்பிடல் தகும்.

இவரது தமிழ்ப்புலமையும் தமிழ்க் கவிதைகளின் மாண்பும் யாவர் மனத்தையும் ஈர்த்தன.

இவரது புகழ் ஒளி தமிழ்நாடெங்கும் பரவியது. ஆகவே 1940 ஆம் ஆண்டில் நிகழ்ந்த **சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவின்** போது



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

தமிழ்ப் பெருமக்கள் இவருக்கு **கவிமணி** என்னும் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தினர். மேலும் 1943 ஆம் ஆண்டில் செட்டி நாட்டுப் பெருமக்கள் இவருக்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டினர். இங்ஙனம் சிறக்க வாழ்ந்த இவர், 1954 ஆம் ஆண்டில் காலஞ்சென்றார். இவரது மறைவு தமிழுலகத்தைத் துயரக்கடலில் ஆழ்த்தியது.

கவிமணியவர்கள் ஓய்வுபெற்ற காலம் முதல் இறக்கும் வரையில் தமிழ்த்தொண்டாற்றி வந்

தார். ஓய்வுபெற்ற பின்னர் நாகர்கோயிலை அடுத்த புத்தேரி என்னும் ஊர் இவரது இருப்பிடமாயிற்று. இவர் களங்கமற்ற உள்ளத்தவர். பொறுமை, அடக்கம் முதலிய சீரிய குணங்களைக் கைக்கொண்டவர். பிறர்க்குதவி புரியும் பெற்றியர். சைவசமயத்தில் மிகுந்த பற்றுள்ளவர். திருநெல்வேலி உமையொரு பாகக் குருக்களிடம் சமய தீக்கை பெற்றுச் சைவ மணியாய்த் திகழ்ந்தார். முடிவாகக் கூறுமிடத்து இவர், "தோன்றிற் புகழொடு தோன்றுக", என்னும் நாயனார் வாக்கிற் கிணங்கத் தோன்றி வாழ்வு பெற்றார் என்னலாம்.

## அருஞ்சொற்பொருள்

புலமை—கல்வியறிவு; தொண்டாற்றி—தொண்டு+ ஆற்றி-வேலைசெய்து; விதிக்குவிலக்கு—சட்டத்திற்கு எதிரிடையானது; இடுக்கண்—துன்பம்; தமிழார்வம் — தமிழ் கற்கவேண்டும் என்னும் ஆவல்; புனை பெயர்கள்—படைத்து இட்டுக்கொண்ட பெயர்கள்—தாமாக வைத்துக்கொண்ட பெயர்கள்; கல்வெட்டு—பண்டைக் காலத்தில் அரசர்கள் தம் காலத்திய முக்கியமான செயல்களைக் கல்லில் எழுத்து மூலம் செதுக்கி வைப்பார்கள்; அதுவே கல்வெட்டு, பெரும்பாலும் கோயிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன.

## வினாக்கள்

1. கவிமணி எங்கே எப்போது பிறந்தார்? அவரது பெற்றோர் யாவர்?

1. கவிமணி கற்ற கல்வியைப்பற்றிக் கூறுக. அவருக்கு அப்பெயர் வரக்காரணம் என்ன?

3. கவிமணியவர்கள் பார்த்த அலுவல்களை விவரிக்க.

4. கவிமணியவர்கள் தமிழ் கற்றவிதம் யாது? அவரியற்றிய நூல்கள் யாவை?

5. கவிமணியவர்களது குண நலன்களைக் கூறுக.

### பயிற்சி

1. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களைக் குறித்து இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக.

2. அருங்கவி வாணருட் சிலர் தாம் வாழுங் காலத்தில் பெருமை பெறுவதில்லை- இவ்வாக்கியத்தில் சிலர் என்பதைச் சிலர்க்கு என மாற்றிப் பொருள் கெடாவகையில் இவ்வாக்கியத்தை அமைக்க.

3. தம்பிரானவர்களிடம் தமிழ் பயின்றகாலை அது வளர்பிறையென வளர்ந்து முழு மதியெனத் திகழ்ந்தது. இவ்வாக்கியத்தை மூன்று வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

### இலக்கணம்

## உயிர் முன் உயிர் புணர்தல்—உடம்படு மெய் பெறுதல்

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்து புணருமானால், இடையில் யகரமெய் தோன்றும். இது யகரவுடம்படு மெய் எனப்படும்.

(உ—ம்) கிளி + இருந்தது = கிளியிருந்தது.
தேனீ + எங்கே = தேனீயெங்கே?
படை + எடுத்தான் = படையெடுத்தான்.

நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ. ஊ, ஒ. ஓ, ஔ; என்னும் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிரெழுத்துக்கள் வந்து புணருமானால், இடையில் வகரமெய் தோன்றும். இது வகரவுடம்படுமெய் எனப்படும்.

(உ—ம்) வர + இருந்தான் = வரவிருந்தான்.
நிலா + எறிந்தது = நிலாவெறிந்தது.
நடு + இடம் = நடுவிடம்.
பூ + எடுத்தான் = பூவெடுத்தான்.
நொ + இல்லை = நொவ்வில்லை.
அதோ + இருக்கிறான் = அதோவிருக்கிறான்.
கௌ + என்றான் = கௌவென்றான்.

நிலைமொழி ஈற்றில் ஏகாரம் இருக்க வருமொழி முதலில் உயிர் வந்தால், இடையில் யகரவுடம்படு மெய்யாவது—வகரவுடம்படு மெய்யாவது, தோன்றும்.

(உ—ம்) எங்கே+இருந்தான்=எங்கேயிருந்தான்.
தே+ஆரம்=தேவாரம்.
சே+அடி= } சேயடி. சேவடி.

1. யகர வகர வுடம்படுமெய்கள் புணர்ச்சியில் வருவதற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள், முறையே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று கூறுக.

2. **பின் வருபவைகளைச் சேர்க்க:** கவிமணி+அவர்கள்; பள்ளியை+அடைந்தனர்; படிக்க+இருந்தனர்; கூரிய+அறிவு.

3. **பின் வருவனவற்றைப் பிரிக்க:** படிக்கவெடுத்தார், வெளியிடம், தேவாலயம், போவென்ருன், இணையடி, அதேயிடம்.

---

# 10. தொலைக்காட்சி கண்ட பெரியார்

விஞ்ஞானம் நமக்குச் செய்துவரும் தொண்டுகள் பலவாம். அவற்றுள் ஒன்று ஆயிரக்கணக்கான கல் தொலைவில் பேசும் பேச்சையும், பாடும் பாட்டையும் அதே நேரத்தில் நாம் கேட்குமாறு செய்திருப்பதாகும். வானொலியின் வாயிலாக இவற்றை நாம் கேட்கிருேமன்ருே? வானொலியில் சில சமயங்களில் நாடகங்களும் நடத்தப்படுகின்றன. சிலசமயங்களில் பெயர்பெற்ற பாடகர்கள் பாடுகிருர்கள். பெயர்பெற்ற வாத்தியக்காரர்கள் வீணை, பிடில் முதலிய வாத்தியங்களை வாசிக்கிருர்கள். பெயர்பெற்ற நடிகர்கள் நடிக்கிருர்கள். பேர்பெற்ற பேச்சாளர்கள் பேசுகின்ருர்கள். இவர்களது பாடல்கள், பேச்சுக்கள் முதலியவற்றை

நாம் கேட்கும்போது, இந்நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களை நாம் நேரில் பார்ப்பதற்கில்லையே என வருந்துகிறோம்! இப்படி வருந்தாமல் பார்க்க நேரிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.

இவ்வாறு நாம் மகிழ்வதற்கும் வழிகோலினர் ஒருவர். அவர் கோலியுள்ள வழியால் தற்போது மேற்கு நாட்டவர் பயனடைந்து வருகிறார்கள். நாமும் அப்பயனை விரைவில் அடைதல் கூடும். இப்படிப் பயனடையும்போது, நாம் ஆயிரக்கணக்கான கல் தொலைவில் நிகழும் விநோதக் காட்சிகளையெல்லாம் நமது வீட்டிலேயே சினிமாப்படம் பார்ப்பதுபோலப் பார்க்கலாம். இக்காட்சி ஆங்கிலத்தில் **டெலிவிஷன்** எனப்படுகிறது. இதனை நாம் **தொலைக்காட்சி** என்று அழைப்போம். இப்போது இத் தொலைக் காட்சியை உலகிற் களித்துள்ள பெரியார் யார் என அறிய ஆவலாயிருக்கின்றதன்றோ? அவரைப்பற்றிய வரலாற்றைச் சுருக்கமாக இதனடியிற் காண்போம்.

தொலைக்காட்சியை நமக்கு அளித்த பெரியார் பெயர் **ஜான் லாகி பெயர்ட்** என்பது. இவர் **ஸ்காட்லாண்டில், கிளாஸ்கோ** நகருக்கு அருகாமையிலுள்ள **ஹெலன்பர்க்** என்னும் ஊரில், கி. பி. 1888இல் பிறந்தார். இவர் சிறு வயதிலேயே புதுப் பொருள்களைச் செய்யவேண்டும் என்னும் விருப்பம் உடையவராயிருந்தார் என்பதைத் தவிர வேறு இவரது இளமைப் பருவச் செய்தி ஒன்றும் தெரியவில்லை. பள்ளியிற் படிக்கும்போதே இவர் டெலிபோன் ஒன்றைச் செய்தனராம்.

தமது இளமைப் பருவக்கல்வியை முடித்தபின் இவர் கிளாஸ்கோ சர்வகலாசாலையில் பௌதிகமும் மின்சாரமும் பயின்றார். சர்வகலாசாலைப் படிப்பு ஒருவாறு முடிவுற்றதும், ஒரு பெரிய மின்சார நிலையத்தில் ஒரு பகுதியில் சிறிய அலுவலாளராக அலுவல் பார்த்தார். அங்கே ஊதியம் குறைவு; வேலைகடினம். அல்லும் பகலும் உழைத்தே ஊண், உடை முதலியவைகளுக்குப் போதுமான பொருள்பெற வேண்டியதாயிருந்தது.

கூரிய அறிவுடையராய்ச் செயற்கரிய செயல்களைச்செய்து புகழ்படைத்த பெரியோர்களிற் பெரும்பாலார், தமது இளமைக்காலத்தில் வறுமையாளர்களாகவே இருந்திருக்கிறார்கள். நமது பெயர்ட் மட்டும் இவ்விதிக்கு விலக்கானவரல்லர். இளமையில் மிக்க வறுமையால் வருந்தினர். மின்சாரநிலைய அலுவலால் போதிய ஊதியம் கிடைக்காமல் துன்புறவே, இவர் அதனைக் கைவிட்டு வியாபாரத்துறையில் இறங்கலானார். தம்மிடமிருந்த பத்துப்பவுன் அதாவது ஏறக்குறைய நூற்றைம்பது ரூபாயை முதலாக வைத்து பூட் பாலிஷ் அதாவது பூட்ஸுகளை பளபளப்பாக்கும் பூச்சுப்பொருள் செய்து விற்றார். இதில் நல்ல ஊதியம் கிடைத்ததாயினும், புதிய பொருள்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்னும் ஆர்வமுள்ள நமது பெயர்ட்டுக்கு இது மனநிம்மதியளிக்கவில்லை. நிற்க, நமது பெயர்ட்டு உடல்வலி மிக்கவரல்ல. அதனால் அவர் மேற்கண்ட வாணிகத்தில் ஈடுபட்டிருக்குங்கால் கொடிய நோய் ஒன்று அவரை வந்தடைந்து துன்புறுத்தியது. வாணிகத்தில் அவர் சேர்த்து வைத்திருந்த பொருள் எல்லாம்

செலவழிவதற்கும், அவரது நோய் தீருவதற்கும் சரியாக விருந்தது. நோய் ஒருவாறு குணமடைந்ததும், அவர் மேற்கண்ட தொழிலைவிட்டு வேறு ஏதாவது தொழில் செய்து பிழைக்க எண்ணினர்.

இச்சமயத்தில் மேற்கிந்தியத் தீவில் இவருக்கு ஒரு நண்பர் இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. அவர் ஒருக்கால் தமக்கு உதவி செய்யக்கூடும் என்று எண்ணி, இவர் தமது நிலைமையை அவருக்கு அறிவித்து ஒரு கடிதம் எழுதினர். அவரும் இவருக்கு உதவி செய்ய முன்வந்து, இவரைத் தம்மிடத்திற்கு வருமாறு அழைத்தார். அங்ஙனமே இவர் மேற்கிந்தியத் தீவுகளை அடைந்ததும், இருவருமாகச்சேர்ந்து, பழரசங்களைத் தயாரித்துத் தகர செப்புக்களில் அடைத்து விற்பனை செய்யும் வாணிகத்தை மேற்கொண்டனர். ஆனல் இவ்வாணிகம் நீடிக்கவில்லை. ஏனெனில் பழரசம் விரைவில் கெட்டுவிடலாயிற்று. மேலும், பெயர்ட் நோயால் பாயும் படுக்கையுமாக ஆனர். அவருக்குச் சிகிச்சை செய்த மருத்துவர், விரைவில் அவர் இங்கிலாந்திற்குப்போவது நல்லது என்று கூறினர். ஆகவே அவர் இங்கிலாந்து திரும்ப வேண்டியதாயிற்று.

மேற்கண்டவாறு இங்கிலாந்தை அடைந்த இவர் லண்டனில் தெருக்களில் ஏதோசாமான்களை விற்றுச்செல்லும் சில்லரை வணிகர் ஆனர். இச்சமயத்தில் இவருக்குத் தொலைக்காட்சியைப் (டெலிவிஷனைப்) பொறுத்த ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டுமென்ற விருப்பம் மேலிட்டது. கையிலோ பொருளில்லை, யார் தமக்கு உதவுவார்கள் என்று

ஆராய்ந்தார். ஸ்காட்லாண்டிலுள்ள தமது உடன்பிறந்தாள் உதவி செய்யக்கூடும் என்ருல் அந்த அம்மையார் ஒத்துக்கொள்வாரோ மாட்டாரோ என்று, அஞ்சி, அதனேடு இரண்டாவதாகக் கண்ணுடி ரேசர் (க்ஷவரக் கத்தி) செய்வதும் தமது நோக்கம் என்று, அவருக்கு எழுதிய கடிதத்தில் குறித்தார்.

நினைத்தவாறே ஆயிற்று. உடன்பிறந்தாள் க்ஷவரக் கத்திகள் செய்வதே நலமென்ருள். இவருக்கோ தொலைக் காட்சியில் விருப்பம். உதவி அதிகம் கிடைக்கவில்லை. ஆயினும் உள்ளத்தைக் கொண்டு தமது விருப்பப்படி தொலைக்காட்சி ஆராய்ச்சியில் கி. பி. 1922இல் இறங்கினுர்.

ஒரு சிறிய வீட்டில் ஒரு சிறிய அறை, அதில் பழைய இராணுவ இரும்புக் கடையினின்று வாங்கி வந்த முகம் அலம்பும் கருவி ஒன்று. ஒரு கை, டீ வைக்கும் பெட்டி ஒன்று, பழைய மோட்டார்க் கருவி ஒன்று, காலி பிஸ்கோத்துத் தகரப் பெட்டி ஒன்று, தந்தக் கருவிகள் சில, ஊசிகள் சில, மரப்பலகைகள் சில. இவை அவரது அறையில் தாறுமாருகக் கிடந்தன. அதுவே அவரது ஆராய்ச்சிக்கூடம்.

பெயர்ட் ஆராய்ச்சியைத் தொடங்கி வேலை செய்தார். டீப்பெட்டியில் பழைய மோட்டாரை எடுத்துவைத்தார். அருகிலிருந்த சைக்கிள் கடைக்குச்சென்று இரண்டு கண்ணுடி வில்லைகளை இரவல் வாங்கி வந்தார். கையும் முகங் கழுவும் கருவியும் அவரது இயந்திரத்தில் ஒரு

முக்கியப் பகுதியாயின. அங்கே குப்பையாகக் கிடந்த சில பொருள்களைச் சில கம்பிகளோடு சேர்த்தார். ஏதோ வேலை நடந்தது. இரண்டாண்டு கள் இவ்வாறு உழைத்த பிறகு, அவருக்குத் தமது கருத்து கைகூடும் என்னும் நம்பிக்கை உண்டா யிற்று.

இச்சமயத்தில் அவரிடம் வறுமை குடிகொள் ளலாயிற்று. பலரிடம் தமது ஆராய்ச்சியைப்பற் றிக் கூறிப்பொருளுதவி பெற முயன்றார். பொரு ளுக்கு மாறுகப் பைத்தியம் என்னும் பட்டம் கிடைத்தது. ஆயினும் விடாது முயன்றதில், 1925ஆம் ஆண்டு கார்டன் செல்ப்ரிட்ஜ் என்னும் வணிகரது உதவி கிடைத்தது. அவரது கடைக்கு நமது விஞ்ஞானி ஒரு நாளைக்கு மூன்று முறை சென்று அங்குத் தமது கருவியைப்பற்றியும், அது வேலை செய்யும் விதத்தைப் பற்றியும் எடுத்துக் கூறவேண்டியிருந்தது. அதனுல் வார மொன்றுக்கு 25 பவுன்கள் அதாவது ஏறக்குறைய 350 ரூபாய் கள் ஊதியம் கிடைத்தது. இந்த ஊதியம் அவருக் குப் போதுமான தாயினும், அவரது கருவி மக் களுக்குப் பிடிக்கவில்லை. அக்கருவி தொழிற்பட்ட தனுல், திரையில் ஏதோ சில தாறுமாறுன உரு வங்கள் மட்டும் தென்பட்டன. அதுகண்டு மக் கள் அவரை ஏளனம் செய்தனர். ஒரு கிழவி "ஐயா" உமது கருவி செயல்பட ஆரம்பித்தால். நாங்கள் குளிக்கும் அறையில், திரைகளை மட்டும் நம்பிக் குளிக்கச் செல்ல இயலாதுபோல் இருக் கிறதே! என்றுள்.

இவ்வாறு அவமானமடைந்த பெயர்ட், "முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை, இன்மை புகுத்திவிடும்," என்னும் நாயனுர் வாக்கை

கடைப்பிடித்தார். தோல்விகள் எல்லாம் அவருக்கு வெற்றிக்குன்றின் மீதேறும் படிகளாக அமைந்தன. நல்ல வருவாயையுடைய அந்தத்தொழிலை விட்டொழித்தார். சிறந்த முறையில் மேலும் ஆராய விரும்பினுர். பழைய வறுமை அவரைவந்து பிடித்துக்கொண்டது. பட்டினியால் எலும்பும் தோலுமாக ஆனுர். ஆயினும் ஆராய்ச்சியைத் தொடங்கிவிட்டார்.

தொடங்கியவர் தமது ஆராய்ச்சிகளைக் குறித்துச் செய்தித் தாள்களில் வெளியிட்டால் நன்மையாகும் என்று எண்ணி முயன்ருர். ஒரு செய்தித் தாளேனும் அவரது வேண்டுகோளுக்கு இசையவில்லை. "திரையில் மனித உருவத்தைக் காட்டினுலன்றி, உமது ஆராய்ச்சிகளைக் குறித்து ஒன்றும் எழுத இயலாது," என்று அவர்கள் கூறிவிட்டனர்.

ஆயினும் நமது விஞ்ஞானி மனந்தளர்ந்தாரில்லை. ஸ்காட்லாந்திலுள்ள தமது உறவினர் சிலருக்குக் கடிதம் எழுதி 500 பவுன்கள் உதவி பெற்ருர். சிறிய ஆராய்சிக்கூடம் ஒன்றை நிறுவினுர். 1925-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 2ஆம் நாள் வேலை தொடங்கினுர். இச்சமயத்தில் அவரது ஆராய்ச்சிக்கூடத்தில் பல புதிய விநோதக் கருவிகள் இருந்தன. சுழலும் சக்கரங்கள், வானெலிக் கருவிகள், தொலைக்காட்சிப் படம் பிடிக்கும் கருவி (டெலிவிஷன் காமரா) முதலியவை இருந்தன. படம் பிடிக்கும் கருவியின் முன், கயிற்றினுல் பிணைக்கப்பட்டு மேலிருந்து தொங்கும் பொம்மை ஒன்று இருந்தது. வேலை தொடங்கியது. பெயர்ட் அடுத்த அறையில் ஒரு திரைக்கு அருகில் உதவியாளர் இருவருடன் நின்று,

திரையைக் கவனித்தவண்ணம் இருந்தார். முதலில் திரையில் ஒளிக்கோடுகள் தோன்றி மறைந்தன. பின்னர் முதல் அறையில் இருந்த பொம்மையின் உருவம் திரையில் நன்கு புலப்பட்டது. அவரது முயற்சி பலித்தது.

மகிழ்ச்சி பொங்க அவர் ஆடினுர்; பாடினுர். தெருப்பக்கம் போய் அலுவலகத்துப் பணிபுரியும் சிறுவனைக் கையைப்பிடித்துக் கூட்டிக்கொணர்ந்தார். பொம்மை இருந்த இடத்தில் நிறுத்தினுர். கருவி வேலை செய்தது. திரையில் சிறுவனின் உருவம் தெரிந்தது. அப்பால் மேலும் மூன்று மாதங்கள் முயன்று, தமது கருவியைச் சீர்திருத்தினுர். தமது ஆராய்ச்சிகளைப் பற்றி இங்கிலாந்து அரச குடும்பத்தாருக்குச் சொல்லி அவர்கள் முன்னிலையில் அதைத் தொழிற்படுத்திக் காட்டினுர். இச்சமயத்தில் அங்கிருந்த ஒரு பெரியவரது தாடி கருவியிற் சிக்கிச் சிறிது தொல்லை விளைவித்தது. ஆயினும் முயற்சி வெற்றிகரமாக முடிந்தது.

மேற்கண்ட நிகழ்ச்சிக்குப்பின், செய்தித்தாள்கள் அவரது ஆராய்ச்சிகளை வெளியிடலாயின. பணமும் புகழும் வந்து குவிந்தன. வணிகர்கள் அவரது கருவியைத் தாம் செய்து விற்க அனுமதி கேட்டனர். ஆனுல் நமது விஞ்ஞானி, மேலும் அதை நன்கு ஆராய்ந்து சிறந்ததாகச் செய்யக் கருதினுர். கருவியை மேலும் மேலும் திருத்தி அமைத்தார். 1928ஆம் ஆண்டு, லண்டனிலிருந்து சுமார் ஆயிரம் கல் தொலைவிற்கு அப்பால், அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் சென்றுகொண்டிருந்த கப்பலுக்குத் தொலைக்காட்சி வாயிலாக ஒளியைப் பரப்பினுர். அதில்

வெற்றி கிட்டியது. அது முதல் சில ஆண்டு களுக்கு அவர் தமது கருவியின் மூலம் நிறைய ஊதியம் அடைந்தார். அதன்பின், பல்வேறு நாடுகளிலுமுள்ள பற்பலர் தொலைக்காட்சிக் கருவிகளைச் செய்ய முற்பட்டு விட்டதால், அவ ருக்கு வருமானம் குறைந்தது. ஆயினும் புகழ் நிலைத்து நிற்பதாயிற்று.

பொறுக்க இயலாத இன்னல்களுக்கு இடை யில், பொறுமையே உருவாக அமைந்த நமது தொலைக்காட்சித் தந்தை, சலியா உழைப்பால் தமது செயலைத் திறம்படச் செய்து முடித்து, உலகத்தாரை மகிழ்ச்சி வெள்ளத்தில் முழுகச் செய்தார். ஆனல், 1946ஆம் ஆண்டு அவர் கால வெள்ளத்தில் முழுக நேரிட்டுவிட்டது. அவரது மறைவு கண்டு உலகமே துயரக்கடலில் மூழ்கியது. அவரது கருவியோ எல்லாரையும் மகிழ்ச்சிக் கட லில் மூழ்கச் செய்த வண்ணம் இருக்கிறது.

### அருஞ்சொற்பொருள்

கோலியுள்ள—அமைத்துள்ள ; தொலைக்காட்சி—தொலை வில் நிகழ்வனவற்றை; அருகில்—நேரிற்காண்பதுபோற் காணும் காட்சி; விலக்கானவர்—வேருனவர்; தென்பட்டன—காணப்பட்டன ; 'முயற்சி திருவினை புகுத்திவிடும் "—மேலும் மேலும் முயன்று செயல்களைச் செய்தல் செல்வத்தை உண் டாக்கும் ; முயற்சி செய்யாதிருத்தலோ வறுமையை உண் டாக்கும்.

### வினுக்கள்

1. விஞ்ஞானம் நமக்குச் செய்துள்ள நன்மைகள் யாவை ?

2. டெலிவிஷன் என்பது யாது? அதனைப்பற்றி ஆராய்ந்து அதனைக் கண்டறிந்தவர் யார் ?

3. டெலிவிஷனைப்பற்றிப் பெயர்ட் செய்த முயற்சிகளை விவரிக்க.

4. பெயர்ட் என்னென்ன அலுவல்கள் பார்த்தார்?

5. பெயர்ட்டுக்கு உதவிபுரிந்தவர் யார்? என்னென்ன உதவிகள் புரிந்தார்கள்?

### பயிற்சி

1. தொலேக்காட்சி—குறிப்பு வரைக.

2. பெயர்ட்டின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி ஒரு கட்டுரையாக வரைக.

3. 'கூரிய அறிவுடையராய்' என்று தொடங்கும் பாராவில் கண்ட செய்திகளை, உங்கள் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

4. "முயற்சி திருவினை-புகுத்திவிடும்" இக்குறளின் கருத்தை விளக்கச் சொந்தமாக ஒரு வரலாறு கூறுக.

### இலக்கணம்

#### மெய்முன் உயிர் புணர்தல்

நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்து புணருமானால்; அந்த மெய்யெழுத்தோடு அந்த உயிரெழுத்து சேர்ந்து, உயிர் மெய்யெழுத்து ஆகிவிடும்.

(உ-ம்) வந்தான் + அவன் = வந்தானவன்.
மகள் + இருந்தாள் = மகளிருந்தாள்.
வேல் + எங்கே = வேலெங்கே?

இங்ஙனம் மெய்யோடு உயிர் சேர்ந்து உயிர்மெய் யெழுத்து ஆவது இயல்புப் புணர்ச்சியாகக்கொள்ளப்படும்.

தனிக் குற்றெழுத்தோடு சேர்ந்த மெய்யெழுத்தின் முன் வருமொழி முதலில் உயிரெழுத்து வந்து புணருமானால், நிலைமொழி ஈற்று மெய்யெழுத்து இரட்டிக்கும்

(உ-ம்) பல் + உடைந்தது = பல்லுடைந்தது.
கண் + எரிந்தது = கண்ணெரிந்தது.
(உ-ம்) நொய் + அரிசி = நொய்யரிசி.

(1) மேற்கண்ட விதி பொருந்துமாறு இப்பாடத்தி லிருந்து உதாரணங்கள் காட்டக் கூடுமானல் காட்டுக.

(2) மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கொடுக்க.

---

# 11. வீரமாமுனிவர்

தமிழ்மொழியைத் தமது மதவளர்ச்சி கருதித் தக்காரிடம் கற்றுத் தலை சிறந்தவர்கள் மேல்நாட்டுப் பாதிரியார்கள். அவர்கள் அவ்வாறு கற்றுத் தமிழர்களும் தம் மொழிக்குச் செய்யாத அத்தகைய அருந்தொண்டுகளைச் செய்தனர். அவ்வாறு செய்தவர்களுள் ஒருவராகிய **வீரமாமுனிவரைப்** பற்றிக் கீழே காண்போம்.

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டிலுள்ள **காஸ்தி கிலியோனே** என்னும் ஊரில் 1680ஆம் ஆண்டு, நவம்பர்த்திங்கள்,8ஆம் நாள் பிறந்தார். முனிவரது இயற்பெயர் **கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி** என்பதாகும். இவர் தந்தை கொண்டல்போ பெஸ்கி, தாய் எலிசபெத். இவர் இளமையில் மேல்நாட்டு மொழிகளாகிய **கிரீக், இலத்தீன்** முதலிய மொழிகளைக் குற்றமறக் கற்று அறிவிற் சிறந்து விளங்கினர். பிறகு இவர் இயேசு சங்கத்தைச் சார்ந்து, சமய நூல்களைக் கற்றுச் சமயத்தொண்டாற்றத் தொடங்கினர். இந்நிலையில் தமது சமயத்தைப் பரப்பும் பொருட்டு இயேசு சங்கத்தார் இவரைத் தமிழ் நாட்டிற்கு அனுப்பினர்.

மதத்தை வளர்ப்பதற்காகத் தமிழ் நாட்டை அடைந்த பெஸ்கி தமிழ்மொழி கற்ருல் அன்றி அதனை வளர்க்க இயலாது என்பதை, "உள்ளங் கை நெல்லிக்கனிபோல்," உணர்ந்தார். எனவே, அவர் மதுரைக்குச் சென்று அங்குள்ள சுப்ரதீபக் கவிராயர் முதலிய சிறந்த தமிழ்ப்புலவர்களிடம்



வீரமாமுனிவர்

தமிழ்மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களை முயன்று கற்றுச் சிறந்த புலமையை அடைந்தார். இவ்வாறு பெரும்புலமை அடைந்த பிறகு தமிழில் வீரமாமுனிவர் என அழைக்கப்பட்டார்.

வீரமாமுனிவர் தாம் கற்ற ஐம்பெருங் காப்பி யங்களுள் ஒன்ருன சிந்தாமணி என்னும் நூலைத்

தழுவித் தமது கிறிஸ்துவ மதத்தைத் தொடர்புடைய **தேம்பாவணி** என்னும் பெருங்காப்பியத்தை தமிழ்மொழியில் இயற்றினர்.

இதில் கம்பரின் கவிநயமும், திருவள்ளுவரது சிறந்த நீதிகளும் செறிந்திலங்கக் காணலாம். தேம்பாவணி என்பது ஏசுநாதரின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றை விவரித்துக் கூறும் நூலாகும்.

அருந்தமிழ் வளர்த்த ஐயராகிய வீரமாமுனிவர் காலத்திற்கு முன்னே, தமிழ்ச் சொற்களின் பொருள்களை அறிந்துகொள்வதற்குப் **பிங்கலம், சூடாமணி. திவாகரம்** முதலிய நிகண்டுகள் இருந்தன. அவைகள் எல்லாம் மனப்பாடம் செய்வதற்கு ஏற்றவகையில் செய்யுள் நடையிலேயே செய்யப்பட்டு இருந்தன; அவற்றால் பாவலர்களும் அறிஞர்களும் பயன் அடைந்தார்களே தவிர, ஏனைய சாதாரண மக்கள் பயன் அடையவில்லை. இதை அறிந்த முனிவர், இக்குறையைப் போக்குவதற்காக மேல்நாட்டு அகராதி முறையைத் தழுவி **சதுரகராதி** என்ற பெயரால் தமிழ்மொழியில் ஓர் அகராதி நூலை வெளியிட்டனர். இதனால் இவரை எல்லோரும் தமிழ் அகராதியின் தந்தை என்று கூறுகின்றனர்.

இவர் இயற்றிய உரைநடை நூல்கள் **வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், வாமன் கதை** முதலியனவாம். அன்றியும் உரைநடை நூல்களில் நகைச்சுவை நிரம்பிய கதைகளைத் தமிழ் நாட்டார்க்கு முதலில் இயற்றிக் காட்டியவர் வீரமாமுனிவரேயாவர். இதற்குச் சான்றாக உள்ளது இவரெழுதிய

**பரமார்த்தகுரு கதை** என்னும் நூலேயாகும். இவ்வாறு முனிவர் தமிழ் உரைநடையையும் உளமுவந்து வளர்த்து வந்தார்.

இப்பெரியார் இலக்கணத்தை நன்கு கற்றவர் என்று முன்னர்க்கூறினேம். அவ்விலக்கணத்தைத் தமிழ்நாட்டார் எளிதில் அறியும் பொருட்டு, **தொன்னூல் விளக்கம்** என்ற பெயரோடு ஒரு சிறந்த இலக்கண நூலைச் செய்தார். அந்நூல் **எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி** என்னும் ஐந்து இலக்கணங்களையும் பற்றிக் கூறுகின்றது. அன்றியும் நம்முனிவர் திருக்குறளின் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்து எழுதி, மேல்நாட்டார் தமிழ்மக்களது பண்பாடுகளை நன்கு அறியச் செய்தார்.

இவ்வாறு நம் தமிழ்மொழிக்குப் பல வழிகளில் பெருந்தொண்டுகளைச் செய்த வீரமாமுனிவர், திருநெல்வேலிக்கு அருகிலுள்ள மணப்பாடு என்னும் ஊரில், தமது 62ஆவது வயதில் ஆண்டவன் அடிகளைச் சேர்ந்தார். இவர் இவ்வுலகைவிட்டு மறைந்தாலும், இவரது தமிழ்ப்பணி, தமிழராகிய நாம் தாய்மொழிக்கு நம்மாலான தொண்டுகளை முயன்று செய்யவேண்டும் என்ற எண்ணத்தை எழச் செய்கிறது. எனவே இவரது புகழைப் போற்றி வாழ்தல் நமது கடமையாகும்.

அருஞ்சொற்பொருள்

தொண்டு-பணி; ஐம்பெருங்காபியங்கள்-சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன; பாவலர்-புலவர்; சான்று-ஆதாரம்; உளம்-மனம்; பண்பாடுகள்-சிறந்த குணங்கள்.

## வினாக்கள்

1. வீரமாமுனிவரது நாடு, ஊர், பெற்றோர் பெயர் முதலியவற்றை வரைக.

2. வீரமாமுனிவர் உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்ந்தது யாது?

3. தேம்பாவணி, ஐம்பெருங் காப்பியங்கள்—குறிப்பு வரைக.

4. வீரமாமுனிவரைத் தமிழ் அகராதியின் தந்தை என்று கூறக் காரணம் என்ன?

5. வீரமாமுனிவர் இயற்றிய உரைநடை, நூல்கள் யாவை?

6. தொன்னூல் விளக்கத்தை இயற்றியவர் யாவர்? அவர் எதற்காக அதனை இயற்றினர்?

7. வீரமாமுனிவரது தமிழ்ப்பணி நமக்கு எவ்வெண்ணத்தை எழச் செய்கின்றது?

## பயிற்சி

1. "உள்ளங்கை நெல்லிக்கனி போல"—இப்பழமொழியை விளக்கிச் சொந்தமாக ஓர் உதாரணம் கூறுக.

2. தேம்பாவணி, சதுரகராதி, தொன்னூல் விளக்கம்—குறிப்பு வரைக.

3. வீரமாமுனிவரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## இலக்கணம்

### உயிர்முன் மெய் புணர்தல்

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து இருக்க, வருமொழி முதலிய க, ச, த, ப என்னும் வல்லின எழுத்துக்கள் வந்தால் இடையில் பெரும்பாலும் அந்த வல்லின எழுத்துக்கள் மிகும்.

(உ-ம்) வர+கண்டான்=வரக்கண்டான்
நொடி+பொழுது=நொடிப்பொழுது
பொது+செலவு=பொதுச்செலவு
படை+தலைவன்=படைத்தலைவன்

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.

அகரவீற்றுப் பெயரெச்சம், அகரவீற்று வினைமுற்று, ஆறும் வேற்றுமை அகரவுருபு, அகரவீற்றுப் பலவின்பாற் பெயர். அம்ம என்னும் இடைச்சொல் இவற்றின் முன் வருமொழி முதலில் வரும் வல்லினம் அதாவது க, ச, த, ப, என்னும் எழுத்துக்கள் இயல்பாகும்.

(உ-ம்) வந்த+பையன்=வந்தபையன்
வருகின்ற+சிறுவன்=வருகின்ற சிறுவன்

அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் இயல்பாயிற்று.

வந்தன+குதிரைகள்=வந்தன குதிரைகள்.
பறந்தன+பறவைகள்=பறந்தனபறவைகள்.

அகரவீற்று வினைமுற்றுக்களின் முன் வல்லினம் இயல்பாயிற்று.

தன+கைகள்=தன கைகள்
தன+பலகைகள்=தனபலகைகள்

ஆறும் வேற்றுமை அகரவுருபின் முன்வல்லினம் இயல்பாயிற்று.

பல+கொடுத்தான்=பலகொடுத்தான்
சில+பெற்றான்=சிலபெற்றான்.

அகரவீற்றுப் பலவின்பாற் பெயர்களின் முன் வல்லினம் இயல்பாயிற்று.

அம்ம+கொடிது=அம்மகொடிது
அம்ம+பெரிது=அம்மபெரிது

'அம்ம' என்னும் இடைச்சொல்லின்முன் வல்லினம் இயல்பாயிற்று.

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக,

மூன்றும் வேற்றுமை ஒடு ஓடு என்னும் உருபுகள். ஆறும் வேற்றுமை அதுவுருபு, அது, இது என்னும் சுட்டுக்கள் இவற்றின்முன், வருமொழி முதலில் வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ—ம்) தந்தையோடு + சென்றுன் = தந்தையோடு சென்றுன்.

மகனெடு+போனுன்=மகனெடுபோனுன்
கண்ணனது+தந்தை=கண்ணனது தந்தை
அது+கண்டது=அதுகண்டது
இது+சென்றது=இதுசென்றது

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.


---

## 12. எல்லோரா கயிலாயநாதர் கோயில்

நமது பாரத நாடு சிற்பக்கலைக்குப் பெயர் போனது. இதன்கண் சிற்பக்கலைத்திறன் வாய்ந்த கோயில்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றுள் சில பாறைகளைக் குடைந்து ஆக்கிய குகைக் கோயில்களாகும். குகைக் கோயில்களில் மிகச் சிறந்தவை **எல்லோராவில்** உள்ளவையே; எனில் அது மிகையாகாது. எல்லோராவில் இந்து கோயில்கள், பௌத்த விகாரங்கள், சமணப் பள்ளிகள் எனப் பலவகைக் கோயில்கள் உள்ளன. அவற்றுட் சிறந்தது அங்குள்ள **கயிலாயநாதர் கோயிலேயாம்.** அதைப் பற்றிய செய்திகளை ஈண்டுக் கூறுவோம்.

எல்லோராவில் அமைந்த குகைக்கோயில்கள் எல்லாம் பிறை வடிவமானதொரு குன்றின்

தொகுதியில் உள்ளன. இக்குன்றுத் தொகுதி ஹைதராபாத் இராஜ்யத்தில் ஔரங்கபாத் புகை வண்டி நிலையத்தினின்று ஏறக்குறைய பதினாறு கல் தொலைவில் இருக்கின்றது. இங்கு இருபத்து நான்கு குகைக் கோயில்கள் அமைந்துள்ளன. மேற்கூறிய கயிலாயநாதர் கோயில் இவற்றுள் நடுநாயகமாய்ப் பதினாறும் குகைக் கோயிலாய் விளங்குகின்றது.




கயிலாயநாதர் கோயில்

எல்லோராவில் கயிலாயநாதர் கோயில் எட்டாம் நூற்றாண்டில் சமைக்கப்பட்டது. அங்குள்ள சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரங்களும், சைத்தியங்களும் அதற்கு முன்னர் அமைக்கப்

பட்டவை. எல்லோராவில் ஆதியில் இயற்கையாகப் பல குகைகள் அமைந்திருந்தன. அவற்றில் இந்துமதத் துறவிகள் இருந்து தவமியற்றி வந்தனர். கி. மு. மூன்றும் நூற்றுண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றுண்டு வரையில், பௌத்த சமண சமயங்களின் தாக்குதலால் இந்து சமயம் வலியொடுங்கிக் கிடந்தது. அதன்பின் அது



கயிலாய நாதர் கோயில் சிற்பங்கள்

மீண்டும் தலையெடுக்கத் தொடங்கிப் பௌத்த சமண சமயங்களை வலியொடுங்கச் செய்தது. அக்காலை அம்மதத் துறவிகள் பலர் எல்லோரா குகைகளைக் குடைந்து பெரிதாக்கிச் சிற்ப வேலைப்

பாடுகள் அமைந்த விகாரங்களாகவும், சைத்தியங்களாகவும், பள்ளிகளாகவும் ஆக்கினர்.

நிற்க, கி. பி. 757இல் இராஷ்டிரகூட அரசனான முதலாம் கிருஷ்ணன் என்பவன், தக்காணத்தில் நீண்டகாலமாக அரசாண்டு கொண்டிருந்த சாளுக்கியப் பேரரசை ஒடுக்கி இராஷ்டிரகூடப் பேரரசை நிறுவினான். அவன் தான் பெற்ற வெற்றியைச் சிறப்பாகக் கொண்டாடலானான். அக்காலத்தில் அவன் தன் குலதெய்வமாகிய சிவபெருமானுக்கு மிகச் சிறந்ததொரு கோயில் கட்ட ஆராய்கையில், அச்சபையிலிருந்த பெரியவர் ஒருவர், அக்கோயிலை எல்லோராவில் குகைக் கோயிலாக அமைத்தலே தக்கதெனக் கூறினார். அது கேட்ட அரசனும் அதுவே தக்கதெனத் தேர்ந்து, ஆங்குக் கயிலாயநாதர் கோயில் என்னும் பெயரால் ஒரு சிவன் கோயிலை நிருமித்தான். அது நிருமிக்கப்பட்ட விதத்தை அடியிற் காண்போம்.

சாதாரணமாகக் குகைக் கோயில்களை அடியினின்று முடிநோக்கிப் பாறைகளை வெட்டிச் சமைப்பது வழக்கம். அதற்கு மாறாக இக்கயிலாயநாதர் கோயில் முடியினின்று அடி நோக்கி வெட்டி ஆக்கப்பட்டது. இக்கோயிலை உண்டாக்குவதற்கு 250 அடி நீளமும், 160 அடி அகலமும் கொண்ட மலையிடமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இதைச் சுற்றிச் சுமார் 50 அடி அகலமும் 150 அடி ஆழமும் உள்ள பாதை ஏற்படுமாறு பாறை குடைந்தெடுக்கப்பட்டது. அதனால்நடுவிலமைந்த பெருந்திடரில், திருச்சுற்றுக்கள், அடுக்கடுக்கானமாடிகள், வாயில்கள், சுவர்கள், தூண்கள், மண்டபங்கள் முதலியன

ஏற்படுமாறு செய்யப்பட்டன. இன்னும் சுவர், தூண், மண்டபம் இவற்றில் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட யானை, கிளி, மயில் மனிதர், தேவர் முதலியோரின் உருவங்களும் செதுக்கப்பட்டன.

திடரைச் சுற்றிச் சுவர்போல் அமைந்த பாறையில் தரைமட்டத்தில் ஓர் **ஆயிரக்கால் மண்டபமும்** அதற்குச் சற்று மேலான தளத்தில் மற்றொரு **ஆயிரக்கால் மண்டபமும்** இயற்றப்பட்டன. நடுவிலமைந்த திருக்கோயிலின் வடபாகத்தில் நடுக்கூடம் ஒன்றும், அதற்கு நேராக உள்ள ஆயிரக்கால் மண்டபப் பகுதியில் **இலங்கேசர் கோயிலும்**, இக்கோயிலுக்கு எதிரில் மற்றொரு மண்டபமும் உண்டாக்கப்பட்டன. இன்னும் நடுக்கோயிலின் வடகிழக்கு மூலையில் **கங்காதேவியின் கோயில்** ஒன்று அமைக்கத்தொடங்கி எக்காரணத்தாலோ முற்றுப் பெருது விடப்பட்டுள்ளது. இனி இக்கோயிலின் சிறப்பை நோக்குவோம்.

கயிலாயக் கோயிலினுள் நுழைந்ததும், முதன் முதலாக இரண்டடுக்கு மாடியோடு கூடிய **நந்தி விமானத்தைக்** காணலாம். இது உயரிய சிற்ப வேலைகளைக் கொண்டது. இதன் அடியில் நந்தியின் சிலை அழகாக அமைந்திருக்கின்றது. இவ் விமானத்தின் முன்பாக ஒருபுறத்தில் இருக்கும் கோபுரத்தையும், அதற்கு எதிர்ப்புறமாக இருக்கும் தலைமைக்கோயிலையும் ஓர் கற்பாலம் இணைக்கிறது.

தலைமைக் கோயிலில் அமைந்த கூடத்தின் இரண்டு பக்கங்களிலும், பக்கத்திற்கொன்ருக

இரண்டு கற்றூண்கள் உள்ளன. இவை 49 அடி உயரமானவை. இவற்றின் உச்சியில் முத்தலை சூல உருவமும், அடியில் யானை உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இந்த யானை உருவங்கள் உயிருள்ள யானையின் அளவு பெரியனவாக உள்ளன. மேற்கூறிய தூண்களுக்கு இடதுபுறத்தில்தான் முன்கூறிய **கங்காதேவி கோயில்** இருக்கிறது. இதில் **கங்கை, யமுனை, சரசுவதி** ஆகிய மூன்று நதித் தெய்வங்களின் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை நதித் தெய்வங்கள் என்பதைக் குறிக்க, இவற்றின் நெற்றி மாடங்களில் நீர்த்தொட்டிகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

கயிலாயநாதர் கோயில் விமானம் 96 அடி உயரமுள்ளது. 27 அடி உயரமுடைய இதன் அடிப் பீடத்தின் அடியில் தலை, துதிக்கை, தந்தம், பாதி உடல் இவற்றைமட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் விதத்தில், பல யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த யானைகள் விமானத்தையே தாங்கி நிற்பதுபோன்ற தோற்றத்தைக் கொண்டுள்ளன.படையெடுப்புக்காரர்களால்இந்த யானைகளில் பல சிதைக்கப்பட்டுள்ளனவெனினும் சிதைவுறாத வகையிலும் சில யானைகள் உள்ளன.

கோயிலின் உட்புறத்தில் 53 அடி சதுரமுள்ள கூடம் ஒன்று இருக்கிறது. இதில் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளை உடைய 16 தூண்கள் உள்ளன. இங்கிருந்து மூலத்தானத்திற்குப் போக வாயில் ஒன்று உள்ளது. மரத்தில் செய்யத்தக்க நுட்பமான சிற்ப வேலைப்பாடு இதில் அமைந்துள்ளது.

இந்த வாயிலைக் கடந்து உட்சென்றுல் சிவ லிங்கம் உள்ள மூலத்தானத்தை அடையலாம். இங்கு வலிய ஒற்றைக் கற்சுவர்களின்மீது அழகிய விமானமொன்று, சிறந்த சிற்ப வேலைப்பாடுகளை உடைய பதுமைகளோடு கூடியதாக அமைக்கப் பட்டுள்ளது. இதுவே கர்ப்பக்கிருகமாகும். இதனைச் சூழ்ந்த சுற்று மண்டபத்தில் உமையம்மை, மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார் முதலியோர் ஆல யங்களும் வேறு இரு கோயில்களும் உள்ளன.

கயிலாயநாதர் கோயிலில் அமைந்த சிற்பங் களில், பல புராணக் கதைகளும் செதுக்கப்பட்டுள் ளன. இவற்றுள் ஒன்று சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. அதாவது, இராவணன் கயிலையங்கிரியைப் பெயர்த்தெடுக்க முயலுவதேயாம். அதனுல் அம் மலை நிலைகுலைய, உமையம்மை அஞ்சிச் சிவபெரு மானைத் தழுவிக்கொள்கின்ருர். அப்பொழுது அப் பெருமான் இராவணனது அகந்தையை அடக்க எண்ணி, அம்மலையைத் தம் கட்டைவிரலால் அழுத்துகின்ருர். அதனுல், மலையின் அடியில் கைகள் அகப்பட்டு வருந்திய அவன், தன் கைகளில் ஒன்றை வெட்டி அதனை வீணைத் தண்டாகவும், தன் உடல் நரம்பை வீணை நரம்பாகவும் சேர்த்து வீணையுண்டாக்கி, அந்த வீணை நாதத்தோடும் சிவ பெருமானைத் துதித்துப்பாடி, அவரருளைப் பெறு கின்ருன். இவ்வருமைச் சிற்பங்கள் முற்கூறிய இலங்கேசர் கோயிலில் பலவகைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய கோயிலின் சிறப்பை, அவரவர் அங்குச் சென்று நேரிற்கண்டறிதலே தக்கதாகும்.

அச்சிறப்பை வாயாற் கூறின் அமையாது; ஏட்டில் எழுதின் அடங்காது. இந்தக் குகைக் கோயிலைக் குடைந்தெடுத்து, உருவாக்குவதற்குச் சிற்பிகள் எத்தனை அரும்பாடுபட்டிருப்பர். இவற்றை ஆக்குதற்கு முனைந்த அரசர், எத்தனை அக்கறையோடு அப்பணியில் ஈடுபட்டிருப்பர். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தால், இக்கோயிலின் அருமை தெரியவரும். இத்தகைய சிற்பங்களை அமைத்து நம் நாட்டிற்குப் பெருமை உண்டாக்கியவர்களை என்னென்று புகழ்வது! அவர்களது புகழ் வாழ்க!

### அருஞ்சொற்பொருள்

திறன்—திறமை, மேன்மை; மிகையாகாது—அதிகப்படுத்திக் கூறுதலாக ஆகாது; தொகுதி—சேர்க்கை; சமைக்கப்பட்டது—(இங்குக்) கட்டப்பட்டது; விகாரம்—பௌத்த துறவிகளது இருப்பிடம்; சைத்தியம்—பௌத்தர் கோயில்; பள்ளி—சமணர் கோயில்; நிருமித்தான்—இயற்றினன்; திடர்—திட்டு; திருச்சுற்று—கோயிலை வலம் வருவதற்கான சுற்றுப்பாதை; நந்தி—சிவபெருமானது வாகனமாகிய காளை மாடு.

### வினாக்கள்

1. எல்லோரா குகைக் கோயில்கள் எங்குள்ளன?

2. எல்லோராவில் கயிலாயநாதர் கோயில் ஏற்படுமுன் அது எந்நிலையில் இருந்தது?

3. எல்லோராவில் கயிலாயநாதர் கோயிலை உண்டாக்கியவர் யார்? அதனை ஏன் உண்டாக்கினர்?

4. எல்லோராவிலுள்ள கயிலாயநாதரது கோயிலைப் பற்றி அறிவதென்ன?

5. எல்லோராவிலுள்ள மற்ற குகைச் சிற்பங்களைப் பற்றி அறிவதென்ன?

### பயிற்சி

1. எல்லோராவிலுள்ள கயிலாயநாதர் கோயில், அங்குள்ள பௌத்த விகாரங்கள்—இவைகளைப்பற்றிக் குறிப்புக்கள் வரைக.

2. எல்லோராவின் பழைய சரித்திரத்தைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

### இலக்கணம்

## மெய்ம்முன் மெய் புணர்தல்

### ணகர னகர வீறு

நிலைமொழி ஈற்றில் ணகர னகரங்கள் இருக்க, வருமொழி முதலில் வல்லினம் வரின், அந்த ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களாகத்திரியும்.

(உ—ம்) மண் + சட்டி = மட்சட்டி
கண் + புலன் = கட்புலன்
பொன் + கலம் = பொற்கலம்
தன் + புகழ்ச்சி = தற்புகழ்ச்சி

ணகர னகரங்களின் முன் வல்லினம் வர, அவை முறையே டகர றகரங்களாகத் திரிந்தன.

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் இரண்டு கூறுக.

### மகர வீறு

நிலைமொழி ஈற்றில் மகரம் இருக்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால், சில சில இடங்களில், மகரஈறு கெட்டு வந்த வல்லினம் மிகும்; வேறு சில இடங்களில், மகரஈறு வருமொழி வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரியும்,

(உ—ம்) வட்டம் + கல் = வட்டக்கல்
மரம் + பலகை = மரப்பலகை
மனம் + பொருத்தம் = மனப்பொருத்தம்

மகரஈறு வல்லினம் வரச் சில இடங்களில் மகரம் கெட்டு வந்த வல்லினம் மிகுந்தது.

மரம் + கண்டான் = மரங்கண்டான்
இடம் + சிறிது = இடஞ்சிறிது
பழம் + தின்ருன் = பழந்தின்ருன்

மகரஈறு வல்லினம் வரச் சில இடங்களில், வந்த வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்தது.

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் நான்கு கூறு.

### லகர ளகர வீறு

நிலைமொழி ஈற்றில் லகர ளகரங்கள் இருக்க, வருமொழி முதலில் வல்லினம் வந்து புணருமாஞல்; அந்த லகர ளகரங்கள் முறையே றகர டகரங்களாகத் திரியும்.

(உ—ம்) கல் + பாறை = கற்பாறை
பல் + பொடி = பற்பொடி
முள் + செடி = முட்செடி
வாள் + போர் = வாட்போர்

லகர ளகரங்கள் வல்லினம் வர முறையே றகர டகரங்களாகத் திரிந்தன.

மேற்கண்டவற்றிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் இரண்டு கூறுக.

---

## 13. மாணவர் சமூகத் தொண்டு

நாடாகிய அன்னைக்குக் குடிகள் யாவரும் குழந்தைகளே. இதனுல் மக்கள் எக்குலத்தவராயினும், எச்சமயத்தாராயினும் ஒருவர்க்கொருவர் உடன்பிறந்தார் ஆகின்றனர். உடன் பிறந்தார் ஒருவர்மீதொருவர் அன்பு பாராட்டுதல் வேண்டும். துன்புற்றவர்க்கும், வன்மையற்றவர்க்கும், உதவி

வேண்டி நிற்பவர்க்கும் தம்மால் இயன்ற உதவி யைச் செய்யவேண்டும். இன்றேல் உடன் பிறப்பு என்பது ஏது? நாட்டில் நன்மை என்பது ஏது? பகையும், பூசலும், பொருமையும், அழுகையுமே மிகும். ஆகவே நாட்டில் துன்பம் ஏற்படாமல் நன்மை ஏற்படவேண்டுமானல் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டுவது இன்றியமையாததாகும். இவ் வாறு உதவிபுரிவதே சமூகத் தொண்டாகும்.

சமூகத் தொண்டினைப் பொதுவாக யாவரும் மேற்கொள்ளவேண்டுமாயினும், மாணவர் அத னைச் சிறப்பாக மேற்கொள்ளவேண்டியது அவ சியம். இப்படிக் கூறுவதற்கு இரண்டு காரணங் கள் உண்டு. அவற்றுளொன்று பின்வருமாறு:

இன்று மாணவர்களாக இருப்பவர்கள், நாளை நாட்டு அரசியலில் அங்கம் வகித்துப் பற்பல அலு வல்களை மேற்கொண்டு, அமைச்சர், அரசவை உறுப்பினர், நகரமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக உறுப்பினர், கல்வித்துறை அலுவலகத்தார், ஆசிரியர், பல துறை அலுவலாளர் முதலியவர்க ளாக ஆவார்கள். இவர்கள் பிறருக்கு நன்மை செய்யும் பெற்றியர்களாக இராவிடில் இவர்களது அலுவல்களால் நாடு நலனடையுமோ? ஆகவே, மாணவர் சமூகத் தொண்டில் ஈடுபட்டுப் பிறர்க் குதவி புரியும் பணியில் பயிற்சி பெறவேண்டியது அவசியமாகும்.

இனி இரண்டாவது காரணத்தைக் கவனிப் போம். மாணவர்களாயிருக்கும் நிலையில் மக்கள்

இளமைப் பருவத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். இளமை முறுக்கால் அவர்களுக்குச் சுறுசுறுப்பு இயற்கையில் அமைகிறது. சோர்வைப் பொருட்படுத்தாது வேலை செய்யும் வன்மை உடலில் இயற்கையாகப் பொருந்தியுள்ளது. சோர்வு மிகுந்தாலும் சிறிது ஓய்வு கொடுத்த மாத்திரத்தில் உடல் மீண்டும் வன்மை பெற்றுவிடுகிறது. எதனையும் முற்பட்டுச் செய்யவேண்டும் என்னும் ஊக்கமும் இயற்கையில் தோன்றுகிறது. ஆனால் ஒரே ஒரு குறை! நன்மை தீமைகளை அறிந்து, நன்மையிலே மனத்தைச் செலுத்திச் செயலாற்றுவது மட்டும் பயிற்சியால் அடைய வேண்டியிருக்கிறது. அப்பயிற்சிக்கு ஏதுவானது சமூகத் தொண்டேயாம். கண்டபடி ஓடும் இளமைப் பருவத்தின் இயற்கைப் பண்பை, பயிற்சியால் நல்வழியில் திருப்பி, பிறர்க்காக உழைக்கவேண்டும் என்னும் கருத்தை வளர்த்து விட்டால், மாணவர் அடையும் மேன்மை அளவிடற்கரியதாகும்.

தனியொரு மாணவனை நல்லவனாக இருக்கப் பழக்குவதிலும், கூட்டமான பல மாணவரை நல்வழியிற் பழக்குதல் எளிதான செயலாகும். மனிதர் கூட்டமாக ஒரு வேலையைச் செய்யும்போது, எளிதில் ஊக்கங்கொள்கின்றனர். செயலாற்றுந் திறமையில் போட்டி ஏற்பட்டுச் சிறந்த பயிற்சி பெற இடமுண்டாகிறது. பழக்கத்தால் இயற்கைக் குணம் மாறித் தீயவரும் நல்லவராக இடமேற்படுகிறது.

நிற்க, மேற்கூறியவற்றால் மாணவர்க்குச் சமூகத்தொண்டு அவசியமென அறிந்தோம். இது குறித்தே அரசியலாரும் மாணவர் சமூகத்

தொண்டினை வலியுறுத்தி, அதற்காகச் சில பயிற்சிப் பள்ளிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அப்பயிற்சிப்பள்ளி மாணவர்கள் கிராமங்களுக்கு வலியச் சென்று, கிராமத்தவர்க்கு உதவி புரியுமாறு வற்புறுத்தப்படுகின்றார்கள். கிராமத்திலுள்ள குறைகளைத் தாம் போக்க முற்படுவதோடு கிராமத்தவர்களையும் அதில் ஈடுபடுத்தவேண்டும் என்றும், இதற்காக இனிய பேச்சால் கிராமத்தவர்களை வசப்படுத்த வேண்டும் என்றும் கற்பிக்கப்படுகின்றார்கள். அன்றியும், தற்காலத்தில் கல்லூரிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் தேசீயஇராணுவப் படை (N. C. C.) என்ற ஒரு படை அரசினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரி மாணவரும் உயர்நிலைப்பள்ளி மாணவரும் அதில் படையினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இராணுவப் பயிற்சியோடு, சமூகத்தொண்டுப் பயிற்சியும் தரப்படுகிறது. அவர்கள் அடிக்கடி உல்லாசப் பிரயாணங்கள் செய்வாராய்ப் பற்பல கிராமங்களுக்கும் சென்று சமூகத்தொண்டு செய்து அத்தொண்டில் பயிற்சி பெற்றுவருகின்றார்கள். இப்படையில் சேருவதற்கு மாணவர்கள் மனமுவந்து முன்வரவேண்டும்.

நிற்க, மாணவர்கள் சமூகத் தொண்டாகச் செய்தற்குரிய செயல்கள் யாவை என ஆராய்வோம். சமூகத்தொண்டு பெரும்பாலும் தற்காலத்தில் கிராமங்களிலேயே செய்யவேண்டியிருக்கிறது. நகரங்களில் அவற்றின் நன்மைக்கான பல செயல்களையும் செய்வதற்கு அலுவலாளர் அரசியலாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். ஆதலால் அங்குச் சமூகத்தொண்டு அவ்வளவாக

வேண்டியதில்லை என்னலாம். ஆயினும் தீப்பிடித்துக்கொள்ளுதல், தொத்துநோய் பரவுதல், பூகம்பம் போன்ற அபாயங்கள் ஏற்படுதல் ஆகிய காலங்களில், நகரங்களிலும் சமூகத் தொண்டு செய்யவேண்டியது அவசியமே ஆகும். கிராமங்களில் சாதாரணமாகத் தெருக்களைச் சுத்தப்படுத்தல், சாலைகளைப் பழுது பார்த்தல், வாய்க்கால்களைப் பழுதுபார்த்தல், சாலைகளையும் கால்வாய்களையும் அமைத்தல், கல்வியைப் பரவச் செய்தல், நூல் நிலையங்கள், வாசகசாலைகள் முதலியவற்றை ஏற்படுத்துதல், தொத்துநோய் பரவாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல்போன்ற பல அலுவல்களைச் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் மாணவர்கள் தங்களாலியன்ற அளவு செய்யுமாறு, அவர்களைப் பல குழுவினராகப் பிரித்து, தக்கவர்களைக் குழுத்தலைவர்களாக ஏற்படுத்தி, பணியாற்றுமாறு செய்தல்வேண்டும்.

மேலும் அவர்கள், சரிவரத் தங்கள் வேலைகளைச் செய்வதற்காக, அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களுக்குச் சில சலுகைகளை வழங்க வேண்டும். தக்க வழிகாட்டிகளைக் கொண்டு அவர்கள் செயலாற்றும் முறைகளில் அவர்களைப் பழக்கவேண்டும். தலைமைக் காரியாலயம் ஒன்றையமைத்து, பற்பல குழுவினரையும் அதில் உறுப்பினராக்கி, உதவி வேண்டிய கிராமங்களுக்கு அவர்களைக் காரியாலயத்தார் அனுப்ப வேண்டும். மாணவர்க்கு விரிவுரை யாற்றுவதில் தேர்ச்சியுண்டாகுமாறு செய்து, கிராமங்களுக்கு அதில் தேர்ச்சியடைந்தவர்களை அனுப்பி, அந்தந்தக் கிராம முன்னேற்றத்திற்கான செயல்கள்

இன்னவை என, கிராமத்தவர்களுக்கு அறிவிக்கச் செய்யவேண்டும். அரசாங்கத்தார் செய்திப் படங்கள் மூலமாகச் சமூகத் தொண்டினை, தங்கள் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் எங்ஙனம் செய்து வருகின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டி வருகிறார்கள். பள்ளியதிகாரிகள், அவற்றிற் கண்டவாறு தாங்களும் தங்கள் பள்ளிகளில் சமூகத் தொண்டாற்றும் முறையை வகுத்துக் கொண்டு, மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும்.

### அருஞ்சொற்பொருள்

சமூகத்தொண்டு-சமூகம்+தொண்டு; சமூகம்=கூட்டம்-(ஒரு நாட்டிலுள்ள மக்களின் தொகுதி); தொண்டு=பணி (இங்கு உரிமைப் பணி); பெற்றியர்=குணமுடையவர்கள்; பூகம்பம்=நில நடுக்கம்.

### வினாக்கள்

1. சமூகத் தொண்டு என்பது என்ன?

2. மாணவர் சிறப்பாகச் சமூகத் தொண்டு செய்தற்கு உரியவர்—ஏன்?

3. சமூகத் தொண்டு செய்தற்கு அரசாங்கத்தார் செய்துள்ள ஏற்பாடுகள் யாவை?

4. சமூகத்தொண்டினால் விளையும் நன்மைகள் யாவை?

5. மாணவர் எவ்வெவ்வகையில் சமூகத் தொண்டு செய்யலாம்?

### பயிற்சி

1. சமூகத் தொண்டு என்பது பொருளாக ஒரு கட்டுரை வரைக.

2. தேசீய இராணுவப்படை, பூகம்பம்—குறிப்பு வரைக.

3. மாணவரும் கிராமநலனும்—இது பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. சமூகத்தொண்டாக நீங்கள் செய்த அல்லது செய்து வருகிற பணி உண்டாயின் அதைக் குறிப்பிடுக.

## இலக்கணம்

### சில வாக்கிய முடிபுகள்

1. பல எழுவாய்களுக்கு ஒரு பயனிலை கொடுத்து முடிக்கவேண்டியிருந்தால், அப்பயனிலை பன்மையாயிருக்க வேண்டும்.

(உ-ம்) நாயும் பூனையும் ஓடின.

கண்ணனும், வேலனும், பார்வதியும் ஓடினர்.

2. தன்மை எழுவாயோடு முன்னிலை, படர்க்கை, எழுவாய்களைச் சேர்த்துப் பயனிலை கொடுத்து முடிக்க வேண்டுமாயின் தன்மைப் பன்மைப் பயனிலை கொடுத்து முடிக்கவேண்டும்.

(உ-ம்) நானும், நீயும் சென்றோம்.

நானும், நீயும், அவனும் உண்டோம்,

3. முன்னிலையோடு படர்க்கையைச் சேர்த்து முடிக்க வேண்டுமானால், முன்னிலைப் பன்மை வினையைக் கொடுத்து முடிக்கவேண்டும்.

(உ-ம்) நீயும், அவனும் சென்றீர்கள்.

நீங்களும், அவர்களும் இருந்தீர்கள்.

மேற்கண்ட விதிகளுக்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் முறையே இரண்டிரண்டு தருக.

# 14. ஔவை தூது—(நாடகம்)

## களம் 1

**இடம் :** அதியமான் அவைக்களம்.

**காலம் :** காலே.

**உறுப்பினர் :** அதியமான், அமைச்சர், பரிவாரத்தார், ஔவையார் முதலியோர்.

[அவை கூடியிருக்கின்றது. அதியமான் நாடு காவல் குறித்து ஆலோசனை புரிகின்ருன்]

**அதியமான் :** அமைச்சரே, சில காலமாகக் காஞ்சியிலிருந்து வருகின்ற செய்திகள், அவ்வூர் அரசனுகிய தொண்டைமான் பெருத்த போர் ஏற்பாடுகள் செய்து வருவதைக் குறிக்கின்றன. அதைப்பற்றி நன்கறிந்து வருமாறு நமது தலைமை ஒற்றனை அனுப்பினேமே! அவன் திரும்ப வந்து ஏதாவது செய்தி அறிவித்தானே?

**அமைச்சர் :** நேற்றிரவு தான் திரும்பி வந்தான். போர் ஏற்பாடுகள் பெருத்த அளவில் நடைபெறுவது உண்மைதான். நம்மீது போர் தொடுக்க நினைத்திருக்கின்ருனும் அத்தொண்டைமான்.

**அதியமான் :** நான் முன்னமேயே இதனை ஊகித்தேன். அது கிடக்கட்டும். நமது நிலை எம்மட்டில் இருக்கின்றது? போர் மூண்டால் நாம் அவனை எதிர்த்து நிற்க இயலுமோ?

அமைச்சர்: நமது வீரர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்; போர்ப் பயிற்சியும் மிக்கவர்கள். ஆனால் அவர்கள் மிகக் குறைந்த தொகையினர். போர் ஒன்றும் சில ஆண்டுகளுக்கு நேராது என்று நினைத்து நமது கூலிப்படையைக் கலைத்து விட்டோம். மீண்டும் அவர்களைக் கூட்டிச் சிறிது பயிற்சி யளிக்கவேண்டும். இதற்கு ஏறக்குறைய ஆறுமாத காலமாவது ஆகும். மேலும் வாள், வேல், புரிசை முதலிய படைக்கலங்களையும் சிறிது சேகரிக்கவேண்டியுள்ளது.

அதியமான்: ஆயின், நாம் போரிலே பகைவனை வெற்றிகொள்ளவேண்டுமானால், இன்னும் ஆறு மாதங்களுக்குள் போர் நேரலாகாது; அவ்வளவுதானே?

அமைச்சர்: ஆம்!

அதியமான்: இதற்கென்ன செய்வது? ஆறு மாதம் வரையில் அவன் படையெடுக்கமாட்டான் என்று சொல்ல இயலுமா?

அமைச்சர்: விரைந்து இன்னும் ஒரு மாதத்திற்குள் அவன் படையெடுத்துவிடுவான் என்று நமது ஒற்றன் கூறுகின்றான்.

அதியமான்: இது குறித்து இப்போது என்ன செய்யலாம்? தூது அனுப்பிச் சமாதானம் பேசலாமா?

அமைச்சர்: செய்யலாம். தூது போவார் மிகுந்த ஆற்றல் படைத்தவரா யிருந்தாலன்றிச் சமாதானம் ஏற்படாதென்று தோன்றுகிறது.

அதியமான்: நீர் சென்று வருகின்றீரா?

**அமைச்சர் :** செல்கின்றேன் ; அதனால் நமது நாட்டின் ஒரு பகுதியை இழக்க நேரிடினும் நேரிடலாம். அது குறித்தே சிறிது ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

[காவலன் ஒருவன் வந்து தலை வணங்கி நிற்றல்]

**அமைச்சர் :** காவல, யாது செய்தி ?

**காவலன் :** ஔவையார் வந்து வாசலில் நிற்கின்றார்.

**அதியமான் :** வரவிடு அவரை !

[காவலன் போதல் ; ஔவையார் வருதல்]

**ஔவையார் :** அரசே ! வாழ்க ! அவையோர் அனைவருக்கும் வணக்கம்.

**அதியமான் :** அம்மையே, வணக்கம். தக்க சமயத்தில் வந்தீர்கள்.

**ஔவையார் :** என்ன செய்தியோ !

**அதியமான் :** காஞ்சியரசன் தொண்டைமான் நம்மீது விரைந்து போர் தொடுக்க நினைத்துள்ளான். நாம் இப்போது போருக்கு ஆயத்தமாக இல்லை. என்ன செய்வதென்று ஆலோசித்துக் கொண்டிருக்கின்றோம். நல்லவேளையாகத் தாங்களும் வந்தீர்கள்.

**ஔவையார் :** காஞ்சியரசனா ! போரா ! இந்த அரசர்களே இப்படித்தான் ! எப்போதும் போர் ! போர் ! போர் !

**அதியமான்:** அரசருக்குப் போர்தானேதொழில்.

**ஔவையார் :** அது கிடக்கட்டும். நான் போய்ப் போரை எங்ஙனமாவது தவிர்க்க முயற்சிக்கிறேன்!

**அதியமான் :** நல்லது! அங்ஙனமே செய்யுங்கள்! அதுவே யான் இப்போது விரும்புவது.

**ஔவையார் :** நன்று; இதோ சென்று வருகின்றேன்.

## களம் 2

**இடம் :** தொண்டைமான் அவைக்களம்.

**காலம் :** காலை.

**உறுப்பினர் :** தொண்டைமான், அமைச்சர் அவையினர். ஔவையார் முதலியோர்.

[அவை கூடியிருக்கின்றது. மந்திராலோசனை நடைபெறுகின்றது.]

**தொண்டைமான் :** அமைச்சரே, நமது போர் ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டனவா?

**அமைச்சர் :** எல்லாம் முடிந்துவிட்டன. ஆயிரமாயிரமாக வாள், வேல், வில், புரிசை முதலியன எலலாம் சித்தமாகிவிட்டன. அம்புகள் நூறுயிரக் கணக்கில் உள்ளன. உணவுப்பொருட்களும் நிறையச் சேர்த்துவிட்டோம். படைவீரரும் பதினுயிரக் கணக்கில் உள்ளனர். நமது படைக்கலங்கள் படைக்கலக் கொட்டிலில் வரிசையாக அடுக்கி வைத்துள்ள விதத்தைக் கண்டாலே பகைவருக்

குக் கதி கலங்கும். பளபளவென்று மின்னும் அவற்றின் ஒளியைக்கண்டாலோ உடல் நடுங்கும்.

**தொண்டைமான் :** முறைப்படி அவை பூசிக்கப் பெற்று வருகின்றனவா ?

**அமைச்சர் :** ஆம்! அவையெல்லாம் மயிற்பீலி சூட்டப்பெற்று, மாலை அணியப்பெற்று, நெய்க் காப்பு இடப்பெற்று, உரிய காலங்களில் உள்ளன் போடு பூசிக்கப் பெற்று வருகின்றன அரசே!

**தொண்டைமான் :** நல்லது. பகைவன்மீது எப் பொழுது போர்க்கெழலாம் என்பதைத் தீர்மானித் தீரா ?

**அமைச்சர் :** நாம் எல்லாவற்றிற்கும் சித்தமா யிருக்கின்றோம்! நாளையே போரை ஆரம்பித்து விடலாம்! ஆனால் நிமித்திகர் பதினைந்து நாட்கள் கழித்துப் போரைத் தொடங்குவது நலம் எனக் கூறுகின்றார்.

**தொண்டைமான் :** நல்லது, அங்ஙனமே செய் வோம். விரைந்து நாளையும் வேளையையும் கணித் துத்தருமாறு யாம் கூறியதாக அவருக்கறிவித்து, அவற்றைத் தெரிந்து நாளையதினம் எமக்கு அறி விப்பீர் !

**அமைச்சர் :** நல்லது. அரசே! அங்ஙனமே!

[காவலன் வந்து வணங்கி நிற்றல்.]

**தொண்டைமான் :** காவல, யாது செய்தி!

**காவலன் :** அரசே, வாழ்க! வாயிலில் ஔவையார் வந்து நிற்கின்றார்.

**தொண்டைமான் :** நல்லது, வரவிடு அவரை!

[காவலன் போதல்—ஔவையார் வருதல்]

**ஔவையார் :** அரசே! வாழ்க! வணக்கம் அவையோர் யாவருக்கும் வணக்கம்!

**தொண்டைமான் :** அம்மையே! தங்கள் வரவு நல்வரவாகுக! தாங்கள் இங்கு எழுந்தருளியது யாது கருதியோ?

**ஔவையார் :** என் போன்ருர் அரசவைக்கு எது கருதி வருவர்? எல்லாம் அரசரது புகழைப் பாடவும், அரசருக்கு உற்றுழி உதவவுமேயன்ரே?

**தொண்டைமான் :** நன்று! தங்கள் நாட்டுச் செய்தி யாதோ! அதியமான் சுகமேயோ?

**ஔவையார் :** எல்லாம் நற்செய்தியே! அதிய மான் என்றும் போல் தனது கடமைகளைச் செய்து வருகின்ருன்.

**தொண்டைமான் :** கடமைகளா? அவை யென்ன?

**ஔவையார் :** அரசர்க்குரிய கடமை யாது? செங்கோல் செலுத்துதலே யன்ரே! அதையே தான் கூறினேன்.

**தொண்டைமான் :** (தனக்குள்) இந்த ஔவையார் அதியமானது அவைக்களத்துப்புலவர். அவ் வரசனுக்கு உற்ற நண்பர். இவரிடம்நமது படைக் கலக் கொட்டிலைக் காட்டினுல், இவர் அவனிடம்

போய் இதன் சிறப்பைக் கூறுவார். அதுகண்டு அவன் அஞ்சுவான். உடனே நமக்குப் பணிந்து சமாதானம் பேசித் திறையளக்க முற்படுவான். ஏன்? அவனது நாட்டின் ஒரு பகுதியைக்கூட நாம் பெறலாம். அங்ஙனமே செய்கின்றேன். (வெளிப் படையாக), அம்மையே! வாருங்கள் போவோம்! எமது படைக்கலக் கொட்டிலில் சில படைக்கலங் களைப் புதியனவாகச் செய்து சேர்த்துள்ளோம். அதனைச் சேர்த்து வைத்த செய்தியை அமைச்சர் இப்போதே எமக்கு அறிவித்தார்! யாம் அதைப் பார்க்கப் புறப்படும் நிலையில் தாங்களும் வந்தீர் கள்! போய்ப் பார்த்துவிட்டு வருவோம், வருகின்றீர்களா?

**ஔவையார் :** (தமக்குள் இவன் தனது பெரு மையை நமக்குக் காட்ட விரும்புகிறான். ஏதா வது சூழ்ச்சி செய்து இவன் அகந்தையை அடக்க வேண்டும்.) (வெளிப்படையாக) நல்லது, அங் ஙனமே செய்வோம்.

[தொண்டைமான், அமைச்சர், ஔவையார் ஆகியோர் புறப்படுகிறார்கள்.]

## களம் 3

**இடம் :** படைக்கலக் கொட்டில்

**காலம் :** மாலை

**உறுப்பினர் :** தொண்டைமான், அமைச்சர், ஔவையார்.

[மூவரும் படைக்கலக் கொட்டிலைப் பார்வையிட்டுக் கொண்டு வருகின்றனர்.]

**ஔவையார்:** ஆ! இப் படைக்கலக் கொட்டி லின் அழகே அழகு! இதில் விதவிதமான படைக் கலங்கள் ஏராளமாகச் சேகரித்து வைக்கப்பட் டுள்ளனபோல் காண்கிறதே!

**தொண்டைமான்:** (பெருமிதத்தோடு) ஆம்! இத்துணைப் படைக்கலங்கள் இதுவரை எவரும் சேர்த்திருக்க மாட்டார்கள்! மூவேந்தருங்கூடச் சேர்த்திருக்கமாட்டார்கள் என்றே நினைக்கின் றேன்.

**ஔவையார்:** நல்லது; யார் மீது போர் தொடுக்கப் போகின்ருய்?

**தொண்டைமான்:** சொன்னுல் தங்களுக்கு மன வருத்தமுண்டாகலாம்.

**ஔவையார்:** எனக்கென்ன மனவருத்தம்! கூசாமற் சொல்!

**தொண்டைமான்:** தங்கள் நண்பனுன அதிய மான் மீதுதான். அவனுக்கும் நமக்கும் சில சச்சரவு கள் சிறிது காலமாக இருந்து வருகின்றன. அவ ஊைப் பணியச் செய்யாமல் விடுவதில்லை என்பது உறுதி.

**ஔவையார்:** நல்லது, அப்படியே செய்! ஆனுல்ஒன்று! போர் என்பதே எனக்குப் பிடிக்காத செயல்! அரசர் வீணே போரிட்டு மடிவதை நான் விரும்பவில்லை.

**தொண்டைமான்:** அரசரது கடமையாகிய போரைச் செய்தலைத் தவிர்க்குமாறு எனக்குக் கூறுகின்றீர்கள் போலும்!

ஔவையார் : யான் பொதுவாகக் கூறினேனே யன்றி உனக்கென்று கூறவில்லை. அரசர்க்குப் போர் கடமையன்று. போர் நேர்ந்தால் பின்னிடாமல் இருப்பதே கடமையாம்.

தொண்டைமான்: அரசராகிய எங்களால் அங்ஙனம் அடங்கியிருத்தல் இயலாத செயல்! அது கிடக்க! வாருங்கள், மறுபக்கம் போய்க் காண்போம்.

ஔவையார் : (தமக்குள்) இங்கு வைக்கப்பட்டுள்ள கருவிகள் புதியன; கையாளப்படாதன. ஆகையால் இவனது படைவீரர்க்குப் பயிற்சி பெரும்பாலும் இல்லை என்றே நினைக்கின்றேன். இதை எடுத்துக்கூறியேஇவனை மடக்கவேண்டும். (வெளிப்படையாக) ஏது! மிகவும் வலுத்த ஏற்பாடாயிருக்கிறதே! இவ்வளவையும் கையாளுவதற்குப் போர் வீரர் ஏராளமாக வேண்டியிருக்குமே! நிறையச் சேர்த்து வைத்திருக்கின்ருயோ!

தொண்டைமான் : ஆம்! வீரர் பதினுயிரக் கணக்கில் உள்ளனர்.

ஔவையார் : நன்று, இந்தப் படைக்கலங்கள் புதியனவாய்ச் செய்யப்பட்டுப் பள பளப்பாக மின்னுகின்றன. இவை பீலி சூட்டப்பெற்று, மாலையிடப்பெற்று, நெய்க்காப்பிடப்பெற்றுத் திகழ்கின்றன. வரிசையாக இங்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. எமது அரசன் அதியமானது படைக்கலங்களோ, இவ்வாறில்லை. அவை நாளும் போர்வீரர் போர் செய்யும் காரணத்தால், கங்கும் நுனியும்

முறிந்து, கொல்லனது உலைக்களத்திற்குக் கொண்டுபோகும் வண்ணமாக இருக்கின்றன.

**தொண்டைமான்:** (தனக்குள்) ஔவையார் இவ்வாறு கூறக் காரணம் யாதாயிருக்கலாம்? அதியமானது படைவீரர் தினமும் போர்ப் பயிற்சி செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது இதனால் புலப்படுகிறது. நமது படைவீரர்க்கோ பயிற்சிக் குறைவு. இதையே இவர் சுட்டிக் காட்டு கிறார். நாம் முதலில் எண்ணியபடி பதினைந்து நாட்களுக்குள் போர் தொடங்கினால், ஒரு வேளை தோல்வி நேரக்கூடும். சிலமாத காலம் பயிற்சி யளித்த பிறகே போரைத் தொடங்கவேண்டும். (வெளிப்படையாக) நல்லது, அதியமானிடத்தில் இவ்வளவு படைக்கலங்களும் வீரரும் இரார் என எண்ணுகின்றேன்.

**ஔவையார்:** இல்லை தான், ஆனால், அவனது வீரர் போர் என்றால் உடல் பூரிப்பார்கள். அதிய மானும் அத்தகையவன் என்பதை நீ அறிவா யன்றோ?

**தொண்டைமான்:** ஆம்! அறிவேன். ஆயினு மென்? போர்தொடுப்பது உறுதி.

**ஔவையார்:** நல்லது, அங்ஙனமே செய்! எப்பொழுது தொடுக்கப் போகின்றாய்?

**தொண்டைமான்:** விரைந்து, தொடங்குவேன்! எமது வீரருக்குச் சிறிதுபயிற்சியளித்தலே மிகுந்துள் ளது. அது முடிந்ததும் உடனே தொடங்குவேன்.

**ஔவையார் :** அது சரியே! எனக்கு என்னமோ போர் என்பதே பிடிக்கவில்லை! படைக்கலங்களையும் வீரரையும் சேர்த்துவைப்பது நல்லதே! ஆனால் போர் போர் என்று முற்படுவது சரியல்ல. எதிரிகள் தம்மைக்கண்டு அஞ்சிப் போருக்கு வராமல் இருப்பதற்காக இவ்வேற்பாடுகளைச் செய்ய வேண்டுமே யன்றி, போரை முற்பட்டுத் தொடங்குவது சரியல்ல.

**தொண்டைமான் :** (தனக்குள்) நாம் இப்பொழுது போர் தொடுப்பது நமக்குப் பயன்தராதுதான். (வெளிப்படையாக) அம்மையீர்! தமது அனுபவம் வாய்ந்த சொற்களை மறுப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. தங்கள் விருப்பப்படியே போரை நிறுத்தி விடுகின்றேன்.

**ஔவையார் :** நல்லது, வணக்கம், சென்று வருகின்றேன்.

---

# செய்யுட் பகுதி

## 1. வாழ்த்து

### கடவுள் வாழ்த்து

**சிவபெருமான்**

மனிதர்காள்! இங்கேவம்மினொன்று சொல்லுகேன்;
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே!
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே. 1

—திருநாவுக்கரசர்

**திருமால்**

வாளா லறுத்துச் சுடினும், மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா, நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 2

—குலசேகர ஆழ்வார்

**இயேசுநாதர்**

மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ சீவருக்
கின்னமு தாயது ஏசு நாமமே. 3

—H. A. கிருஷ்ணப்பிள்ளை

மகம்மது நபி

ஆதியாய் அநாதியாகி அரும்பொருள் அனைத்துமாகிச்
சோதியாய்ச்சொரூபஞானச்சுடரொளித் தீபமாகி
நீதியாய்த் திறமையாகி நித்தியா னந்தமாகி
மாதிரப் புயமுமான மகம்மதே வருகுவீரே. 4

—மஸ்தான் சாகிபு

## 2. தமிழ் வாழ்த்து

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

—வில்லிப்புத்தூரார்

1. திருநாவுக்கரசர்: இவர் சைவ சமய ஆசாரியர் நால்வருள் ஒருவர்; மற்றையோர் திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பவர்கள். இவரால் பாடப்பட்ட பாடல்கள் தேவாரத்துள் அடங்கும். தேவாரம்: இது தே+ஆரம் என்று பிரிக்கப்படும். "தெய்வத்திற்கு உரித்தாக்கப்பட்ட பாமாலை" என்பது இதற்குப் பொருளாகும். திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டில் இருந்தவர். இவரது ஊர் திருவாமூர். தந்தையார் பெயர் புகழனார்; தாயார் பெயர் மாதினியார்; தமக்கையார் பெயர் திலகவதியார். இவர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்.

2. குலசேகர ஆழ்வார்: வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் இவர் ஒருவர். இந்த ஆழ்வார்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி நாலாயிர திவ்யப் பிரபந்தம் எனப்படும். இவரது ஊர் வஞ்சிக்களம். இவரது காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்பர்.

3. H. A. கிருஷ்ணப்பிள்ளை: இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்; சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன் இருந்தவர். வேளாளராயிருந்து கிறிஸ்தவர் ஆனவர். சிறந்த தமிழ்ப் புலவர்.

மஸ்தான் சாகிப்: இவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்; சிறந்த மகான் எனக் கூறப்படுவர்; ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டவர்.

5. வில்லிப்புத்தூரார்: இவரது ஊர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர். இவரது தந்தையார் பெயர் வீரராகவாச்சாரியார். இவர் சுமார் நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

## அருஞ்சொற்பொருள்

1. வம்மின்-வாருங்கள்; சாலவும்-மிகவும்.
2. மருத்துவன்-வைத்தியன்; மாளாத-நீங்காத.
3. மன்-நிலைபெற்ற; ஈடேற-சிறந்த வாழ்வை அடைய; பன்னி-சொல்லி.
4. ஆதி-முதல்; அநாதி-முதல் அற்றது (தெய்வம்).
5. பொருப்பு-(பொதிய) மலை; தென்னன்-பாண்டியன்; ஏனம்-(திருமாலாகிய) பன்றி; பாவை-(நிலமாகிய) பெண்.

## வினுக்கள்

1. ஏசற்றவர்கட்குச் சாலவும் இனியது எது?
2. நோயாளன் இயல்பு யாது?
3. ஏசு நாமத்தின் பெருமையை வரைக.
4. மஸ்தான் சாகிபு, முகம்மது நபியைப் பற்றி எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிருர்?
5. ஓர் ஏன மருப்பில் பயின்ற பாவை என்றது யாரை?

# 2. நீதி

## 1. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 1

### அறன்வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற. 2

### இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 3

### புதல்வரைப் பெறுதல்

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 4

### அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 5

### விருந்தோம்பல்

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 6

### இனியவை கூறல்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 7

### செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 8

### நடுவு நிலைமை

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 9

### அடக்கமுடைமை

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 10

### ஒழுக்கமுடைமை

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 11

### பொறையுடைமை

பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று. 12

### புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 13

### பயனில சொல்லாமை

சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 14

### ஒப்புரவறிதல்

இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். 15

## ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின். 16

## புகழ்

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்? 17

## கள்ளாமை

களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 18

## வாய்மை

தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 19

## வெகுளாமை

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 20

## இன்னா செய்யாமை

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 21

## இறைமாட்சி

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். 22

## கல்வி

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடல்ல மற்றை யவை. 23

### கல்லாமை

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 24

### கேள்வி

கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாந் துணை. 25

### அறிவுடைமை

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 26

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
[அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 27

### குற்றங்கடிதல்

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்
கொள்வர் பழிநாணு வார். [துணையாக் 28

### பெரியாரைத் துணைக்கோடல்

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 29

### தெரிந்து செயல்வகை

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 30

### காலம் அறிதல்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 31

### இடன் அறிதல்

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா
எண்ணி இடத்தாற் செயின். [எஞ்சாமை 32

### தெரிந்து தெளிதல்

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 33

### தெரிந்து வினையாடல்

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 34

### சுற்றந்தழால்

சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 35

### செங்கோண்மை

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 36

### கொடுங்கோண்மை

அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 37

### வெருவந்த செய்யாமை

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்
நீடின்றி ஆங்கே கெடும். [செல்வம் 38

### ஊக்கம் உடைமை

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. 39

### மடி இன்மை

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 40

### ஆள்வினை உடைமை

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும். 41

### இடுக்கண் அழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 42

### அமைச்சு

தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 43

### வினைத் தூய்மை

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று. 44

### வினைத் திட்பம்

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 45

## வினைசெயல் வகை

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 46

## குறிப்பறிதல்

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 47

## அவை அறிதல்

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 48

## நாடு

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி
கிறையொருங்கு நேர்வது நாடு. [இறைவற் 49

## படைமாட்சி

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 50

## படைச்செருக்கு

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்தி
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு. [மைப்பின் 51

## நட்பு

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. 52

## நட்பாராய்தல்

உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 53

### பழைமை

அழிவந்த செய்யினும் அன்பருர் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 54

### கூடாநட்பு

சொல்வணக்கம் ஒன்ஞர்கண் கொள்ளற்க
தீங்கு குறித்தமை யான். [வில்வணக்கம் 55

### குடிமை

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 56

### மானம்

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 57

### பெருமை

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல். 58

### குடிசெயல் வகை

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 59

### உழவு

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 60

**திருவள்ளுவர் :** இவரது ஊர் மயிலாப்பூர் என்றும், இவரது பெற்றோர் ஆதி, பகவன் என்றுங் கூறுவர். இவர் சற்றேறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

**திருக்குறள் :** சிறப்புப் பொருந்திய குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும், 1330 குறள் வெண்பாக்களையும் உடையது. " ஆலும் வேலும் பல்லுக்குறுதி ; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியால் இதன் பெருமையை நன்கு அறியலாம்.

அருஞ்சொற்பொருள்

1. மலர்மிசை—(அன்பரது மனத்தாமரையாகிய) மலரினிடத்து; மாண்—பெருமை.

2. மாசு-குற்றம்; ஆகுலநீர-ஆரவார குணத்தையுடையன.

3. பண்பும்-குணமும்; அது-அவ்வுடைமை.

4. நன்றி-உபகாரம்; செயல்—செய்தலால்.

5. சார்பு-துணை; மறத்திற்கும் — சினத்தை நீக்குவதற்கும்.

6. மோப்ப-மோந்தவிடத்து; குழையும்-வாடும்.

7. இனிய-இனிய சொற்கள்; இன்னாத-கடுஞ்சொற்கள் கவர்ந்தற்று-தின்பதனோடும் ஒக்கும்.

8. வையகம்-மண்ணுலகம்; வானகம்-விண்ணுலகம்.

9. நன்று-நன்மை; ஆக்கம்-செல்வம்.

10 யா-எல்லாவற்றையும்; சொல் இழுக்கு-சொற்குற்றம்; சோகாப்பர்-துன்பம் அடைவர்.

11. உலகத்தோடு-உயர்ந்தாரோடு; ஒட்ட-பொருந்த.

12. இறப்பினை-தீமையை; அதனினும்-அப்பொறுமையைக் காட்டிலும்.

13. கண் நின்று-எதிரே நின்று; கண்அற-தாட்சணியம் இல்லாமல்.

14. பயன்-பிரயோசனம்.

15. கடன் அறி-செய்யத்தகும் காரியங்களை அறிந்த; காட்சியவர்-இயற்கை அறிவுடையவர்; -ஒப்புரவிற்கு-உபகாரஞ் செய்வதற்கு; ஒல்கார்-தளரார்.

16. ஆற்றுவார்—(தவத்தால்) வல்லமையுடையவர்; மாற்றுவார்—நீக்குவோர்.

17. தம்நோவார் - தம்மை நொந்து கொள்ளாது; நோவது - வெறுப்பது.

18. களவு - திருடுதல்; ஆக்கம் - பொருள்.

19. பொய்யற்க - பொய் கூருது இருக்கக் கடவன்; சுடும் - வருத்தும்.

20. நகை - மலர்ச்சி; உவகை – மகிழ்ச்சி.

21. இன்ன - துன்பந்தருவன; ஒறுத்தல் - தண்டித்தல்,

22. முறை - நீதி; இறை - கடவுள்.

23. கேடு இல் - அழிவு இல்லாத; விழு - சிறந்த; மாடு - செல்வம்.

24. விலங்கு - மிருகம்; இலங்கு - விளங்கிய.

25. ஒற்கம் - தளர்ச்சி; ஊற்று - பற்றுக்கோடு.

26. ஓரீஇ - நீக்கி; உய்ப்பது - போக விடுவது.

27. மெய்ப்பொருள் - உண்மையான பயனை.

28. தினை துணை - தினையளவு; பனை துணை ஆ -பனையின் அளவாக.

29. இடிக்கும் - நெருங்கிச் சொல்லும்.

30. துணிக - தொடங்கக் கடவன்; இழுக்கு -குற்றம்.

31. ஞாலம் - பூமி; கருதி - அறிந்து.

32. எஞ்சாமை – குறையாமல்.

33. நாடி – ஆராய்ந்து; கொளல்–அறியக்கடன்.

34. தோற்றம்–கலங்காமை; தெளிவு–நம்பிக்கை.

35. சுற்றம்–உறவினர்.

36. கோல் ஓச்சும்–செங்கோலைச் செலுத்தும்; தழீஇ–பொருந்தி.

37. அல்லல்பட்டு-துன்பமடைந்து; ஆற்றது-பொறுக்க மாட்டாமல்.

38. நெடும்-பெரிய; நீடு-நெடுங்காலம்.

39. புதை அம்பின் - கட்டாகிய அம்பினல்; பாடு - பெருமை; ஒல்கார்-தளரார்.

40. மடி-சோம்பல்; அடியளந்தான் - திருமால்.

41. தெய்வத்தான் - ஊழ்வினையால்; மெய் - உடம்பு.

42. இடுக்கண் - துன்பம்; ஊர்வது-எதிக்க வல்லது.

43. தெரிதலும்-ஆராய்ந்து அறிதலும்; அமைச்சு-மந்திரி.

44. சலத்தால்-தீத்தொழில்களால்; ஏமார்த்தல்-பாது காத்தல்.

45. உற வரினும்-மிக வரினும்; துணிவு ஆற்றி-வலிமை யுடையவராய்.

46. எச்சம்-குறை; தெறும்-கெடுக்கும்.

47. அகத்து - மனிதனிடத்து நிகழ்வது.

48. சொல்லின் தொகை-சொல்லின் கூட்டம்; அவை-சபை.

49. பொறை-பாரம்; இறை-வரிப்பணம்.

50. கூற்று-எமன்; உடன்று-கோபித்து.

51. வன்கணவர்க்கு-வீரர்க்கு ஒட்டு-தோல்வி.

52. முக நக - முகம் மாத்திரம் மலரும்படி; நட்பு-சிநேகம்.

53. அல்லற்கண் - துன்பம் வந்தவிடத்து; ஆற்று அறுப்பர்-கைவிடுவோர்.

54. வழிவந்த-பழையதாய் வந்த; கேண்மையவர்-நட்பினை உடையவர்.

55. ஒன்னர்கண்-பகைவரிடத்து.

56. வாய்மையும்-மெய்மையும்; நாணும்-வெட்கமும்.

57. குன்று - மலை; குன்றி - குன்றிமணி.

58. ஆற்றின்-வழியால்; ஆற்றுவார்-செய்ய வல்லவரா வர்.

59. மடிதற்று-உடையை இறுக உடுத்திக்கொண்டு.

60. இலம்-வறியேம்; அசைஇ - சோம்பி; நகும்-சிரிப்பாள்.

### வினாக்கள்

1. நிலமிசை நீடுவாழ்வார் யாவர்?

2. இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் எவை?

3. தந்தை மகனுக்குச் செய்யும் உதவி யாது?

4. அனிச்ச மலரின் இயல்பென்ன? அதனைக்கொண்டு ஆசிரியர் அறிவிப்பதென்ன?

5. கனியிருப்பக் காய் கவர்ந் தற்று-விளக்கி உவமேயங் கூறுக.

6. எதற்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது?

7. சொல்லிழுக்குப்பட்டுச் சோகாப்பவர் யாவர்?

8. சொல்லுக என்றும், செயல்லற்க என்றும் ஆசிரியர் எவற்றைக் கூறுகின்றார்?

9. கடனறி காட்சியவரின் இயல்பு யாது?

10. அளவிறந்து ஆவது போலக் கெடுவது எது?

11. சினம் எவற்றைக் கொல்லும்?

12. இன்னா செய்தாரை வெல்வதற்குரிய உபாயம் யாது?

13. மக்கட் கிறையொன்று வைக்கப்படும்—யாரை?

14. ஒருவற்குக் கேடில் விழுச்செல்வம் எது?

15. அறிவாவது யாது?

16. பழி நாணுவார் இயல்பு என்ன?

17. எவராலும் கெடுக்க முடியாதவர் யார்?

18. செல்வம் பெற்றதன் பயன் யாது?

19. அடிதழீஇ நிற்கும் எது? எவரது அடியை?

20. செல்வத்தைத் தேய்க்கும் படை எது?

21. உரவோரின் இயல்பு யாது?

22. எது மெய்வருந்தக் கூலி தரும்?

23. எவற்றில் வல்லவன் அமைச்சனாவான்?

24. சலத்தாற் பொருள்செய் தேமார்த்தல்—விளக்கி உவமானங் கூறுக.

25. யாரைத் தெய்வத்தோடு ஒப்பக் கொள்ளுதல் வேண்டும்?

26. நல்ல நாட்டின் தன்மையை வரைக.

27. வன்கணவர்க்கு ஒட்டாவது யாது?

29. அன்பின் வழிவந்த கேண்மையவரின் இயல்பினை எழுதுக.

28. நட்பாவது யாது?

30. குடிப்பிறந்தார் எவற்றில் தவறுது நடப்பார்?

31. குன்றின் அனையாருங் குன்றுவர்—எப்போது?

32. எவனுக்குத் தெய்வம் முன்னின்று உதவி செய்யும்?

---

## 2. நீதி நெறி விளக்கம்

### கற்றன காத்தல்

வருந்தித்தாங் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித் தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல்.

### தற்புகழ்தல் கூடாது.

தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவது! இன்பம்
நயவாமை அன்றே நலம். 2

### தெய்வமாவார் இவர் எனல்

குலமகட்குத் தெய்வங் கொழுநனே; மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்;—அறவோர்க்
கடிகளே தெய்வம் ; அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 3

### அரசன் வரி வாங்கும் முறை

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலு மாண்பே;—குடி
யோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே
மா நிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. 4

### மூடர் கேடு அறியார்

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சி? மற் றில்லாகும்;—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டு யில்வ ;
பேரா பெருமூச் செறிந்து. 5

—குமரகுருபர அடிகள்.

நீதிநெறி விளக்கம்—நீதிகளின் வழிகளை விளக்கிக்கூறும் நூல் என்பது இத்தொடரின் பொருள். இதனை இயற்றியவர் குமரகுருபர அடிகள். திருக்குறளின் சாரமாக இந்நூல் பாடப்பட்டது.

குமரகுருபர அடிகள்: இவரது ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் எனப்படும் ஸ்ரீகைலாயம். இவரது தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமி அம்மையார். இவர் பிறந்தபோது ஊமையாயிருந்தார். பிறகு திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் பேசவும் கவிபாடவும் வன்மை பெற்றார். இவரது காலம் சுமார் 300 ஆண்டுகட்கு முற்பட்டது.

### அருஞ்சொற்பொருள்

1. ஓம்பாது-பாதுகாக்கமாட்டாமல்; பரிந்து-வருந்தி; கருந்தனம்-மிகுந்த பணம்; எய்த்து-இளைத்து.

2. வியவாமை-புகழ்ந்து கொள்ளாமை; வியப்பானது-நன்மதிப்பாகும்; நயவாமை-விரும்பாமை.

3. கொழுநன்-கணவன்; அறிவோர்க்கு-நல்லொழுக்கம் உடைய மாணவர்களுக்கு; அடிகள்-ஆசிரியர்கள்; இறை-அரசன்.

4. குடிகொன்று-குடிமக்களை வருத்தி; இறை-வரி.

5. கேடு-கெடுதிகள்; மண்டு எரி-மிகுந்த நெருப்பு; மாசுணம்-பெரிய பாம்புகள்.

### வினாக்கள்

1. கற்றன ஓம்பாது மேலுங் கற்கத் தொடங்குதல் எது போன்றதாகும்?

2. குலமகள், புதல்வர், அறவோர் — இவர்கட்குத் தெய்வமாவார் யாவர்?

3. காண்டுமே மா நிதியம் வெள்ளத்தின்மேலும் பல— யாருக்கு?

4. மாசுணத்தின் இயல்பு யாது? அதனைக்கொண்டு அறிவிக்கும் செய்தி யாது?

---

## 3. நாலடியார்

### கல்வி

கல்வி கரையில கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 1

### நற்குடிப்பிறந்தோரின் இயல்பு

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்-திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 2

### நல்லினம் சேர்தல்

ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்; ஒரும்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. 3

### நல்ல ஆண்மகனின் கடன்

அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட்-
கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்-
பழுமரம்போல்
பல்லார் பயன் துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். 4

### நட்பாராய்தல்

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்;
எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்; 5

—சமண முனிவர்கள்

**சமண முனிவர்கள்:** இவர்கள் நாலடியார் என்னும் நூலின் ஆசிரியர்கள். சமண மதத்தைச் சேர்ந்தவர்கள். உயர்ந்த ஒழுக்கமுடையவர்கள்.

நாலடியார் – இது நான்கு அடிகளைக் கொண்ட வெண் பாக்களால் ஆக்கப்பட்ட நூல் எனப் பொருள்படும். இந் நூலில் 400 வெண்பாக்கள் உள்ளன. இந்நூலுக்குள்ள வேறு பெயர் வேளான் வேதம் என்பதாகும்,

### அருஞ்சொற்பொருள்

1. நாள்—வாழ்நாட்கள்; அமைவு உடைய—சாரமாக உள்ள ஞான நூல்கள்; குருகு—அன்னப்பறவை.

2. ஒருபுடை—ஒரு பாகம்; அம் கண்—அழகிய இடம்; ஞாலம்—பூமி; செல்லாமை—வறுமை; —ஒப்புரவு—உதவி; ஓல்கார்—தள்ளார்.

3. அங்கணநீர்—சலதாரையினது நீர்; மாட்சி—பெருமை; குன்று-மலை.

4. மண்டு—நெருங்கிய; பழுமரம்—பழுத்துள்ள மரம்; கடன்—கடமை.

5. ஓரீஇ—விட்டு; கேண்மை—நட்பு; கெழீஇ—சேர்த்து; மெய்—உடல்.

### வினாக்கள்

1. குருகின் இயல்பினை வரைக.

2. நற்குடிப் பிறந்தோரின் நன்மை என்ன?

3. குன்றுபோல் நிற்பவர்-யாவர்? எதனால்?

4. நல்ல ஆண்மகனின் கடமை யாது?

5. நாயனையார் கேண்மை கெழீஇக்கொளல்வேண்டும். என்று கூறுவானேன்?

## 4. அறநெறிச்சாரம்

### பத்து அறம் இவை எனல்

மெய்மை பொறையுடைமை மேன்மை
தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்றே குணம். 1

### நடுநிலை காணும் விதம்

காய்த லுவத்த லகற்றி ஒருபொருட்கண்
ஆய்தலறிவுடையார் கண்ணதே-காய்வதன் கண்
உற்றகுணந் தோன்ருத தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும். 2

### புறங்கூறல் இழிவானது

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் சான்ருேரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. 3

### சாலச் சிறந்த முக்குணங்கள்

தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும் துன்பங்கள்
ஆய பொழுதாற்று மாற்றலும்—காய்விடத்து
வேற்றுமை கொண்டாட மெய்ம்மையு மிம்மூன்றும்
சாற்றுங்காற் சாலத் தலை. 4

## உண்மைச் சுற்றத்தவர்

நல்லற மெந்தை ; நிறையெம்மை ; நண்குணரும்
கல்வியென் தோழன் ; துணிவெம்பி ;—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரி லெனக்கு

—முனைப்பாடியார்

அறநெறிச்சாரம் : அறமாகிய நெறிகளது சாரத்தை விளக்கிக் கூறும் நூல். இந்நூல் 226 வெண்பாக்களைக் கொண்டது. இதனை இயற்றியவர் முனைப்பாடியார்.

முனைப்பாடியார் : இவர் சைனர், ஏறக்குறைய 500 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

### அருஞ்சொற்பொருள்

1. செம்மை—நடுநிலைமை ; திறம்பா — மாறுபடாத ; தரித்தல்—மேற்கொள்ளுதல், ஆன்ற—மேலான்.

2. காய்தல்—வெறுப்பு; கெடும்—மறையும்; உவத்தல்—விருப்பு.

3. கல்நின்று உருக-கல்லும் உருகுமாறு; சான்றோரை—கயவர்களை ; (இழிவுபற்றியது).

4. ஆற்றலும்—பொறுமையும் ; காய்விடத்து—வெறுப்பவரிடத்து ; சாலத் தலை—மிக உயர்ந்தனவாம்.

5. எந்தை—எனது தந்தை ; நிறை—மன அடக்கம் ; எம்மை—எனது தாய்.

### வினாக்கள்

1. பத்து அறங்கள் யாவை ?

2. தேவா விழித்திமையா நின்ற நிலைக்கு ஆசிரியர் கூறும் காரணமென்ன ?

3. சாலச் சிறந்த முக்குணங்கள் யாவை ?

4. உண்மைச் சுற்றத்தார் யாவர் ?

5. அறநெறிச்சாரம்—குறிப்பு வரைக.

---

# 3. கதை

## 1. முயல் யானையை வென்ற கதை

(பஞ்ச தந்திரம்)

துன்னரு மடவி தன்னில்
தும்பிக ளனேகஞ் சூழப்
பன்னருஞ் சதுர தந்தன்
எனுமிறை பண்பின் வாழ்நாள்
அன்னநாள் மழையில் லாம
லருஞ்சுனை யெல்லாம் வற்ற
உண்ணுநீ ரெங்குண் டென்ன
வொற்றர்பார்த் தோடி வந்தே. 1

" சந்திர சரசு தண்ணீர்
ததும்பிட நிற்குதே "ன்ன
அந்தநற் சுனையை நாடி
யானைகள் அனைத்துஞ் செல்ல
முந்தியச் சுனையைச் சூழ
முயல்சிலை முகவேந் தஞ்சி
மந்திர விசயன் தன்னை
வரவழைத் துரைக்கு மன்றே. 2

"இற்றைநாள் வரையில் நாமும்
இனமுமிச் சுனையைத் தானே
சுற்றியிங் கிருந்தோம்; இந்தத்
தும்பிகள் வந்து புக்கால்
மற்றுநாம் இருக்க லாகா;
வனத்தில்வே றிடமு மில்லை;
உற்றிவ ணிருக்க வேறோ
ருபாயநீ நினைப்பாய்," என்ன. 3

"ஆனையை வெல்லு மாறிங்
கருமையோ? விடைதா," என்று
மூரனமந் திரவி சார
நனிபெறு விசயன் கூறிச்
சேனைகா வலனாக மந்தச்
சிலீமுகன் அனுப்ப வேகிக்
கானில்வே ழக்கூட்டத்தைக்
கண்களாற் கண்டு நின்றே.
"நகைத்துடன் கொல்வர் துட்டர்
நாமவர் நடுவிற் பட்டால்;
வகைப்பட வோர்பா னின்றால்
வந்தடித் திடுவர்; மாறாய்
மிகைப்பட அவர்கள் கையில்
வீறுடனாமுஞ் சும்மா
அகப்படின் நம்மை யந்த
ஆனைதான் கொல்லு மன்றோ,"

என்றுதன் மனத்தில் எண்ணி
"இதன் கையில் அகப்படாமல்
நின்றுநாம் வெல்வோம்'' என்று
நினைத்தொரு குவட்டிலேறித்
துன்றிய களிற்று வேந்தைத்
"தும்பிநீ சுகமோ?'' என்ன.
வென்றிகொள் களிறு கண்டு
வியந்து "நீ யாரரோ?'' என்ன. 6

"இசைநிலா வெறிக்குந் திங்கள்
ஏவிய தூதன்; என்பேர்
விசயனென் பார்கள்; உன்பால்
விடுக்கவந் துற்றேன்,'' என்ன,
அசைவிலா தாகி யந்த
ஆனையும் பயந்து நின்றே.
"விசய! நீ வந்த தென்ன?
விளம்'' பென விளம்பு மன்றே. 7

"சந்திர சரசென் றெங்கள்
கசிபக வான்பே ராலே
இந்தநற் கான கத்தில்
இருஞ் சுனை ஒன்றுண்டாக்கி
அந்தநற் சுனையில் எங்கள்
ஐயனுந் தேவி மாரும்
முந்திய சலக்கி ரீடை
முயக்கியே பகலைக் கெல்லாம். 8

" தண்ணறுஞ் சுனைக்குக் காவல்
வைத்தெமைத் தாங்கள் போவார் ;
விண்ணவர் உலகத் தாரும்
விரும்பினும் தொடப் படாது ;
நண்ணிய சுனைநீர் உண்ண
நாடினை நீயென் றெங்கள்
அண்ணலார் சினந்துன் பக்கல்
அனுப்பினுர் தடுத்தி" என்றே. 9

" தூதுசொல் வாரி யற்கை
துவங்கவா ளுருவிக் கொண்டு
கோதமாய்க் கேட்பார் முன்னுங்
கூறுவ கூறல் வேண்டும் ;
யாதவர் கூறினுலும்
இதலினர் தூத ரேனும்
மூதறி வரசர் தூதர்
முனியினு முனியா" ரன்றே ! 10

" தன்னுடல் வலியி னுலே
தான்பெரி யரைப்ப கைத்தால்
பின்னவர் சினந்து வெல்லப்
பெற்றுயிர் இழத்தல் வேண்டும் ;
அன்னதை நிலையா மற்பின்
பலர்பகை நினைத்தா ரேனும்
முன்னரே வணங்கிப் போற்றின்
முடிவுரு ராவி" மன்னே. 11

"மூவரின் முதல்வ ரான
முனிவனுர் முடிமேல் வாழும்
தேவனைப் பகைத்த சிந்தைச்
செயலினை யினித்த டுத்தே
மேவுதன் சுனைமேல் வைத்த
வேட்கையை விடுத்திந் நேரம்
போவதே கருமம்," என்று
புத்திகள் பலவுஞ் சொல்லி, 12

"இங்கிவை யனைத்து நானே
இயம்பினன் உன்னை வேண்டி;
திங்களம் பகவன் உன்மேல்
சினந்தது கொஞ்ச மல்ல;
அங்கவன் சினமு நானே
ஆற்றுவன் அவன்பாற் சென்றே;
வெங்களிற் றினத்தி னேடே
மீள்கநீ," என்று கூற. 13

"தந்தியின் அரசன் அந்தச்
சசந்தனை நோக்கி, " நீ சொல்
சந்திரன் எனுந்தே விந்தத்
தடத்தனிற் குடைவ தெப்போ
தந்தவே ளையினில் வந்தங்
கவனடி போற்றி யானும்
உய்ந்துமீண் டேகு வேன்," என்
றுரைதலும் முயல்நன் றென்றே. 14

அன்றிர வுடன்கொண் டேகி
அலைபுனல் தடத்தில் தோன்றும்
துன்றுமெண் மதியின் சாயை
காட்டி "நீ காண்க" என்ன
நன்றதைக் கண்டு திங்கள்
நாதனே யென்றும், சூழ்வுற்
றென்றிய வுடுக்கள் அன்னோற்
குரியநன் மாதர் என்றும். 15

ஆனையும் நினைந்து நெஞ்ச
மழிந்துபின் தெளிந்து நின்றே
"நானிதை யறியேன்; எங்கள்
நாதனே! பொறுக்க," என்று
வானுயர் மதியை நோக்கி
வணங்கியே மீண்டும் போகக்
கானறு முயல்க ளெல்லாம்
களித்துவாழ்ந் திருந்த வன்றே. 16

— வீரமார்த்தாண்ட தேவர்.

வீரமார்த்தாண்ட தேவர் — இவர் பஞ்ச தந்திரம் என்ற நூலை இயற்றியவர். சமீப காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்களுள் ஒருவர்.

அருஞ்சொற்பொருள்

1. அடவி—காடு; தும்பிகள்—யானைகள்; இறை—அரசன்.

2. சிலீமுகன் — முயல்களின் அரசின் பெயர்; மந்திர விசயன்—மந்திரியான விசயன் என்ற முயல்.

3. வனம் — காடு; இவண் — இவ்விடம்.

4. ஞானம்—அறிவு; வேழக் கூட்டம்—யானைகளின் தொகுதி.

5. துட்டர்—கொடியவர்; வீறு—பெருமிதம்.

6. குவடு—சிறு மலை.

7. திங்கள்—சந்திரன்; விளம்பும்—கூறும்.

8. சசிபகவான்—சந்திரனாகிய தேவன்; சலக்கிரீடை — நீரில் விளையாடும் விளையாட்டு.

9. தண்—குளிர்ச்சி; தடுத்தி—தடுத்து விடுவாய்.

10. துங்கம்—உயர்வு; இகலினர்—விரோதித்தனர்.

11. ஆவி—உயிர்; சினந்து—கோபித்து.

12. மூவர்—பிரமன், திருமால், சிவன்; முனைவனார்—சிவ பெருமான்.

13. ஆற்றுவன்—தணிப்பேன்.

14. தந்தி—யானை; தே—தேவன்.

15. சாயை—நிழல்; உடுக்கள்—நட்சத்திரங்கள்.

16. மதி—சந்திரன்; களித்து—மகிழ்ந்து.

## வினாக்கள்

1. சிலீமுகவேந்து விசயனிடம் கூறியதென்ன?

2. விசயன் யானைகளைப் பார்த்தபோது தன்னுட் கூறிக்கொண்டவை யாவை?

3. "விசய நீ வந்ததென்ன" என்று வினவிய யானை அரசை நோக்கி, அவன் கூறியதென்ன?

4. சந்திரசரசைப்பற்றி விசயன் கூறியவை யாவை?

5. தூதுவரையும் அரசரையும் பற்றி விசயன் கூறிய தென்ன?

6. யானை அரசு விசயனிடம் அறிவித்தது யாது?

7. களிற்று வேந்து சந்திரன் என்றும், அவன் மனைவியர் என்றும், எவ்வெவற்றைக் கருதியது?

8. களிற்று வேந்து சந்திரனின் சாயையை நோக்கி வேண்டிக்கொண்டது என்ன?

9. இக்கதையிலிருந்து நீங்கள் அறியும் நீதி என்ன?

10. சந்திரசரசு—குறிப்பு வரைக

## 2. தீய மைந்தன் திருந்தியது

### தந்தை பொருளைக் கொடுத்தல்

ஒருவன் அன்புடைய தந்தைக்கு
ஓரிரு புதல்வர் உள்ளார்;
இருவரில் இளையான் 'ஐய!
என ஒரு பாகம் எற்குத்
தருகஎன் றிரந்து கேட்பத்
தந்தைதன் உரிமை யாவும்
நிருவிகற்பாகப் பங்கிட்டு
உதவினன் நேர்மையாக. 1

### தீய மைந்தன் செல்வத்தை இழத்தல்

கைப்பொருள் கண்டான்; தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணுன்;
மெய்ப்பொருள் அறியான்; உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாய
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான்; அந்தோ!
அகதியா யினன்சின் னுளில். 2

### தீய மைந்தன் வறுமையால் வாடுதல்

அங்கொரு குடும்பி தன்னை
அடுத்தவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்லஅத் தேசம் எங்கும்
வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்காற் றுனுய்
நுங்கினுன் பன்றிக் கூட்டும்
நொறுங்குற் றுமித்த விட்டை. 3

### தீய மைந்தன் தன்பிழை உணர்தல்

குற்றுமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிகரிக்கச்
சற்றுளம் தெளிந்தா ஞகிச்
சஞ்சலித் தழுதுஎன் தந்தைக்(கு)
உற்ற வூழியர னேகர்
உண்டுதேக் கெறிய யானோர்
துற்றுண வின்றி ஆவி
சோர்குவல்; இதென்துர்ப் புத்தி. 4

### தந்தையிடம் போக எண்ணல்

'புகலொன்றும் இல்லேன்' என்ளுப்
புந்தியில் பிழையை உள்ளி
மிகவுள முடைந்து நைந்தான்;
மெய்ம்மனத் தாபங் கொண்டான்;
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்தான் பெற்ற
மகவெனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்' எனத்தே றுற்ருன். 5

### தந்தை ஆசையோடு வரவேற்றல்

ஒல்லேயே எழுந்தான், தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன்; அறிந்து தந்தை
வல்லேவந் தணைந்து, முத்தி
மகிழ்ந்தனன்; மகவா சைக்கோர்
எல்லேயும் உளவோ? மைந்தன்
எத்தனை பிழை செய்தாலும். 6

### தீய மைந்தன் தன் பிழையைக் கூறல்

'எந்தையே! எந்தையே!' என்று
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந் துமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற் றளவில் பாவம்
புரிந்தனன்; இனியான் உந்தம்
மைந்தனென் றுரைக்கத் தானும்
அபாத்திரன்; மதியொன் றில்லேன்! 7

### தீய மைந்தன் மன்னிப்புக் கேட்டல்

'ஐயமன் னிக்கச் சித்த
மாயின்மற் றளிய னேன் யான்
உய்யுமா றருளி நும்பால்
ஊழியத் தொருவ னுக்கி,
வையகத் திருந்து, கென்னு
வாய்திறந்து அரற்றி நிற்ப
"நையல்" என்றருளிக் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பர்ல். 8

### தந்தை தீய மைந்தனை ஆதரித்தல்

'மகன் இவன் மரித்தான்; இன்னே
மறித்துயிர் பெற்று னுகத்
தகவுடை விருந்தெ மர்க்குச்
சமைக்கெனப் பணித்து மைந்தற்கு
உகவையின் வத்தி ராதி
உடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
இருந்தனன் புதல்வ னேடும் 9

## மூத்தவன் சினமும் தந்தையின் முன்னுரையும்

ஆயிடைச் சேட்டன் வந்தான்;
அக்களி யாட்டுக் கண்டான்;
மேய தென் ?" எனவி னுவி
அறிந்தனன்; வெகுண்டு நின்றான்.
நேயமார் தந்தை நேர்ந்து
நின் ஒரு கனிட்டன் மாண்டு
போயவன் பிழைத்து வந்த
புதுமையின் களியி தென்றான். 10

"மைந்தநீ! என்னோ டுள்ளாய்;
வாழ்வெனக் குள்ள யாவுந்
சொந்தமற் றுனக்கே யன்றே;
சோதரன் மதியற் றேகி
நொந்துவந் தணைந்தான் மீண்டு;
நுண்மதி யுடையநீ உன்
சிந்தனை திருகல் நன்றோ?
சேர்த்துடன் களத்தி, என்றான். 11

H. A. கிருஷ்ணப் பிள்ளை.

தீயமைந்தன் திருந்தியது: இது இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலின் கண் உள்ளது. இரட்சிப்பு அடைய வேண்டிய ஆத்மாவினது மோட்ச யாத்திரையைப்பற்றிக் கூறும் நூல் என்பது இதற்குப் பொருள். இதனை இயற்றியவர் H. A. கிருஷ்ணப் பிள்ளை.

H. A. கிருஷ்ணப் பிள்ளை: இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்; இவர் காலம் கி. பி. 19-ஆம் நூற்றுண்டு; வேளாளராய் இருந்து கிறிஸ்தவர் ஆனவர்; தமிழ்ப் புலவர்.

அருஞ்சொற்பொருள்

1. எற்கு - எனக்கு; நிருவிகற்பாக - வேறுபாடு இன்றி

2. கரைந்த - சொன்ன; விழைந்த விரும்பின; அகதி - திக்கு இல்லாதவன்.

3. திங்கள்-மாதம்; வெதுப்பிடும் - வருந்தச் செய்கின்ற; நுங்கினன் - தின்றனன்.

4. உளம் - மனம்: துற்று உணவு - ஒரு பிடியளவு உணவு; சோர்குவல் - தளர்வடைவேன்.

5. புகல் - தஞ்சமாக அடைதற்குரிய இடம்; பரிவர் - அன்புகொள்ளுவார்.

6. ஒல்லையே — விரைவாகவே; அல்லல் — துன்பம்; முத்தி — முத்தமிட்டு.

7. நெட்டுயிர்த்து - பெருமூச்சு விட்டு; அபாத்திரன் - தகுதியற்றவன்; மதி - புத்தி.

8. அளியனேன் - இரங்கத்தக்கவன்; வையகம் - பூமி; நையல் - வருந்தாதே; அகத்துள் - வீட்டுக்குள்.

9. உகவை - களிப்பு; வத்திரம் - ஆடை; புகர் அறு - குற்றம் இல்லாத.

10. சேட்டன் - மூத்தவன்; கணிட்டன் - இளையவன்.

11. நுண்மதி - கூரிய அறிவு; திருகல் - கோபித்தல். நொந்து - வருந்தி.

## வினாக்கள்

1. தீய மைந்தன் திருந்தியது—இப்பகுதி எந்நூலில் உள்ளது?

2. இளைய மைந்தன் அகதியாகக் காரணம் என்ன?

3. தீயமைந்தன் வறுமையால் வாட்ட முற்றதைவரைக

4. தீயமைந்தன் உளந் தெளிந்து உன்னியது யாது?

5. தீயமைந்தன் தந்தையிடம் தன் பிழையுணர்ந்து கூறியதென்ன?

6. தந்தை தன் இளைய மகனை எவ்வாறு போற்றினன்?

7. மூத்த மகன் கோபங்கொண்டதற்குக் காரணம் என்ன?

8. கோபங்கொண்ட மூத்த மைந்தனைத் தந்தை எவ்வாறு சமாதானப்படுத்தினன்?

9. இக்கதையினால் நீங்கள் அறியும் நீதி யாது?

## 3. மலையும் அணிலும்

### அணிலின் வார்த்தை

"அற்பத் திருடா" என்றெனை யழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்!

### மலையின் உயர்வு

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்கலாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வன்மையும் உனக்கென்று
உரைமொழி முற்றும் உண்மையே; ஆயின்,

### பல சேர்ந்ததே உயர்வு

ஒருவகைப் பொருளின் ஓருல காமோ?
ஒருவெயில் மழையின் ஓராண்டு தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றாய்க் கூடினே உலகாம், ஆண்டாம்.

### அணிலுக்கு உள்ள மகிழ்ச்சி மலைக்கு இல்லை

ஆதலின், யானிவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன்;
என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்;
உன்பெரும் உருவெனக் கில்லை; உனக்கும்
என்சிறு வடிவில்லை; மேலும் என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கில்லை; யிலையே;

### வெற்றியும் ஆற்றலும் யாவர்க்கும் உண்டு

அணிற் பிள்ளை சாடி ஓடி அலைந்து
விளையா டற்கு விரிவிடம்பெறுவாய்.

ஐயம் இதற்கில்லை ; அடலும் ஆற்றலும் ;
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரும் விதமாம்
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின.

### அணிலின் பெருமை

வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ யாயின் மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னு லாகுமோ ?

### பெரியவர் யாவர்? சிறியவர் யாவர்?

யாவரே பெரியர்? யாவரே சிறியர்?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம் ;
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம் ;
ஆதலின் அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

**மலையும் அணிலும்**—இது மலரும் மாலையும் என்னும் நூலில் உள்ளது. இதனை இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** : இவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள தேரூர் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவரது தந்தையார் சிவதாணுப் பிள்ளை. தயார் ஆதிலட்சுமி அம்மாள். காலம் 20 ஆம் நூற்றுண்டு.

### அருஞ்சொற்பொருள்

2. வெற்பு--மலை, **விளம்ப**—கூற.
4. **துளக்கல் ஆகா**—அசைக்கமுடியாத.
5. வறப்பினும்—மழையின்றிக் காய்ந்தாலும். வண்மை—கொடை.

10. ஆண்டு—வருடம்.

11 அகிலம்—உலகம்.

18. சாடி—மோதி.

20. அடல்—வெற்றி, ஆற்றல்—வலிமை.

24. வனங்கள்—காடுகள்.

30. அற்பர்—உருவத்தால் சிறியவர்கள், ஆகாதவர்—பயனற்றவர்கள்.

31. சாதனை ஆம்—விளைவு ஆகும்.

**வினாக்கள்**

1. மலையினது பெருமைகள் எவை ?

2. அணில் எதை இழுக்காக எண்ணவில்லை? ஏன் ?

3. மலையைவிட அணிலிடம் காணப்படும் சிறப்பியல்பு யாது? எவ்வாறு ?

4. மடமையின் சாதனை என்ன ?

5. மலையும் அணிலும்—இதனால் அறியும் நீதி யாது ?

---

# 4. பிறவகை

## 1. நூற் பயிற்சி செய்யும் விதம்

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். 1

—பவணந்தி முனிவர்

## 2. போர்க்களச் சிறப்பு

பொருதடக்கை வாளெங்கே, மணிமார் பெங்கே?
போர் முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோள் எங்கே? எங்கே? என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்!
[காண்மின்! 2

—சயங்கொண்டார்

## 3. ஈகையின் வகை

சொல்லாமலேபெரியர்; சொல்லிச்செய்வார்சிறியர்;
சொல்லியும் செய்யார் கயவரே;—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார். 3

—ஔவையார்

## 4. மருதச் சிறப்பு

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கத் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தொண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ! 4

## 9. ஏர் நடத்தலின் சிறப்பு

கார்நடக்கும்;படி நடக்கும்; காராளர் தம்முடைய
ஏர்நடக்கும்:எனிற்புகழ்சால் இயலிசைநா டகம்
[நடக்கும்;
சீர்நடக்கும்; திறம்நடக்கும்; திருவறத்தின்
[செயல்நடக்கும்;

பார் நடக்கும் ; படை நடக்கும் ; பசிநடக்க
மாட்டாதே. 5

—கம்பர்

## 6. சொல்நயம்

முக்காலுக் கேகாமுன் முன்னறையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது. 6

## 7. பொருள்நயம்

பண்புளருக் கோர்பறவை ; பாவத்திற் கோர்
[இலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி ;—திண்
[புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம் ;
நீள்வா கனம்நல் நிலம். 7

—காளமேகப்புலவர்

## 8. ஆலமரம்

ஆலினைக் காற்று மோதும் ;
அசைவென்றே எனச்சி ரித்துக்
கோலத்துக் கிலைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும் ;
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் எல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும் !

—பாரதிதாசன்

### அருஞ்சொற்பொருள்

1. நுவலின்-சொல்லுமிடத்து ; வழக்கு-உலகவழக்குச் செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்குகள் ; பயிறல்-பழகுதல் ; கடன்-முறை; மடம்-அறியாமை ; நனி-மிகுதியும் ; இகக்கும்-நீங்கும்.

2. பொரு-போர் செய்யும்; தடக்கை-பெரிய கை; பயிரவி-காளி.

3. கயவர்-கீழ்மக்கள். குலாம்-விளங்குகின்ற, பலா-பூக்காமலே காய்ப்பது. மா-பூத்துக் காய்ப்பது; பாதிரி-பூத்தும் காய்க்காது.

4. தண்டலே-சோலேயில், கொண்டல்-மேகம். எழினி-திரைச்சீலே. முழவு-மத்தளம்; மருதம்-மருதநிலம்.

5. கார்-மேகம், காராளர்-வேளாளர். சால்-நிறைந்த பார்-பூமி.

6, முக்காலுக்கு ஏகா முன்-மூன்று கால்களைக்கொண்டு நடப்பதற்கு முன்னே. காலர்-எமதூதர், கால்-உயிர், மாகாணி-பெரிய இடமாகிய சுடுகாடு, மா-மாமரம்.

7. ஓர் பறவை - ஈ, ஓர் இலக்கம்-அஞ்சு, 'நாற்காலி-விலங்கு இது விலகு என்னும் பொருளைத் தரும். அரவம்-பணி, வாகனம்-விடை, நிலம்-செய். (இவை மூன்றும் பணி விடை செய் என்று வருதல், அறிந்து இன்புறத்தக்கது)

8. ஆல்-ஆலமரம், கோலத்து-அழகையுடைய, புள்-பறவைகள்.

## வினுக்கள்

1. நூற்பயிற்சி செய்யும் விதத்தை விளக்கி வரைக.
2. பயிரவி யார்? அவளை யார் என்ன கேட்டனர்?
3. பலா, மா, பாதிரி—இவற்றின் இயல்புகள் யாவை? இவை எவர்கட்கு உவமைகளாக வந்துள்ளன?
4. மருத நிலத்தை ஆசிரியர் எவ்வாறு வருணித்துக் கூறுகின்ருர்?
5. ஏர் நடத்தற்சிறப்பினைப்பற்றி கம்பர் கூறியதென்ன?
6. கச்சி ஒரு மாவின் கீழரை எவ்வெவை வருமுன்னர்த் துதிக்கவேண்டும்?
7. பண்புளர், நண்பிலர்—இவர்களிடத்து நாம், எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்?
8. காற்றுக்கு நன்றி கூறும்—எவை? ஏன்?